www.padippakam.com

மனித உரிமைகள் பற்றிய கல்விக் கையேடு

பஃவ்ரல் இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com

முதல் பிரசுரம்
2002 ஜூலை

தொகுப்பு
சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவ

திட்ட மேற்பார்வை
கிங்ஸ்லி றொட்றிகோ

திட்ட இணைப்பாளர்
வசந்த புஸ்பகுமார

அட்டைச் சித்திரம்
இந்திரஜித் வாவலகே

வெளியீடு
பஃவ்ரல் இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com

R. SUTHANI

அறிமுகம்

மனித உரிமைகள் இன்று சர்வ உலகத்திற்கும் தேவையான ஒரு முக்கியமான விடயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதை ஆசிரியர்கள், மாணவர்கள், இளம் வயதினர், வயது வந்தவர்கள், படிப்பறிவுள்ளவர்கள், படிப்பறிவில்லாதவர்கள், இவர்கள் யாவராலும் தெரிந்து விளங்கிக் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். இன்று உலகில் தோன்றியுள்ள பிரச்சனைகளில் பெரும் பான்மையானவை மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிக்காததால் ஏற்பட்டவை என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம்.

மனித உரிமைகளை செயற்பாடுகள் மூலமே யாருக்கும் அறியவேண்டி வருகிறது. வாழ்க்கையில் பொது செயன்முறைகளில் ஈடுபடும் போது அறிய வரும் மனித உரிமைகள் பற்றிய அறிவு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். மற்றையவர்களின் மதிப்பைப் பெறவும் அவர்களுக்குரிய மதிப்பை அளிக்கவும் ஒவ்வொருவரும் மனித உரிமைகளைப் பற்றிய அறிவைத் தெரிந்து கொள்வதும் அவற்றை செயன்முறைகளில் பாவனைக்கு கொண்டு வருவதும் சகலருக்கும் உகந்த பணியாகும்.

மனித உரிமைகள் பற்றிய முதலாவது அறிவை தனது வீட்டிலேயே யாவருக்கும் கற்கவேண்டியுள்ளது. அதன் பின்னர், மிகுதியை பாடசாலையிலும் சமுதாயத்தில் இயங்குவதன் மூலமும் கற்றுக் கொள்கிறார்கள். தனது சொந்த இல்லத்தில் மனித உரிமைகளை மதிக்காதவர்தான் சமுதாயத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறார்.

இந்தக் கையேட்டை ஆழ்ந்து வாசிப்பதன் மூலம் தமது மனித உரிமைகள் பற்றிய அறிவை எவரும் வளர்த்துக் கொள்ளலாம். மனித உரிமைகள் பற்றிய விடயங்கள் பலவும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. அவற்றில் சில விடயங்கள் மாணவருக்கு பொருத்தமான அறிவைத் தருவதற்காக விபரமாக விளக்கப் பட்டுள்ளது.

சகல பாடசாலைகளிலும் மனித உரிமைகளை கற்பிப்பதற்கான வழிவகை-களையும் அவற்றை வாழ்க்கையில் செயற்படுத்துவதற்கான ஒழுங்குகளையும் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். நிர்வாகத்திலும் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிப்பதுஎப்படி என்பதைப்பற்றி தீவிரமாக கலந்துரையாடி பரீட்சிக்கவேண்டும்.

இந்தப் புத்தகத்தை வெளியிடுவது நாடு முழுவதிலும் மனித உரிமைகளைப்பற்றிய அறிவைப் புகட்டுவதற்கான உணர்வை வளர்ப்பதற்கேயாகும்.

பஃவ்ரல் இயக்கம்

2002 - ஜூலை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அடக்கம்

1.	நவீன மனித உரிமைகள் உலகமயமாதலின் பின்னணியில் காணக்கூடியதாக இருக்கும் சமூக வரலாற்று எழுச்சி	1 - 12
2.	ஐக்கிய நாடுகள் சபை (UNO)	13 - 15
3.	ஐக்கிய நாடுகளின் சாசனம்	15 - 16
4.	சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்	17 - 24
5.	அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உள்நாட்டு சர்வதேச மாற்று நடவடிக்கைகள்.	25 - 29
7.	உத்தேச புதிய அரசியல் யாப்பில் சொல்லப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்.(உத்தேச யாப்பில் குறிப்பிடப்பட்டள்ள சரத்து இலக்கங்களுடன் தரப்பட்டுள்ளது)	30 - 32
8.	சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் (சுருக்கமாக)	33 - 35
9.	பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும்இல்லாதொழிப்பது பற்றிய உடன்பாடு.	36 - 42
10.	சிறுவர் உரிமைகள்	43 - 48
11.	சிறுவர் உரிமைகள் பட்டயமும், சமூகமும்	49 - 51
12.	சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?	52
13.	தொழிலாளர் உரிமைகள்	53 - 55
14.	சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)	56
15.	மனிதாபிமானச் சட்டம் (Humanitarian Law)	57 - 58
16.	பிற்சேர்க்கை - 1	59 - 60
17.	பிற்சேர்க்கை - 2	61 - 84
18.	பிற்சேர்க்கை - 3	85 - 97

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

நவீன மனித உரிமைகள் உலகமயமாதலின் பின்னணியில் காணக்கூடியதாக இருக்கும் சமூக வரலாற்று எழுச்சி

1. அடிமைகளின் புரட்சி

மானுட வரலாற்றின் ஆரம்ப யுகத்தில் இருந்தே அடிமை முறைமை நிலவியது. யுத்தத்தில் வென்றவர்கள் தோற்றவர்களை அடிமைகளாகப் பிடித்துச் சென்றனர். அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டவர்கள் பல்வேறு தொழில்கள் செய்யப்பணிக்கப்பட்டனர். அவர்களின் வாழ்வு ,மரணம் என்பவற்றைக்கூட உரிமையாளனே தீர்மானித்தான். புராதன உரோம சாம்ராஜ்யமானது பாமுடையதாக வளர்ச்சியடைந்தது இவ்வாறேயாகும். அடிமைகள் மீது செலுத்தப்பட்ட கொடூரமான நடைமுறைக்கு எதிராக முதன் முதலாக ஒரு போராட்டத்தை நடத்தியவன் திரேசியன் அடிமை ஸ்பார்டகஸ் என்பவனாவான். அடிமைத் தளைகளுக்கு எதிராக முதலாவதாக கருத்துப் பரவியதும் அப்போராட்டத்தின் பின்னரேயாகும். அவன் பலமுறை மிகப் பலம்பாவாய்ந்த உரோம ராஜ்யத்தை அதிரவைத்தான். இறுதியில் தோல்வியடைந்தானாயினும், அது மனித வரலாற்றின் சுதந்திரப் போராட்டத்தின் நினைவுச் சின்னமாகும்.

இது நடந்தது கி.மு. 73இல் ஆகும்.

உரோம ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் அவ் உரிமைகளார்களால் மேற்கொள்ளப்பட்ட கொடிய உழைப்புச் சுரண்டல்களுக்கும் அநீதிக்கும் ஒடுக்கு முறைக்கும் எதிராக மூன்று முறை கிளர்ச்சி செய்தார்கள். ஸ்பார்டகஸ்ஸின் திறன்மிகு தலைமைத்துவத்தின் கீழ் அடிமைகள் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக உரோம ஏகாதிபதியத்திற்கு எதிராக பாரிய தாக்குதல்களை தொடுத்தார்கள்.

உரோம தேசத்து மக்களிடையே பெற்றிஷியன் ப்லீபியன் என இரு வகைப்பட்டோர் வாழ்ந்தனர். அவர்களின் இரு கவுன்சிலர்கள் நாட்டை ஆட்சி செய்தனர். ஒரு செனற் சபைக் கூடாகவே அவர்களின் ஆட்சிக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த நாட்டு மக்களுக்கு நல்ல வாழ் நிலைமையும், சுதந்திரமும் இருந்தன. ஆனால், அடிமைகளின் உழைப்பையும், அவர்களே சுரண்டிக்கொண்டதால் மூன்றாதரப் பிரஜைகளான அடிமைகளுக்கு சுதந்திரமும், நல்ல வாழ்நிலைமையும் இருக்கவில்லை. இதனால், சுதந்திரத்தை அனுபவித்த உரோமமக்கள் சோம்பேறிகளாகவும், உடல் கொழுத்த மனிதர்களாகவும், இருந்தனர். உண்டு, குடித்து மகிழ்வதே அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. அவர்களுக்கு மிக விருப்பமான பொழுது போக்காக இருந்தது. க்லெஸ்டர்களின் சண்டைகளை கண்டு களிப்பதாகும். க்லெடிஸ்டர்கள் என்றால் அடிமைகள் ஆகும். அவர்களுக்கிடையே நல்ல உடற் கட்டுள்ள அடிமைகளைத் தேர்ந்தெடுத்து சண்டைப்பயிற்சி அளித்து இருவர் இருவராக சண்டையில் ஈடுபடுத்தப்படுவர். அக்கொடூர சண்டையில் ஒருவர் இறந்து போவார். மிகவும் பேரானந்தம் தரும் நிகழ்வாக இருந்தது. இரத்தம் பெருக்கெடுக்க அவ்வாறு இறந்து போகும் காட்சியானது அக்கால உரோமர்களுக்கு மிகவும் பேரானந்தம்.

இசசசண்டையானது பெருந்தொகைப்பணம் புரட்டும் ஒரு வழியாகும். ஒரு நாள் 25,000 டினார்களைக் கொடுத்த உரோம நாட்டு குமாரர்கள் இருவர் கண்டு களிப்பதற்காக ஒரு சண்டை ஒழுங்கு செய்யபபட்டது. நான்கு கிளடிஸ்டர்கள் அதில் பங்கு பற்றினர். த்ரேசியன் இனத்தவரான ஸ்பார்டகள் நீக்ரோ அடிமையொருவன், யூத அடிமையொருவன், இன்னும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அடிமையொருவன் என நான்கு பேர் இரண்டு சண்டைகள் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது. முதலாவது யூத அடிமையும், மற்றொருவனும் சண்டை செய்யப்பட பணிக்கப்பட்டனர். ஒருவன் தோற்றுப்போனான். தோற்றுப்போனவனை யூதன் குத்திக் கொல்லுவதற்கு மறுப்புத் தெரிவித்தான். அடிமைகள் புரட்சியின் முதலாவது தீப்பொறி அதுவாகும். இரண்டாவது சண்டை ஸ்பாட்டகசுக்கும் நீக்ரோவுக்கும் இடையே

நடைபெற்றது. சண்டை தொடங்குவதற்கு சமிஞ்சை கொடுக்கப்பட்டவுடனேயே நீக்ரோ அடிமையானவன் அவ்விரு குமாரர்கள் இருந்த இடத்திற்கு பாய்ந்து சென்று அவர்கள் இருவரையும் கொன்று போட்டான். இத்துடன் புரட்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. அங்கு நின்ற காவலர்கள் நீக்ரோ அடிமையை தாக்கி கொலை செய்தனர். பின்னர் அங்கிருந்த கிளெடிஸ்டர்களும் ஏனைய அடிமைகளும் சேர்ந்து காவலுக்கிருந்தவர்களை காவலாளிகளை தாக்கி அழித்தனர். ஆயிரக்கணக்கில் தப்பிச் சென்ற அவ்வடிமைகள் வியூலியஸ் என்னும் மலையில் முகாமிட்டனர். ஒரு இலட்சம் அடிமைகள் மட்டில் அங்கு சேர்ந்தனர். உரோம அரசின் திறன் மிக்க தளபதிகள் கூட அவர்கள் முன் தோற்றுப்போயினர். இரு உரோம ஜெனரல்களை கைது செய்த ஸ்பாட்டகஸ் அவர்கள் இருவரையும் கிளாடிஸ்டர்கள் போல் சண்டையிடும்படி கூறினான். எவ்வாறாயினும் மானிட விடுதலைக்காக அழியாத ஒரு பெயரை பொறித்த அந்த அடிமைகள் படை உரோம அரசின் பெரும் படையின் முன்னால் இறுதியில் தோல்விகண்டது.

2. மெக்னா கார்ட்டா என்னும் மாபெரும் சாசனம்

இங்கிலாந்தில் 1215இல் ஆட்சி செய்த ஜோன் மன்னன் மோசமான கொடிய ஆட்சியாளனாவான். இருப்பினும் அவன் மோசமானவனாகாது நல்ல மன்னனாயிருந்தால் மாபெரும் சாசனம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கும் அவனுடைய தீய நடவடிக்கைகளால் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து பிரபுக்களின் அதிருப்தியையும் அவன் பெற்றிருந்தான். அக்கால கட்டத்தில் நிலப்பிரபுத்துவ ஆட்சியே நடைபெற்றது. திருச்சபையுடன் ஏற்பட்ட மோதலினால் மதகுருமார்களின் உதாசீனத்திற்கும் உள்ளானான். ஒரு கூலிப்படையை வைத்துக்கொண்டே நாட்டை ஆட்சி செய்தான். அவனுக்கு எதிரான பிரபுக்களை நாட்டை விட்டு ஓடச்செய்தான். தன் மனைவி பிள்ளைகளைக்கூட பட்டினியால் இறந்து போகும்வரை சிறையில் அடைத்து வைத்தான். பணக்காரன், ஏழை என எவருக்குமே பாதுகாப்பற்ற ஒரு நிலையை உருவாக்கினான். மன்னருக்கும் கூட பல்வேறு திசைகளில் இருந்து ஆபத்துக்கள் வந்தன. பாப் அரசனுடன் பின்னர் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் பயனாக இங்கிலாந்தை பாப் அரசரிடம் ஒப்படைத்தான். இங்கிலாந்தில் எந்த ஒரு மன்னரும் அவ்வளவு கீழ்த்தரத்திற்கு வீழ்ந்தது கிடையாது. அவன் விதித்த வரிச்சுமையினால் மக்கள் கொதிப்படைந்தனர்.

15 வருடங்களின் பின்னர் அவனுக்கு நண்பர்கள் கூட எவரும் கிடையாது. எல்லோராலும் வெறுக்கப்பட்டான். இறுதியில் அரசுக்கு எதிராக ஆச் பிஷப்பின் தலைமையில் ஒரு படைகூட கட்டப்பட்டது. ஜோன் மன்னன் பீதியடைந்தான். இறுதியாக மதகுருமார்கள் இணைந்து தயார்செய்த ஒரு சாசனத்தில் ஜோன் மன்னர் கையொப்பமிட நேர்ந்தது. அப்போது அச்சாசனத்தில் இருந்ததைப் படிப்பதற்கு எழுத்தறிவுடையோர் மிகக் குறைவாகவே இருந்தனர். மன்னராலும் எழுத வாசிக்க தெரியாது. ஆச் பிஷப் அவர்கள் அதை அவனிடம் கொடுத்தபோது அதனில் கையொப்பம் இடுவதைத் தவிர அவரால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. இறுதியாக அரச முத்திரையிட்டு ஒப்பமிட்டுக் கொடுத்தான். அம்மாபெரும் சாசனத்தில் 63 சரத்துக்கள் அடங்கியிருந்தாலும் இன்னும் எமக்கு முக்கியமாகப் படுவது சுதந்திரத்திற்கான அத்திவாரமாக அமைந்த ஒரு சரத்தாகும்.

''நாட்டின் சட்டத்திற்கு அல்லது நீதியரசர்களினது தீர்ப்புக்களுக்கு மாறாக எந்த ஒரு சுதந்திரமான குடிமகனையும் கைது செய்யவோ, சிறையில் அடைத்து வைக்கவோ கூடாது என்பதாகும்"

இருப்பினும் பின்னர் அவர் அந்த உத்தரவாதத்தை மீறி மோசமாக செயற்பட்டான். அதனால் அவனது இறுதிக்கட்டத்தையும் அடைந்து விட்டான். எவ்வாறாயினும் எமது அரசியல் யாப்புச் சட்டத்தின் 13(1)ம் 13(2) என்னும் சரத்துக்களின் தொடக்கம் இந்த மாபெரும் சாசனமேயாகும்.

3. ஆங்கிலப் புரட்சி (1628 - 1658)

17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு இங்கிலாந்தின் பொதுமக்களுக்கு தமது உரிமைகள் பற்றிய ஒரு பருமட்டான அறிவு கிடைத்தது. இனிமேலும் தாம் ஆட்சியாளர்களிற்கோ மதத்தலைவர்களிற்கோ

www.padippakam.com

கூலிக்கு மாரடிக்கும் பிராணிகள் அல்லர் என்பதை புரியவைப்பதற்கு அவர்கள் ஒன்றிணைந்தனர். அரசாட்சியில் ஏதோ பங்கு தமக்கும் இருக்க வேண்டும் என்று அவர்கள் உறுதியாக வெளிப்படுத்தினர். 1215இன் மாபெரும் சாசனத்துடன் இங்கிலாந்து பாராளுமன்ற ஆட்சியை நோக்கி நகர்ந்தது. அதிலிருந்து மன்னர்களின் அரசாட்சிக்காக அவர்களுக்கிருந்த ''புனிதமான உரிமை'' பற்றியும், ஆதிக்கம் பற்றியும் பல சவால்கள் விடுக்கப்பட்டன. அவை நிலப்பிரபுத்துவ அதிபதிகளினாலும், மதத் தலைவர்களினாலும் ஆரம்பிக்கப்பட்டாலும் தொடர்ந்தும் நிலவி வந்தது. 1628 ஒலிவர் குறொம்வெல் என்னும் விவசாயியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப்புரட்சியானது இரண்டு விடயங்களில் முக்கியத்துவப்படுகின்றது. அதானல் அரசின் மன்னரின் ஏகபோகம் முடிவுக்கு கொண்டுவரப்படுகின்றது. மற்றையது அவ்வாறான அரச அதிகாரத்திற்கு எதிராக எழுந்த ஒரு போராட்டம் பொது மக்களிடையே இருந்து தொடுக்கப்பட்டதாகும். குறொம்வெல் முன்னெடுத்த விவசாயப் புரட்சியே சிவில் ஆட்சி என்னும் கருத்திற்கு முன்னோடியாக அமைந்தது. அக்காலத்தில் மத ரீதியான மோதல்களும் அதிகமாக இருந்தன. ஒரு புறம் சீர்திருத்தம் பற்றி கவனமெடுக்கும் மக்களும், மறுபுறம் இருக்கும் நிலைமையின் கீழ் தமக்கு நலன்களை பெற்றுக்கொள்ளும் மக்களும் இருந்தனர். இறுதியில் விவசாயிகள் வெற்றிபெற்றனர். அவர்கள் சுதந்திரத்ரைதப் பெற்றுக்கொண்டனர். எப்படியாயினும் இறுதியில் குறொம்வெல்லின் ஆட்சியும் இராணுவ மேலாதிக்கத்தால் சீரழியத் தொடங்கியது. எவ்வாறாயினும், பின்னர் தோன்றிய பாராளுமன்ற முறைக்கு அத்திவாரம் இடப்பட்டது அதிலிருந்துதான்.

அவ்விவசாயப் புரட்சியின் பின்னணியாக, அக்காலகட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான உற்பத்தியும், புதிய சிந்தனைகளும் அமைந்திருந்தன.கொபர்னிகஸ், டெஸ்காட்ஸ், கலீலியோ என்னும் சிந்தனையாளர்களின் சிந்தனைகள் சமூகத்தை வெகுவாகப் பாதித்தன. மதரீதியான ஏற்றுக்கொள்ளல்கள், அறிவுச் சுதந்திரம் என்பவைபற்றி அதிகம் பேசப்பட்டன. அரசனினதும், மதகுருமார்களினதும் அதிகாரங்களைப் பற்றி கேள்வி கேட்பதில் அதிகம்பேர் முன்வந்தனர். குறொம்வெல்லின் ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்னும் மக்கள் ஓரணியில் திரண்டனர். அத்துடன் முதலாவது சாள்ஸ் மன்னனின் இராணுவம் ஆயுதரீதியான மோதலில் தோல்வி கண்டது. மன்னரின் ஆட்சி முதல் முறையாக அத்துடன் முடிவடைந்தது. ஆனால், அது மீண்டும் வளர்ந்தது. எவ்வாறாயினும் பெண்களின் விடுதலைக்காகவும், அடிமை முறைக்கெதிராகவும், பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அடிப்படைகள் போடப்பட்டது அவ் ஆங்கில சமூகத்தில் ஏற்பட்ட சலன நிலைமைகளினாலேயே.

குறொம்வெல் பின்னர் இராணுவ ஆட்சியினால் தோற்றுப்போனாலும், அவன் உட்பட பொதுமக்கள் மேற்கத்தைய பாராளுமன்ற முறையினதுதும், பொது மக்களின் சுதந்திரத்தினதும் ஆரம்பகர்த்தாக்காளாயினர்.

4. ஒளிமயமான புரட்சி (1688 - 1689) (புடழசழைரன சுநளழடரவழைெ)

புதிய கருத்துக்களின் பரம்பலுடன் புதிய கண்டுபிடிப்புக்களும் பரவலாகின. பரம்பரை ரீதியாக ஆட்சியதிகாரம் கிடைப்பதென்பதும், இல்லாமல் போனது அரசன் பாராளுமன்றத்திற்கூடாகாவே தேர்ந்தெடுக்கப்பட்டான். 1876இல் நியூட்டனின் பிறின்கிபியா என்னும் நூல் வெளியிடப்பட்டது. புவியீர்ப்பு சக்தியை கண்டுபிடித்ததுடன் விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புகள் அதிகரித்தன. யுகத்தின் மிகச் சிறந்த காலகட்டமாகவும், மிக இருண்ட காலகட்டமாகவும் இருந்த அக்காலம் புறொட்டஸ்தாந்து கத்தோலிக்க மோதல் தொடர்ந்து நடைபெற்ற காலமாகும்.

இறுதியாக இங்கிலாந்து அடிக்கடி முன்வைக்கப்பட்ட யாப்புரீதியான பாராளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டிருந்தது. இருப்பினும் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளாக அமைந்தோர் நிலப்பிரபுக்களே. இவ்வாறு பாராளுமன்ற அதிகாரம் உறுதிப்படுத்தப்பட்டதோடு இங்கிலாந்து தனது வியாபாரத்தையும் கடற் பயணச் செயற்பாட்டையும் வியாபித்தது. வியாபாரிகள் பெருமளவு இலாபத்தைக் குறித்துக் கொண்டனர். இந்நடவடிக்கையின்போது முக்கியமாகப் பாவிக்கப்பட்ட முறையாதெனில், பிரித்தானியா பிடித்து ஆக்கிரமித்திருந்த நாடுகளில் இருந்து மூலப் பொருட்களை கொணர்ந்து நாட்டில் தயாரித்து

படிப்பகம்

முடித்த பொருட்களை மீண்டு தமது காலணித்துவ நாடுகளுக்கே விற்பதன் மூலமாகும். அப்பெருந்தொகைப் பணத்தோடு அவர்களின் கல்வி, மொழி, கலாசாரம் என்பவை பரந்தன. அவ்வாறு குவித்த நிதி மீண்டும் விவசாய உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டன. எமது நாட்டிலும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஆரம்பம் இதுவாகும். இவ்வாறு குவிக்கப்பட்ட பெருந்தொகை நிதியினால், புதிய தொழில் நுட்ப உற்பத்திகளும் பெருகின. அது தொழில் நுட்ப புரட்சிக்கு வழிவகுத்தது. எவ்வாறாயினும், அவர்களின் நாட்டில் எல்லாம் கொழித்தது. எமது நாட்டில் ஏற்பட்ட நிதி மற்றும் உழைப்புச் சுரண்டலினாலேயே சுதந்திரத்திற்காக எமது நாடுகளில் போராட்டங்கள் ஆரம்பமானதும் இக்கால கட்டங்களிலேயே. அது மட்டுமன்றி அதனால் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கும் பிரஞ்சுப் புரட்சிக்கும் தேவையான பின்புலம் அமைக்கப்பெற்றது.

5. அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் (1763 – 1982)

16ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய உலகமயமாக்கல் (புடழிடியடணையவழைெ) 17வது நூற்றாண்டின்போது ஐரோப்பாவின் பலமான ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றது. சூரியன் மறையாத ஏகாதிபத்தியமாக அது இருந்ததற்கு காரணம் உலகெங்கும் காலனித்துவ ஆட்சிகள் இருந்தமையே இவ் ஏகாதிபத்தியற்கு எதிரான முதல் போராட்டமானது அவர்களால் பெற்ற 13 கொலனிகளில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது. அக்கொலனிகளில் குடியேற்றப்பட்ட பிரித்தானியர்களே இருந்தனர். ‘‘தம்மீது வரி விதிப்புச் செய்வதற்கு பிரித்தானியா அரசுக்கு என்ன உரிமை உண்டு என்பதன் அடிப்படையிலேயே அவர்கள் எதிர்க்க ஆரம்பித்தனர். அப்போராட்டத்தின் தலைமை ஜோர்ஜ் வொஷிங்டன் என்பவரிடம் வழங்கப்பட்டதுடன், சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்தவர் தோமஸ் ஜெபர்சன் ஆவார். இப்போராட்டமானது 1775இல் இருந்து 1781 வரை நடைபெற்றது. இதேவேளை சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரான்ஸ், ஸ்பானியா போன்ற நாடுகளும் அமெரிக்காவிற்கு உதவியாக இருந்தன. பிரித்தானிய அரசு தோல்வி கண்டது. அது ஏகாதிபத்தியத்திற்கும், காலனித்துவத்திற்குதம் எதிரான முதலாவது தோல்வியாக அமைந்தது.

வியாபாரத்தில் பிரான்ஸ், ஸ்பானியா, ஒல்லாந்து, போர்த்துகல் ஆகிய நாடுகளையும் தாண்டிச்சென்று அமெரிக்காவில் 13 கொலணிகளில் மக்களை குடியேற்றிய பிரித்தானியா, அவர்களை 3000 மைல்களுக்கு அப்பால் லண்டனில் இருந்த வண்ணம் ஆட்சிசெய்தனர். அக்கொலனி மக்கள் தமக்கென வேறு ஒரு கலாசாரத் தனித்துவத்தையும் கொண்டு இயங்க ஆரம்பித்துவிட்டனர். அக்கொலனிகள் 6 தலைமுறைகளாக பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு கீழ்ப்பட்டு இருந்தன. 1763-65க்க இடையே அமெரிக்க கொலனிகளை ஆட்சிசெய்த பிரித்தானியா இராணுவத்தின் செலவுகளுக்கு கொலனிகளில் இருந்தே வரி அறவிடுவது என தீர்மானிக்கப்பட்டது. கரும்புத் தோட்டச் சட்டம் (1764), முத்திரைச் சட்டம் (1765) என்பவை போடப்பட்டன. இவற்றில் மிகவும் மோசமான சட்டமாக இருந்தது பிரித்தானிய படையினருக்கு எந்த ஒரு உணவுக் கடையிலும் இலவசமாக உண்ணலாம் என போடப்பட்ட சட்டமேயாகும்.

எந்த ஒரு பிரதிநிதியும் இல்லாமலே பிரித்தானியா ,அமெரிக்காவை ஆளுவது பற்றியதற்கு எதிராக அமெரிக்காவை தமது ஆட்சியின் கீழ் எடுப்பதற்கு பிரித்தானியா இராணுவத்திற்கு எதிராக அமெரிக்கா போராடியது. 1766இல் முத்திரரைச் சட்டம் நீக்கப்பட்டது. 1768ல் பிரித்தானியா படையினருக்கு பொஸ்டனில் தங்குவதற்கு இடம் தர அமெரிக்கர்கள் மறுத்தனர். ஆங்காங்கே சண்டைகள் நடக்க ஆரம்பித்தன. பிரித்தானியாவில் தேயிலை இறக்குமதி எதிர்க்கப்பட்டது. மனிதர்கள் பிரித்தானியா கப்பல்களில் ஏறி தேயிலைப் பெட்டிகளை கடலில் போட்டனர். இது ‘‘போஸ்டன் தேநீர் விருந்து” என அழைக்கப்பட்டது.

பின்னர் ஏற்பட்ட பல்வேறு மோதல்களினால் அமெரிக்காவை விட்டு பிரித்தானியா வெளியேற வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டது. இச்சண்டைகளில் பிரான்ஸ், ஸ்பானியா போன்ற நாடுகளும் அமெரிக்காவிற்கு உதவின. பிரித்தானியாவிற்கு சகல பக்கங்களிலிருந்தும் அடிகள் விழுந்தன.

www.padippakam.com

1776இல் அமெரிக்க சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் சுதந்திரம் வேறு பல புரட்சிகளுக்கும் வழிவகுத்தது.

6. பிரெஞ்சுப் புரட்சி (1789 – 1794)

உலக வரலாற்றில் மாபெரும் நிகழ்வாக நடந்தேறிய பிரெஞ்சுப் புரட்சியானது நடந்தேறியதோடு அமெரிக்க போராட்டத்தின் பெறுமதிகளும் மறைந்து போயின. ஆனால், இன்னும் மோசமான கொடூரமான ஆட்சிகளின் கீழ் உள்ள மக்கள் சுதந்திரத்தை தேடியலையும் நசுக்கப்பட்ட மக்கள் பிரெஞ்சுப் புரட்சியால் புத்தூக்கம் பெறுகின்றனர். பிரெஞ்சுப் புரட்சியின் சுலோகம் இப்போதும் பொருத்தமானதே. ''சுதந்திரம் சமத்துவம் மற்றும் சகோதரத்துவம்'' என்னும் சுலோகம் இன்னும் பொருளாதாரச் சுரண்டலுக்கு, அரசியல் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுபவர்களின் பிரதான கோசமாகயிருக்கிறது. ஏகாதிபத்திய ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர், ''சகல மனிதர்களும் பிறப்பாலேயே சமனானவர்கள்'' என்னும் அடிப்படையில் அரசு உருவாக்கப்படவேண்டும் என்றும் கருதப்பட்டது. பின்னர் அப்புரட்சியின் நோக்கங்கள் சிதறி கொடிய ஆட்சி ஏற்பட்டதாயினும், அது உலகில் பல்வேறு சுதந்திரப் போராட்டங்களுக்கு பெரும் ஊக்கமாக அமைந்தது.

18ம் நூற்றாண்டு அளவில் மன்னராட்சி முறைகளுக்கும், மதகுருமார்களுக்கும் அதிக தாக்குதல்கள் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவ சுமையானது எந்த ஒரு விவசாயியாலும் சுமக்க முடியாதளவு அதிகரித்திருந்தது. நிலங்கள் பறிபோதல், வரிச்சுமை, மற்றும் பஞ்சம் என்பவற்றாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இக்கட்டத்தை அடைகின்றபொழுது கல்விமான்கள், எழுத்தாளர்கள், என்பவுருக்கிடையே மனித உரிமைகள் பற்றி பல்வேறு கருத்துக்கள் தோன்றியிருந்தன. பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிப் பேசும்போது அதிகமாக சொல்லப்படுவது ''பஸ்டீலுக்குத்'' தாக்கியது என்பதைப்பற்றியேயாகும். ஆனாலும், அச்சம்பவத்தினால் நீண்டகாலமாக நிலப்பிரப்புத்துவ - கல்விமான்கள் - சாதாரண மக்கள் எனபவருக்கிடையே நிலவிய உரிமைகள் பற்றிய கொடுக்கல் வாங்கல் முடிவுக்கு வந்தது.

1789 ஒக் 6-7ம் திகதிகளில் வர்சயில்ஸ் மாளிகையின் முன்னால் பாரிஸ் நகரமெங்கும் பட்டினிப் பேரணிகள் ''பாண் தா'' என்று கோசமிட்ட வண்ணம் சென்றனர். அதில் பெரும்பாலும் பெண்களே சென்றனர். அப்பொது மேரி அன்றனொயட் என்னும் அரசி'' பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடலாம்'' தானே எனக்கூறியதும் இவ்விடத்திலேதான்.

அரசியல் யாப்பொன்று உருவாக்கபட்டது மன்னர் தன்சுய விருப்பின் அடிப்படையில் யுத்தத்தையோ சமாதானத்தையோ ஏற்படுத்த முடியவில்லை. மந்திரி சபையில் இரு குழுக்கள் இருந்தன. ரொபஸ்பியரி என்பவரின் கீழ் இருந்த ஜக்கோப்பியர்கள் பலமானவர்களாக இருந்தனர். அவ் அரசியல் யாப்பிற் கிணங்க ''மனிதர்களின் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய ஒரு சாசனம்'' வெளியிட வேண்டியிருந்தது. அமெரிக்க சுதந்திர சாசனத்தையும் தாண்டிச் சென்று 'சமூக உரிமைகள்' என்பன பற்றிக் கூட அங்கு குறிப்பிடப்பட்டது. சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பன அதில் முக்கியமானவையாகின. யாப்பில் ரீதியான நிறைவேற்றதிகார, மற்றும் சட்டத்துறை என்பவற்றின் அதிகாரங்கள் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டன. இங்கிலாந்து அமெரிக்கா போன்றே பிரான்ஸ்சும் பாராளுமன்ற முறைக்குச் சென்றது. கூட்டாச்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆயினும், அவ்வாட்சியும் கூட பல்வேறு வரிவிதிப்புகளை செய்ய ஆரம்பித்ததால் நிலைமை அராஜகமாகி புரட்சிக ஆட்சி கொடூர ஆட்சியாக மாறியது. இறுதியில் தான் பாவித்த 'கிலடீன்' இனாலேயே ரொபஸ்பியரி மரணிக்க நேர்ந்தது.

7. கிரேக்க புரட்சி (1821–1830)

ஐரோப்பிய அரசியல் புரட்சிகளுக்கான கருத்தியல்கள் கிரீஸ் இல் இருந்தே தோன்றின. கிரீஸில் அறிவுரீதியான ஒரு எழுச்சி ஏற்பட்டது. முழு ஐரோப்பாவிற்கே வாய்ப்பாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com

இக்காலகட்டத்தில் நெப்போலியனின் வழிகாட்டலில் பிரான்ஸ் பல நாடுகளை கைப்பற்றியிருந்தது. ஸ்பானிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருந்த லத்தீன் அமெரிக்க நாடுகளும் ஸ்பானிய பலவீனம் அடைந்தபோது சுதந்திர போராட்டத்திற்கு தூண்டப்பட்டன.

துருக்கிய ஏகாதிபத்தியமானது தென்கிழக்கு ஐரோப்பா, மத்திய கீழக்குவரை பரவியிருந்தது. சொக்ரடீஸ், அரிஸ்டோட்டல், ப்ளேட்டோ, ஆக்கிமீடிஸ் ஆகியோரின் சிந்தனைகளினால், கமிபீரமடைந்திருந்த கிரேக்க இளைஞர்கள், இவ் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்து நின்றனர். பல போராட்டங்களின் பின் கிரேக்கம் சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. கிரீஸ் பாராளுமன்ற முறையிலேயே ஆளப்பட்டது. 5 பேர் அடங்கிய நிறைவேற்றதிகார குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

8. இலத்தீன் அமெரிக்கப் புரட்சி

ஸ்பானிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியோடு அதற்கு அடிமைப்பட்டிருந்த நாடுகள் ஒவ்வொன்றாக சுதந்திரமடைய ஆரம்பித்தன. அமெரிக்க சுதந்திரப் போராட்டம் அதற்கு மிக அதிகமான பாதிப்பைச் செலுத்தியது. முதலாவது ஆர்ஜன்டினா 1816ல் சென் மார்டீன் தலைமையில் சுதந்திர நாடாகியது. சென் மார்டீன் அச்சுதந்திரப் போராட்டத்தை மேலும் வியாபித்தது. அன்தீஸ் மலைகளுக்கூடாக சீலி நாட்டை விடுவித்துக் கொள்ளவும் உதவினர். ப்ரேடோவின் கீழ் ஸ்பானியாவிற்கு எதிரான சண்டையில் இலத்தீன் அமெரிக்காவின் பாரிய நாடான பிரேசில் சுதந்திரமடைந்தது. அப்போராட்ட அலையின் பெரும் விடுதலை நாயகன் என பெயர் பெற்றசைமன் பொலிவார் இன் கீழ் பொலீவியா சுதந்திரமடைந்தது.

பொலிவார் மிகத்திறமையான தலைவர் ஆவார். புதிய கிறினடா அவரின் கீழ் சுதந்திரமடைந்தது. பொலிவார் தொடர்ந்தும் ஸ்பானிய கொலனிகளை விடுதலை செய்யும் போராட்டத்தை செய்து வெனிசூலாவின் போராட்டத்திற்கு (1821)ம் வழிசமைத்தார். 1828இல் சென் மார்டீன் தலைமையில் பெருநாட்டு மக்கள் அந்நாட்டை மீட்டெடுத்தனர். இவ்வாறு சுதந்திரமடைந்த நாடுகளை 1822இல் அமெரிக்கா ஏற்றுக்கொண்டது.

சைமன் பொலிவார் பொலீவியாவின் ஜனாதிபதியானபோது சகல இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஒன்றாக்குவதற்கு திட்டமொன்றை முன்வைத்தார். அது வெற்றியளிக்கவில்லை. வெற்றியளித்திருந்தால் ஒருவரோடொருவர் மோதி பலவீனப் பட்டுப்போகாமல் இருந்திருக்கலாம்.

9. பெல்ஜியத்தின் விடுதலை (1830-1844)

பிரெஞ்சுப் புரட்சியின் நோக்கங்கள் மறைந்து போனாலும் ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்க எங்கும் புரட்சியின் அலை ஓங்கி வீசியது. நெப்போலியனின் காலத்தில் கூட மக்கள் ஆங்காங்கே தமது சுதந்திரத்திற்காக போராடினர். நெப்போலியன் வீழ்ச்சிக்குப்பின்னர் பிரான்ஸ் இன்னுமொரு புரட்சிக்கு தயாராகியது. பிரெஞ்சு மக்களின் இன்னுமொரு தலைவனாக லூயி பிலிப்பி தோன்றினார். எனினும், 1844இல் கூட்டாட்சி முறைக்கு இடமளித்து விட்டு அவர் ஒதுங்கிக்கொண்டார். இதற்கிடையே அண்டைய நாடான பெல்ஜியத்தில் இன்னுமொரு புரட்சி தோற்றம் பெற்றது. பெல்ஜியம் ஒல்லாந்தின் ஒரு பகுதியாகவே விளங்கியது. பிரான்ஸ் முழுவதும் வேலைசெய்யும் மக்களின் போராட்டங்கள் பரவலாக நடைபெற்றன. உழைப்புச் சுரண்டலை எதிர்த்து ஊர்வலங்கள் வேலைநிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றன. அந்நிலைமை பெல்ஜியத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது. 1830இல் பெல்ஜியம் தன் சுதந்திரத்தை பிரகடனப்படுத்தி ஆட்சியை கையில் எடுத்தது.

ஐரோப்பா முழுவதும் புரட்சி, போராட்டம், எழுச்சி பரவிச் சென்றது. சகல நாடுகளிலும் ஓரளவுக்கேனும் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க நேரிட்டது. தொழில்நுட்பப் புரட்சியில் பல்வேறு விடயங்கள்

படிப்பகம்

கண்டுபிடிக்கப்பட்டன. அநேகமான நாடுகளில் அரசியல் யாப்புக்கள் புதுப்பிக்கப்பட்டன. பெல்செக், புஷ்கின், ஸ்டென்ரேடால், விக்டர் ஹியூகோ போன்ற கலாசார முன்னோடிகள் இந்த யுகத்தில்தான் உருவாக்கினார்கள்.

10. பாரிஸ் கொம்யூன் (1871)

உலகத்தில் முதல் முறையாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்கென ஒரு அரசாங்கத்தை உருவாக்கிக் கொண்டார்கள் என்றால், அது பிரான்சில் பரிஸ் கொம்யூன்தான். ஆனாலும், அது இரண்டு மாதம் அளவிலான மிக குறுகிய காலமே நிலவியது. மிகப்பலமான முதலாளித்துவ நாடுகளின் இராணுவங்களுடன் மோதி பொது மக்கள் தமக்கென ஒரு அரசை உருவாக்கிக் கொள்ள முடியும் என நிருபித்தமை ஒரு முதல் பாடமாகும்.

ஐரோப்பாவின் தொழில்நுட்பப் புரட்சியின் தொழிலாளர் வர்க்கமானது உலகத்தில் ஒரு புதிய சக்தியாக உருவாகியது. மார்க்ஸ் - ஏஞ்சல்ஸ் என்பவர்களின் ''கொம்யூனிஸ அறிக்கை'' வரலாற்றின் மிகப் பெரிய அறிக்கையாக அமைந்தது.

1864இல் இலண்டனில் உழைக்கும் மக்களின் சர்வதேச சங்கம் ஒன்று உருவாகியது. ''ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் சர்வாதிகாரம்'' என்னும் கருத்து மாக்ஸ். எங்கல்ஸ் ஆகிய இருவராலும் முன்வைக்கப்பட்டிருந்தது. 1871இல் உருவான பாரிஸ் கொம்யூன் அக்கருத்தின் வெற்றி தோல்விகளை பரீசித்து பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

குறுகியகால அறவீடு இல்லாதொழிக்கப்பட்டது. அடகு வைக்கப்பட்ட பொருட்கள் ஏலம் விடப்படுதல் கைவிடப்பட்டது. உயர்ந்த சம்பவளங்களுக்கு வரையறை போடப்பட்டன. கோயில்கள் அரசாங்கத்தில் இருந்து பிரிக்கப்பட்டன. கோயில்களுக்கு சொந்தமான பெருந்தொகையான நிலபுலன்கள் மக்கள் மயமாகின. பாடசாலைகளில் மத அனுஷ்டானங்கள் வழிபாடுகள் நிறுத்தப்பட்டன. கிலடீன் தீவைத்துக் கொழுத்தப்பட்டது. தொழிற்சாலை அதிபர்களின் ஆட்சியை தொழிலாளர்கள் கூட்டாக கையேற்றுச் செயற்படுத்தினர். பேக்கரிகளில் இரவு நேர வேலைகள் நிறுத்தப்பட்டன. தொழிலாளர்களை விலை கொடுத்து வாங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டன. உணவுக்கும் மக்களுக்கு அதிகாரம் கிடைக்கும் வகையிலேயே சகலதும் பெற்றது. மதம் ஒவ்வொருவரதும் தனிப்பட்டவிடயமே ஒழிய அரசாங்கத்தின் செயற்பாடு அல்ல என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வனைத்து செயற்பாடுகளாலும் தொழிலாளர் ஆட்சிக்கு பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. எதிரிகள் உருவாகத் தொடங்கினர். நிலப்பிரபுத்துவ வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் சேர்ந்து கொம்யூனிச ஆட்சியை கவிழ்த்து அழித்தனர். ஆனாலும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடமானது ருஷியப் புரட்சிக்கு வழிவகுத்தது.

11. இந்திய விடுதலைப் போராட்டம் (1857-1947)

1757இல் வியாபாரம் செய்வதற்கு ஒரு சிறிய இடம் தாருங்கள் என இந்தியாவிற்குள் நுழைந்த பிரித்தானியர்கள் 1857ம் ஆண்டில் முழு இந்தியாவையும் தமது ஏகாதிபதியத்திற்கு அடிமைப்படுத்திக் கொண்டார்கள். 1857ல் ஏற்பட்ட புரட்சியானது ஒட்டு மொத்தமாக இந்தியாவிலிருந்து ஏகாதிபத்திய வாதிகளை விரட்டிவிடுவற்காக ஏற்பட்டதென்றாலும் அவர்களின் வரலாற்றுப் புத்தகங்களில் அது 'சிப்பாய் கலகம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் அதனால் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. அதுவரை கீழைத்தேய நாடுகளை ஆட்சிசெய்த ''கிழக்கிந்தியக் கம்பனி'' க்குப் பதிலாக கிரீடம் ஆட்சியைக் கைப்பற்றியது.

கிழக்கிந்தியக் கம்பனிகள் வியாபாரத்திற்காக உருவாக்கப்பட்டது. ஆனாலும், இந்தியாவின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்ள அதனால் முடிந்திருந்தது. பல்வேறு அரசர்களும், தமக்குள் முரண்பட்டு மோதிக்கொண்டதனால் அது அவர்களுக்கு இலகுவாகப் போய்விட்டது. பிரித்தானியர்

www.padippakam.com

தமது வழமையான பிரித்தாளும் தந்திரத்தை பாவித்து மிக இலகுவாக இந்திய நாட்டை பிடித்துக் கொண்டனர்.

இந்திய மக்கள் எந்த விதத்திலும் பிரித்தானிய ஆட்சியினை விரும்பவில்லை. எனவே எப்போதும் தொடர்ந்து போராட்டம் நிகழ்ந்தது. அப்போராட்டங்கள் 1857அளவில் மிக உக்கிரம் அடைந்தது. பிரித்தானியாவின் காலனித்துவ சுரண்டல் கொள்கையின்படி இந்தியாவின் மூலப் பொருட்களை கொண்டு செல்வது, பின்னர் தாம் தயாரித்த பொருட்கள் இந்தியாவில் கொணர்ந்து விற்பதன் மூலம் சுதேச தொழில் உற்பத்தி அழிந்து நாட்டில் வறுமை தாண்டவம் ஆடியது. விவசாயம் அழிந்து போனது. பட்டினி, பஞ்சம், தொற்று நோய்கள் அதிகரித்தன. மோதல்கள் அதிகரித்து நாடே ஆபத்துக்குள் தள்ளப்பட்டது. இந்து முஸ்லிம் மக்களின் கலாசார பெறுமானங்களுக்கு பலத்த அடி விழுந்தது. பழக்கவழக்கங்கள், மதம், கல்வி என்பன கிடைக்கப்பெறாமல் போனது. பிரித்தானியருக்கெதிரான இந்திய மக்களின் எழுச்சியை அவர்கள் கலகமாகவே பார்த்தனர். ஆனாலும் அவை சுதந்திரப் போராட்டத்தின் பகுதிகளாகும்.

பிரித்தானியரின் ஆட்சியில் இராணுவத்தில் பணிபுரிந்த சுதேசிய இராணுவ சிப்பாய்களே இக்கலகத்தில் ஈடுபட்டனர். ''வெள்ளைக் காரர்களைக் கொல்'' என்னும் கோஷம் முன்வைக்கப்பட்டது. 5 நாட்களுக்குள் டில்லியை விட்டுப் போக வேண்டிய நிலை பிரித்தானியருக்கு ஏற்பட்டது. இருப்பினும் பின்னர் இந்தியர்களை தோற்கடிக்க பஞ்சாபில் இருந்து பிரித்தானியருக்கு உதவி கிடைத்தது. பயிற்சிபெற்ற ஆங்கில இராணுவத்துடன் பயிற்சி பெறாத இந்திய இராணுவத்துக்கு போராடுவது கடினமாக இருந்தது. அதற்கு மேலாக பிரதேச ரீதியான மன்னர்கள் ஆங்கிலேயருக்கு உதவி செய்தனர். தோல்வியின் பின்னர் ஆயிரக்கணக்கான தேச பக்தர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1858இல் இந்தியா பிரித்தானிய விக்ரோரிய மகாராணியின் ஆட்சியின் கீழ் வந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாம் கட்டம்

இந்திய சுதந்திரப் போர் நின்றுவிடவில்லை. பல்வேறு கிளை ஆறுகள் சேர்ந்து கங்கை, யமுனை ஆறுகள் ஓடியதுபோல் போராட்டமும் பாய்ந்து சென்றது. 1947இல் ஒரு பூரண சுதந்திரமான சுய இராட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ளும் இடம்வரை அது பரவிச் சென்றது. அதற்காக இந்திய தேசிய சங்கம், மகாத்மா காந்தியின் இயக்கம், சுபாஸ் சந்திரு போஸ்ஸின் போராட்டம், வங்களாம், வட இந்தியா போன்றவற்றால் எழுச்சி என்பவனவும் மிக முக்கியமாக பங்களிப்பைச் செய்தன. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு விசேடமான தன்மை யாதெனில் அது ஒரு புறம் அகிம்சை ரீதியானதும், மறுபுறம் (சிவில்) மக்கள் போராட்டங்கள் நிறைந்ததாக இருந்ததுமாகும். இறுதியில் சுதந்திரம் கிடைத்தாலும் சுதந்திரத்தின் பிரதிபலனாக பிளவுபட்ட இந்தியாவே கிடைத்தது.

ஆரிய சமாஜ் (1875) பிரம்மோ சமாஜ் (1865) போன்ற மத ஸ்தாபனங்களினால் மேற்கொள்ளப்பட்ட சுதந்திரப் போராட்டத்துடன் பின்னர் இந்தியச் சங்கம் (1876) பூனா சபா (1876) தேசிய ஒன்றியம் (1883) மதராஸ் மக்கள் சபா (1884) பம்பாய் தலைவர்கள் சங்கம் (1885) புனா கலாசார அமைப்பு என்பனவும் இணைந்து கொண்டன. நூற்றுக்கணக்கான இந்திய மொழிப் பத்திரிகைகள் நாடெங்கும் அச்சிடப்பட்டன. இதனால் அகில இந்திய சங்கம் ஒன்று உருவாகியது. அது பின்னர் இந்திய தேசிய சங்கமாகியது.

பிற்காலத்தில் அதில் இணைந்துகொண்ட மகாத்மா காந்தி விடுதலைப் போராட்டத்தை ஓர் உயர்ந்த இடத்திற்கு எடுத்துச் சென்றார். தேசிய போராட்டத்தினுள்ளேயே ஏற்பட்ட தீவிரவாத போக்குகளினால் முதலில் வங்காளம் பிரிந்து சென்றது. எவ்வாறாயினும், காந்தி ஆரம்பித்த உப்பு வரிக்கு எதிரான போராட்டத்துடன் நாடெங்கும் சிவில் சட்டங்களை மீறும் ஆயுதமேந்தாத போராட்டம் வியாபித்தது. முடியாத கட்டத்தில் இறுதியாக இந்தியாவை 11 துண்டுகளாகப் பிரித்து ஆளுவதற்கு அதிகாரம் வழங்குவதற்கான சட்டமூலம் பிரித்தானியர்களால் கொண்டு வரப்பட்டது. காங்கிரசுக்கு

படிப்பகம்

அப்பிராந்தியங்களுக்குள் அதிக செல்வாக்கு இருந்தாலும் காங்கிரசுக்கும் முஸ்லிம்களின் சங்கத்திற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படவாயின.

12. அக்டோபர் புரட்சி (1917)

பரிஸ் கொம்யூனில் ஆரம்பித்த தீப்பொறி 1917இல் பெரும் தீச்சுவாலையாக கொழுந்து விட்டெரிந்தது ருஷ்யாவிலிலேயே ஆகும். பொல்ஷெவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது முதலாளித்துவ சக்தியாகவோ அல்லது வெளிநாட்டு சக்திகளாகவோ அவர்களை ஆக்கிரமிக்க முடியாத நிலை இருந்தது. விவசாயிகளுக்கு இடம், இராணுவ வீரனுக்கு சமாதானம், மக்களுக்கு பாண் என்னும் கோசங்கள் அப்புரட்சியின் நோக்கங்களின் சாராம்சமாக படுத்தப்பட்டிருந்தன. அந்நிலைமையில் உணவுப் பஞ்சமும் வறுமையும் மிக மோசமாக தாண்டவமாடியது. உழைக்கும் மக்கள் ஆரம்பித்த போராட்டம் 1917 ஒக்டோபரில் முடிவடைந்தது பரிஸ் கம்யூனிஸ் தோல்வி கண்ட பாட்டாளிவர்க்க சர்வாதிகளும் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

20ம் நூற்றாண்டில் முதலாளித்துவம் தலை தூக்கியது. அதற்கு இரு வேறுபட்ட முகங்கள் இருந்தன. ஒன்று முற்போக்கானதாகும் நிலப்பிரபுத்துவத்தின் ஒப்பிடுகையில் முதலாளித்துவம் தனிநபர் சுதந்திரத்தை மதிக்கும் முற்போக்கு முகத்தைக் காட்டுகின்றது. இருப்பினும் உழைப்பைச் சுரண்டாமல் முதலாளித்துவத்தால் வாழமுடியாது. எனவே உழைக்கும் மக்களுக்கு அது ஒடுக்கு முறை முகத்தைக் காட்டுகின்றது. 1917ம் ஆண்டு முதன் முறையாக இம் முதலாளித்துவம் அடக்கப்பட்டது. அது முழு உலகத்தினதும் உழைககுகம் மக்களின் வெற்றியாகியது.

முதல் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்டதால் ருஷியாவிற்கு ஏற்பட்ட விசேட நன்மை என்று எதுவுமேயில்லை. நாடு முழுவதும் அமைதியின்மை நிலவியது. வேலை நிறுத்தம், கிளர்ச்சி, பஞ்சம், என்பது பரவலாக நிகழ்ந்தது. மாபெரும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றன. சார் ஆட்சிக்கு எதிராக முழு மக்களும் அணி திரண்டனர். மன்னருக்கு தேவையான விதத்தில் யுத்தத்தில் ஈடுபட மக்கள் விரும்பவில்லை. “நாம் ஏன் யுத்தம் செய்கின்றோம்” என்பது அவர்களுக்குப் பிரச்சினையாக இருந்தது. நாடு வெளிநாட்டு உதவிகளில் தங்கி நிற்கும் நாடாகியதனால் மக்கள் சொல்லெண்ணா பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

அப்போதிருந்த சமூக ஜனநாயக கட்சி பிளவுபட்டதால் பொல்ஷெவிக், மென்ஷெவிக் என இரு கட்சிகள் தோன்றின. பொல் ஷெவிக்கின் பிரதான நோக்கம் சார் மன்னனின் ஆட்சியை கவிழ்த்து சோசலிச புரட்சயை ஏற்படுத்துவதாகும். அப்போராட்டத்தில் இராணுவச் சிப்பாய்களும், விவசாயிகளும் தொழிலாளர்களும் பெருமளவில் திரண்டனர்.

போராட்டம் வெற்றி கொண்ட பின்னர் விவசாயிகளுக்கு இடம் பகிர்ந்தளிக்கப்பட்டது. முதலில் காணிகள் மக்கள் மயமாக்கப்பட்டன. தனியார் வங்கிக் கணக்குகள் தடைசெய்யபப்பட்ட அதேவேளை வங்கிகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. கோயில்களுக்கென சொந்தமாக இருந்த பெருந்தொகை சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டன. பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. இவ்வரசுக்கெதிராக பல்வேறுவிதமான சதித்திட்டங்களும், வெளிநாட்டு அழுத்தங்களும் ஏற்பட்டாலுடம் கூட கம்யூனிச அரசால் அவையாவையும் தோற்கடிக்கப்பட்டன.

முதலாளித்துவ நாடுகள் இதனைக் கண்டு அதிகம் பயந்தன. பிரித்தானியாவும் பிரான்சும் அதில் முதல் இடம் வகித்தன. அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. ஆனாலும் ருசியா இவை எல்லாவற்றையும் தோற்கடித்து பலமான அரசாக உருவெடுத்தது, மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டதன் மூலமே.

13. சீனாவின் மக்கள் புரட்சி (1919-1949)

ருஷியாப் புரட்சிக்குப் பின் அநேகமான நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் உருப்பெற்றன. இரண்டாம் உலகப் போராட்டத்தின்பின் உலகம் முழுவதிற்கும் ஒரு வித மாற்றம் தேவைப்பட்டது. சீனாவும், இந்தியா, கிரீஸ், ரோம், பிசரோ, மொசப்பொத்தேமியா போன்ற மிக நீண்ட நாகரீகத்தை கொண்ட ஒரு நாடாகும். அதன் பூகோள ரீதியான மற்றும் சமூக நிலைமைகளைக் கணக்கில் எடுத்துப் பார்த்து மா ஓ சேதுங், சௌ என் லாய் சூட்டே போன்ற தலைவர்கள் ஒரு நீண்டகால யுத்தத்தினால் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்கலாம் என எண்ணலாயினர். அப்புரட்சியின் முன்னோடி கம்யூனிஸ்ட் கட்சியே விவசாயிகளும், தொழிலாளர்களும் மக்கள் புரட்சியின் முன்னோடிகளாயினர்.

அக்காலகட்டத்திலும் விவசாயிகளை அடிமைப்படுத்தி வைத்திருந்த கிராமிய மன்னர்கள் இருந்தனர். படிப்படியாக இவ் ஒவ்வொரு பிராந்தியங்களாக கம்யூனிஸ்ட்டுகள் கைப்பற்றினர். 1926இல் இருந்து இது நடை பெற்றது. இதற்கிடையே ஷாங்ஹாய், கென்டன் போன்ற நகரங்களில் தொழிலாளர்கள் போராட்டங்கள் உக்கிரமடைந்தன. 1927இல் தேசிய இராணுவம் நாங்கள் பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொள்ளும்போது பிரித்தானியா, பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, யுத்தக் கப்பல்களினால் அந்நகரங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் தமது பொம்மை ஆட்சியாளனான சியாங்காய் ஷேக்கினூடாகவே இதனைச் செய்தார்கள். புரட்சிகர ஸ்தாபனத்திற்கு உள்ளே இருந்து தாக்குதல் தொடுப்பதற்கு ஷாயங்காய்சேக் பாவிக்கப்பட்டான். அவன் ஏகாதிபத்தியங்களின், ஜமீந்தார்களின், முதலாளிகளின் பிரதிநிதியாகி விட்டான். எத்தனையோ நகரங்களில் அவர்களின் அதிகாரம் பரவியிருந்தது. எனவே போராட்டம் கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு நகரங்களை நோக்கி கொண்டுவரப்பட்டது. கொம்யூனிச செம்படை சீன மலைப்பிரதேசங்களில் இருந்து கெரில்லா போராட்டத்தை நடத்தியது. அப்பிரதேசங்களில் காணிச் சீர்திருத்தங்களைச் செய்து இராணுவ அணிகளை நிறுவி போராட்டத்தை முன்னோக்கி எடுத்துச் சென்றது.

இப்போராட்ட காலத்தில், நிதி சேகரிக்கும் பணி அவ்வவ் பிரதேசங்களில் உற்பத்திகள் செய்தவன் மூலம் செய்யப்பட்டது. அவ்வாறே கட்சி பல்வேறு சமூக விடயங்களில் ஈடுபட்டது. ஒழுக்கக்கோவைகள் கட்சியினால் மிக உறுதியாக கடைபிடிக்கப்பட்டன.

1933இல் சீனாவின் சில பிரிவுகளை கைப்பற்றி உள்நாட்டில் சண்டையிட்டுக் கொண்டிருந்த ஜப்பானுக்கு எதிராக நீண்ட ஒரு போராட்டம் ஆரம்பித்தது.

1945இல் ஒரு புதிய சீனாவை உருவாக்குவதற்கு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. இதேவேளை சோவியத் ருஷ்யா சீனாவில் இருந்த ஜப்பானிய இராணுவத்தை (1945இல் ஆகஸ்ட் 5) வெளியே இருந்து தாக்கியது. சீன மக்கள் செம்படை உள்ளேயிருந்து தாக்கியது. இறுதியில் ஜப்பான் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்த காலகட்டத்தில் சீனாவின் ஒரு பகுதியில் அரை காலனித்துவ முறைமையாகவும் அரைநிலப்பிரபுத்துவ முறையாகவும் ஆட்சி செய்வதற்கான சூழல் காணப்பட்டது. அமெரிக்கா அதனை தனது கொலனியாக்க முயற்சித்தது. அமெரிக்காவுக்கும் சிகாங்காய் ஷேக் இற்கும் எதிராக போராட்டத்தை அதன் பின் ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

1949இல் மக்கள் சீனம் என்னும் கூட்டு அரசாங்கம் ஒன்று அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு புதிய யாப்பொன்று உருவாக்கப்பட்டது. அது ''மக்களின் சர்வாதிகாரமாக அமைய வேண்டும்'' என்று நிலை நிறுத்தப்பட்டது.

www.padippakam.com

14. வியற்நாமியப் புரட்சி (1930-1975)

உலகின் சகல புரட்சிகளிடையே வியற்நாமியப் புரட்சிக்கு தனியான ஒரு கௌரவம் உண்டு. மிகவும் பலம் பொருந்திய இரு ஏகாதிபத்தியங்களான அமெரிக்கா, பிரான்ஸ், ஆகிய இரண்டினதும் அடிமைச் சங்கலிகளை உடைத்தெறிய வியற்நாம் என்னும் இச்சிறு நாடு அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் போராடி வெற்றி பெற்றது. அவர்களின் சுதந்திர வெற்றிக்கு முன்னோடிகளாக ஹொசி மிங்கும் கொம்யூனிசக் கட்சியும் அமைந்திருந்தன.

பல அரசியல் முன்னணிகளின் கூட்டு என்ற வகையில் அவர்கள் அணிதிரண்டு மிகப்பலமாக முகம் கொடுத்தனர். ஹொசி மிங் இவ்வாறு எழுதினார். ''பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் ஜப்பானிய ஏகாதிபத்தியமும், தேசிய விடுதலைகளினதும் உலக புரட்சியினதும் எதிரிகளே..."

போராட்டத்தின் இடை நடுவில் ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமை வடக்கு, தெற்கு என இரண்டாக பிளவுபடுத்தி ஆட்சி செய்தனர். பிரெஞ்சு ஆட்சியாளர்கள் டியன் பியன் பூ என்றும், பலம்பொருந்திய தளத்தை 55 நாட்கள் கடுமையாகப் போராடியதன் பின்னர் தோற்கடித்து புரட்சியின் முக்கிய வெற்றி மைல்கல்லாக அமைந்தது. வட வியற்நாமின் போராட்டத்திற்கு சோவியட் தேசமும், சீனாவும் உதவி செய்ததோடு, தென் வியற்நாமை பிரான்ஸ் கைப்பற்றி வைத்திருப்பதற்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் உதவி வழங்கின. முன்னர் பிரான்ஸ் கைப்பற்றி வைத்திருந்த பகுதிகளை பின்னர் அமெரிக்கா கைப்பற்றி வைத்திருந்தது. அவர்கள் தென் வியற்நாமை தமது கொலனியாக ஆட்சி செய்ததால் அதனை வடவியற்நாமோடு ஐக்கியப்படுத்த இன்னுமொரு போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. அமெரிக்க மிகக் கொடூரமாக வியற்நாமை நசுக்கியது. கிராமம் கிராமமாக அழித்தது.

1975இல் வியட்நாம் என்னும் இரு நாடுகளும் போராட்டத்தின் மூலமே வெற்றி பெற்று ஒரு நாடாகியது. ஏகாதிபக்தியவாதிகளுக்கு இது பாரிய தோல்வியாகியது.

15. கியூபாப் புரட்சி (1959)

அமெரிக்க பொம்மை ஆட்சியாளனான பட்டிஸ்டாவின் கொடிய ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்ட புரட்சியினால் கியூபா விடுதலை செய்யப்பட்டது. கடந்த 40 ஆண்டுகாலத்தில் சிறிய நாடாக இருந்தாலும், கியூபா ஒரு முன்னேற்றகரமான நாடாக திகழ்கிறது. கல்வி, சுகாதாரம், போன்ற விடயங்களில் இன்று உலகில் முன்னேற்றகரமான ஒரு நிலை அதற்கு உண்டு. சோவியத் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின் கியூபாவிற்கு முகம்கொடுக்க நேர்ந்த நெருக்கடிகள் ஏராளம். இருப்பினும், நாட்டின் மக்கள் சகல கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு உறுதியாக எழுந்து நின்றது. இந்த நூற்றாண்டின் முக்கிய ஒரு சம்பவமாகும். கியூபாவிற்கு எதிரான அமெரிக்கா இப்போதும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருகின்றது. அக்காலத்தில் ''ருஷ்யக் கரடி" யோடு வைத்திருக்கும் தொடர்பினாலேயே தாம் அப்படி செய்வதாக அமெரிக்கா கூறியது. ''உயர்ந்த பலசாலி"யாக இப்போது உலகில் இருப்பது அவர்கள் மட்டுமே. இருப்பினும் இப்போதும் பொருளாதார தடைகளை ஏற்படுத்தி வருகின்றது. அமெரிக்காவிடம் இருந்த கியூபாவின் கரும்புத் தோட்டங்களை கியூபா மக்கள் மயப் படுத்தியதன் பின்னரே இவை நடக்க ஆரம்பித்தன.

கியூபா 1808இல் ஒரு ஸ்பானிய கொலனியாகும். அமெரிக்கா ஸ்பானியாவிடம் விலைகொடுத்து அதனை வாங்குவதற்கு முயற்சித்தது.

1823 இல் கியூபா தமக்கு நல்ல இலாபம் தேடக்கூடிய நாடாக இருந்ததனால் அதனை வட அமெரிக்காவோடு இணைத்துக் கொள்ள அது முயன்றது.

1898இல் கியூபாவின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அமெரிக்கா இராணுவ ஆட்சியொன்றை பலாத்காரமாக கட்டவிழ்த்துவிட்டது. அது நான்கு ஆண்டுகள் தொடர்ந்தது.

1901இல் அமெரிக்கா கியூப அரசியல் யாப்பிற்கு புதிய சரத்தொன்று சேர்ந்ததன் மூலம் கியூபாவின்

படிப்பகம்

www.padippakam.com

ஒரு பகுதியை பிரித்து தான் கைப்பற்றிக் கொண்டது. ‘‘தலையீடு செய்தல்’’ என்னும் அமெரிக்க கருத்தியலின் கீழ் இது நடந்தது.

இன்னும் கியூபாவை கைப்பற்ற அமெரிக்கா படாதபாடு படுகின்றத.

16. ஆபிரிக்க விடுதலைப் போராட்டம்

ஆபிரிக்க விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தியதற்காக 27 வருடம் சிறைவாசம் அனுபவித்து பின்னர் 1990இல் நெல்சன் மண்டெல்லா விடுதலையாகியதன் பின்னர் ஆபிரிக்காவிற்கு ஒரு புதுயுகம் மலர்ந்தது. அவர் பழிக்குப்பழி என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமல் மேற்கொண்ட முதிர்ச்சியான நடவடிக்கைகளின் காரணமாக இன்று அந்நாட்டில் நிறவாதம் மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது. ஆனாலும் கல்வியறிவின்மை, வீடுகள் பற்றாக்குறை, என்பது அவர்களுக்கு காலனித்துவ ஆட்சியாளர்கள் கொடுக்கப்பட்ட சொத்தாக இருந்தது. அதிகாரப் பரவலாக்கல் என்னும் ஒரு முறைக்கூடாக தென் ஆபிரிக்கா இப்போது தலைதூக்கிய வண்ணம் உள்ளது.

1652இல் ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பனி கேப்டவுனில் வெள்ளைக் காரர்களின் குடியேற்றமொன்றை ஏற்படுத்தியது.

பிரித்தானியர்கள் 1820ம் ஆண்டிலேயே அங்கு சென்றனர். அன்றிலிருந்து நாட்டின் பல்வேறு இடங்களை அவர்கள் கைப்பற்றினர். 1910ல் தென் ஆபிரிக்க சங்கம் உருவானது. அந்நாட்டில் 5 சதவீதமான வெள்ளைக்காரர்கள் இருந்தார்களே ஒழிய 95 சதவீதமான கறுப்பர்கள் இருக்கவில்லை.

1912இல் சுதேசிகள் நில உரிமை பற்றிய ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனால் 95சதவீதமான ஆபிரிக்கர்களுக்கு 7 சதவீதமான காணிகள் ஒதுக்கப்பட்டன. மிகுதி 93 சதவீதமானவை ஐரோபியர்களுக்குச் சொந்தமாகியத. 1927இல் கறுப்பு - வெள்ளை மனிதர்களுக்கிடையே பாலியல் உறவு வைத்துக் கொள்வதை தடுக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது.

1936இல் கறுப்பின மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது.

1948இல் ‘‘தேசியக் கட்சி’’ (வெள்ளையர்கள் கட்சி) தேர்தலில் வெற்றிபெற்று ‘‘கறுப்பர்கள் வேண்டாம்’’ என்றும் ‘‘அப்பாத்தீட்’’ சட்டத்தை பிறப்பித்தனர். மேலும் பிரதேசங்களை வரையறுத்து, மக்கள் பிரதேசங்களில் பதிவு செய்யும் சட்டத்தை கொண்டு வந்து அதற்கூடாக இனக்குழு ரீதியான வேறுபாட்டை ஊக்குவித்தது.

1959 ‘‘சுதேசிகளின் பிரதேசங்கள்’’ வரையறுக்கப்பட்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டதோடு வேறு பல்கலைக்கழகங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

1960இல் ஆரம்பித்த விடுதலைப் போராட்டத்தினால் ஷாப்லில் என்னும் இடத்தில் பெருந்தொகையான கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

இக்கறுப்பின கொள்கைக்கு எதிராக பிரித்தானியா எதிர்ப்புத் தெரிவித்ததனால் பொதுநலவாய அமைப்புகளிலிருந்து தென் ஆபிரிக்கா விலகிக் கொண்டது. (1961)

1962இல் நெல்சன் மண்டெல்லா கைது செய்யப்பட்டு 1964 ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஸ்டீவ் பீகோ என்னும் இளைஞர் தலைவன் ‘‘நாம் கறுப்பர்’’ என்னும் இயக்கத்தை ஆரம்பித்தார். பின்னர் அவர் கொல்லப்பட்டார். (1977)

1975இல் பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்ட பின்னர், நாடெங்கும் போராட்டங்கள் பரவ ஆரம்பித்தன.

1983இல் அமைக்கப்பட்ட போத்தாவின் அரசாங்கத்தால் வெள்ளைக்காரர்களுக்கு வேறு பாராளுமன்றமும், ஏனைய இனத்தவர்களுக்கு வேறு பாராளுமன்றம் அமைக்கப்பட்டாலும் கறுப்பினத்தவர்களுக்கு அப்படியொன்றுமே இருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com

1984இல் ஆரம்பமாகிய வன்முறைகள் 1986ம் ஆண்டுவரை தொடர்ந்து நிகழ்ந்தது. இக்காலகட்டத்தில் பொலிசாருக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டதோடு புதிய நாசி அமைப்பொன்றும் உருவாகியது.

1990இல் நெல்சன் மண்டெல்லா விடுதலையானதோடு பல கட்சி ஆட்சிமுறைக்கான அத்திவாரம் வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை (UNO)

இது சுமார் 190 சுதந்திர நாடுகள் அங்கம் வகிக்கும் ஓர் ஒப்பற்ற சர்வதேச அமைப்பாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் தாபிக்கப்பட்ட அதன் முக்கிய இலட்சியமாயமைந்தது, முழு உலகிலும் சமாதானத்தையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தல், நாடுகளிடையே நட்புறவை மேம்படுத்தல், சிறந்த வாழ்க்கை நிலைமைகளையும், மனித உரிமைகளையும் பேணும் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்தல் ஆகியனவாகும். ஐ. நா. சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு எல்லா உறுப்புரிமை நாடுகளும் கட்டுப்படுகின்றன. அவை சர்வதேச உடன்பாடுகளில் கூறப்படும் ஒருப்பாடுகளைப் பின்பற்றவும் இணங்கியுள்ளன.

ஐ.நா.சபை முக்கிய 06 அமைப்புக்களை உள்ளடக்கியுள்ளது:

01. பொதுச்சபை
02. பாதுகாப்புச் சபை
03. பொருளாதார, சமூக நிறுவனம்
04. நம்பிக்கைப் பொறுப்புச் சபை
05. சர்வதேச நீதிமன்றம்
06. பொதுச் செயலகம்

இந்த அமைப்புக்களில், நெதர்லாந்து ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய 05 அமைப்புக்களும், நிவ்யோர்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. தலையகத்திலேயே இயங்குகின்றது. மேலும் பல சிறப்பான நிறுவனங்களும் அதன்கீழ் இயங்குகின்றன. சுகாதாரம், கமத்தொழில், சர்வதேச வான் பயணம், விண்பொருளியல் போன்ற பல்வேறு துறை சார்ந்தவையாக இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன.

ஐநா சபையுடன் தொடர்பான சிறப்பான நிறுவனங்கள் வருமாறு:

01. சர்வதேச தொழிலாளர் அமைப்பு
02. ஐ.நா. உணவு, விவசாய அமைப்பு
03. ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பு
04. உலக சுகாதார அமைப்பு
05. உலக வங்கி
06. சர்வதேச நாணய நிதியம்
07. சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com

08. சர்வதேச அஞ்சல் சங்கம்

09. சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்

10. உலக விண்பொருளியல் அமைப்பு

11. சர்வதேசள கடல் அமைப்பு

12. புலமைச் சொத்து தொடர்பான உலக அமைப்பு

13. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்

14. ஐ.நா.தொழினுட்ப அபிவிருத்தி நிறுவனம்

15. சர்வதேச அணுசக்தி நிறுவனம்

ஐ.நா. சபை எத்தகைய பணிகளை ஆற்றுகின்றது?

உலகில் போராட்டங்கள் பெருகிவிட்டன, நாடுகளிடையே முரண்பாடுகளும் மலிந்துள்ளன. ஐ.நா. சபை அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக உதவுகின்றது. குறுகிய கால போராட்டங்களுக்குத் தீர்வு காண்பதற்கு ஐ.நா. சபை தலையிட்டு உதவுகின்றது. உடன் எழும் போராட்டங்கள் தொடர்பில் செயலாளர் நாயகம் நேரடியாகச் சென்று சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி சமாதானத் தீர்வுக்கான வழியமைக்கின்றார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்தத் தரப்பினரிடையே மூன்றாம் தரப்பாகவும் செயலாற்றுகின்றார்.

உலகப் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ள வறுமை, வேலையின்மை, சூழல் மாசுறல், உள்ளக குற்றவியல், எயிட்ஸ் நோய், போராயுட்டிகளின் பரம்பல், நாடுகளிமையேயான இடம்பெயர்வுகள் ஆகியன தொடர்பில் செயலாற்றுவதற்கு சர்வதேச கூட்டு ஒத்துழைப்பு அவசியமாகும். இன்று அது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் ஐ.நா. சபையூடாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஐ.நா. சபையும், அதனோடிணைந்த இதர அமைப்புக்களும் வளர்முக நாடுகளுக்கு கடனுதவியளிப்பதன் மூலம் உதவுகின்றன. அத்துடன் அகதிகளுக்கு உதவுதல், உணவு உதவிகள் வழங்கல், இயற்கைப் பேரிடங்களின் போது அவசர உதவிகளை வழங்கல் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றது. பொருளாதார நிலவரங்களை மேம்படுத்தவும் கைகொடுத்து உதவுகின்றது.

ஐ.நா.சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகள் சாசனமானது,முழு மனித குலத்துக்கும் பொதுவாக ஆக்கப்பட்ட ஓர் உன்னதமான ஒழுக்கவிழுமியக் கோவையாகும். மானுடனின் சகல அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் உறுதிப்படுத்தப்படுவதே அதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். குறித்த அந்தச் சாசனத்திலிருந்து எழுந்த மேலும் பிரகடனங்களும், உடன்பாடுகளும் சுமார் 80 உள்ளன.

ஐ.நா. சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமே உலகின் பரந்தளவிலான அபிவிருத்தி உதவித் திட்டமாகும்.

இதுகாறும் ஐ.நா. வபை சனநாயகவயப்பட்ட சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களை நடத்துவதற்காக ஐ.நா.சபை சுமார் 70 நாடுகளுக்க உதவியளித்துள்ளது.

வருடாந்த உலக உணவு உதவிகளில் சுமார் 1.´3 பகுதி, ஐ.நா. உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

உலகின் பலம்பொருந்திய நாடுகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த அல்லது காலனித்துவத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com

உட்பட்டிருந்த சுமார் 80 நாடுகளை மீட்டெடுத்து, சுதந்திர நாடுகளாகப் பரிணமிக்கச் செய்வதற்கு ஐ.நா. சபை நடவடிக்கை மேற்கொண்டது. அண்மையில் (2002 ல்) கிழக்குத் திமோர் என்றொரு புதிய நாடு இந்தோனேசியாவின் பிடியிலிருந்து சுதந்திர தேசமாக மலர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக சுகாதார அமைப்பின் பெருமுயற்சியினால் உலகிலிருந்து அம்மைநோயை விரட்டியடிக்க முடிந்தது.

சிறுவர்களைப் பீடிக்கும் நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக சிறு பராயத்திலேயே தடுப்பூசி மருந்தேற்றல் உலக சுகாதார அமைப்பின் முயற்சியினால் செயற்படுத்தப்படுகின்றது. இதன்காரணமா 02 மில்லியன் பிள்ளைகள் மரணத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளனர்.

மனிதகுல வரலாற்றில் முன்னெப்போதும் இடம்பெற்றிராதவாறு, கடந்த ஒரு சில ஆண்டு காலத்துள் சர்வதேச சட்டத்தை மேம்படுத்துவதற்கு ஐ.நா. சபை துணிந்தது.

எழுத்தறிவுவீத வளர்ச்சி குன்றிய வளர்முக நாடுகளின் வயதுவந்தோரில் சுமார் 60மு வீதமானோர் தற்போது வாசிப்பு அறிவு பெறவும் ஐ.நா.சபை உதவியுள்ளது. அந்த நாடுகளின் மகளிரின் எழுத்தறிவு வீதம் 1970 ல் 36மு வீதமாகவே காணப்பட்டது. 1990 அளவில் அது 56 மு வீதமாக அதிகரித்தது.

ஐ.நா. சபையினதும், அதனோடிணைந்த அமைப்புகளினதும் ஒத்துழைப்பின் மூலம், நோய்நொடிகளை விட்டும் சிறுவர்களைத் தடுத்தல், மலேரியா மற்றும் வேறு தொற்றுநோய்களை இல்லாதொழித்தல், குடிநீர் வழங்கல், நுகர்வோர் சகாதார நலப்பேணுகை ஆகிய சேவைகள் தொடர்நதும் இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாக முழு உலகிலும் ஆயள் எதிர்பார்க்ளகை வீதம் மேலுயர்ந்துள்ளது.

உலகில் யுத்தங்கள், இதர இடர்களினால் இன்னல்களுக்குட்பட்டுள்ள ஏறத்தாழ 20 இலட்சம் வரையான அகதிகளுக்கும், இடம்பெயர்ந்தவர்களுக்கும் ஐ.நா. சபையினால் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நீண்டகால, குறுகிய கால அடிப்படையில் பல்வேறு நாடுகளின் உலக வங்கிக்கிளைகள் ஊடாக அபிவிருத்தி நோக்கிலான 20 பில்லியன் டாலர் கொண்ட கடன் உதவிகளையும் அது வழங்கி வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் சாசனம்

ஐக்கிய நாடுகள் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு உடன்பாட்டுள்ள சட்டதிட்டங்கள், கொள்கைகள் ஆகியன இந்தச் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் வண்ணமே முழு உலகிலும் மனித உரிமைகள் செயற்படுத்தப்படுகின்றன

1945 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ம் திகதி சான் பிரான்சிஸ்கோ நகரில் கைச்சாத்திடப்பட்டு, 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு இச்சாசனம் செயற்படுத்தப்பட்டது. சர்வதேச நீதிமன்றம் பற்றிய சட்டமும், இந்தச் சாசனத்தின் முக்கிய ஓர் அங்கமாகக் கருதப்படுகின்றது.

* இந்தச் சாசனத்தை ஏற்றங்கீகரித்தல் தொடர்பாக, அதன் தொடக்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது:

ஐ.நா. பிரதிநிதிகளான நாம் இவ்வாறு தீர்மானத்துக்கு வருகிறோம்:

எமது வாழ்நாளில் இரு தடவைகள் மனித குலத்திற்கு எண்ணிறைந்த இன்னல்களைச் சுமந்து வந்த யுத்தத்தின் கொடுர பேராபத்ததுக்களிலிருந்து எமது வருங்கால சந்ததிகளை பாதுகாக்குமுகமாகவும் அத்துடன்,

படிப்பகம்

அடிப்படை மனித உரிமைகள், தனிமனிதனின் கௌரவமும் மதிப்பும், பெண்களினதும், ஆண்களினதும், அவ்வாறே பெரும்பான்மை அல்லது சிறுபான்மை இனங்களினதும் சமமான உரிமைகளை மீள உறுதிப்படுத்துமுகமாகவும் அத்துடன்,

சர்வதேச சட்டங்கள் மற்றும் உடப்படிக்கையிலுள்ள உடன்பாடுகளின் மீது எழும் கௌரவம், நியாயபூர்வமான தன்மையை நிறுவுதல் ஆகியவற்றுக்காகவும் மிக்க பரந்தளவிலான சுதந்திரமொன்றின் கீழ் சமூக முன்னேற்றம் சிறந்த வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்துமுகமாகவும் இந்தச் சாசனம் ஆக்கப்படுகின்றது.

* பின்வரும் குறிக்கோள்களும் ஏற்புடையத்தானவையாகும் :

* ஒருவருக்கொருவர் நல்ல சுற்றத்தவராக எற்றுடையுடன் சகிப்புத்தன்மையுடன் கூடி வாழுவதற்காகவும்

* சர்வதேச ஒற்றுமையையும் பாதுகாப்பையும் உருவாக்கும் பொருட்டு எமது ஆற்றல்களை ஒன்று திரட்டுவதற்காகவும்,

* முறைமைகளை நிறுவுவதன் மூலமும் கொள்கைகளை ஏற்றங்கீகரிப்பதன் மூலமும் பொதுத்தேவையொன்றிலிருந்து வேறு சந்தர்ப்பங்களில் ஆயுத பலத்தை பிரயோகிப்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் செயலாற்றுதல்.

மேற்போந்த குறிக்கோள்களை வெற்றிகொள்வதற்காக ஐ.நா. சாசனமுமம், ஐ.நா சபையும் உருவாக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. அந்தச் சாசனத்தை செயற்படுத்துவது தொடர்பான 111 வாசயங்களையும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான 70 வாசகங்களையும் அது உள்ளடக்கியது.

www.padippakam.com



சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

THE UNIVERSAL
DECLARATION OF HUMAN RIGHTS



உறுப்புரை -1

மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

Article 1. All human beings are born free and equal in dignity and rights. They are endowed with reason and conscience and should act towards one another in a spirit of brotherhood.

உறுப்புரை - 2

இனம், நிறம், பால்நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை, தேசிய அல்லது சமூகத் தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி இப்பிரகடனத்தில் தரப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் எல்லோரும் உரித்துடையவராவர்.

மேலும், எவர்க்கும் அவருக்குரித்துள்ள நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசியல், நியாயாதிக்க அல்லது நாட்டிடை அந்தஸ்தின் அடிப்படையில் அது தனியாட்சி நாடாக, நம்பிக்கைப் பொறுப்பு நாடாக, தன்னாட்சியற்ற நாடாக அல்லது வேறேதேனும் வகையில் இறைமை மட்டுப்படுத்தப்பட்ட நாடாக இருப்பினும் சரி - வேறுபாடெதுவும் காட்டப்படுதலாகாது.

உறுப்புரை - 3

ஒவ்வொருவரும் உயிர்வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரிமையுடையோராவர்.

Article 2. Everyone is entitled to all the rights and freedoms set forth in this Declaration, without distinction of any kind, such as race, colour, sex, language, religion, political or other opinion, national or social origin, property, birth or other status. Furthermore, no distinction shall be made on the basis of the political, jurisdictional or international status of the country or territory to which a person belongs, whether it be independent, trust, non-self-governing or under any other limitation of sovereignty.

Article 3. Everyone has the right to life, liberty and security of person.

படிப்பகம்

www.padippakam.com

உறுப்புரை - 4

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லா வகைகளிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

உறுப்புரை - 5

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான, மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படுதலாகாது.

Article 4. No one shall be held in slavery or servitude; slavery and the slave trade shall be prohibited in all their forms.

Article 5. No one shall be subjected to torture or to cruel, inhuman or degrading treatment or punishment.

உறுப்புரை - 6

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஓர் நபராக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவர்.

உறுப்புரை - 7

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றிச் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு அனைவரும் உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப் புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

Article 6. Everyone has the right to recognition everywhere as a person before the law.

Article 7. All are equal before the law and are entitled without any discrimination to equal protection of the law. All are entitled to equal protection against any discrimination in violation of this Declaration and against any incitement to such discrimination.

உறுப்புரை - 8

அந்தந்த நாட்டின் அரசியலமைப்பினால் அல்லது சட்டத்தினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களுக்காகத் தகுதிவாய்ந்த தேசிய நியாய சபைகளினால் வழங்கப்படும் பயனுறுதியுடைய பரிகாரத்துக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

உறுப்புரை - 9

தன்னிச்சையாக கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல், நாடுகடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படலாகாது.

Article 8. Everyone has the right to an effective remedy by the competent national tribunals for acts violating the fundamental rights granted him by the constitution or by law.

Article 9. No one shall be subjected to arbitrary arrest, detention or exile.

உறுப்புரை -10

தமது உரிமைகள், கடப்பாடுகள் பற்றியும் தமக்கெதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பற்றியும் தீர்மானிப்பதற்கு சுயாதீனமான, நடுநிலை தவறாத நியாய சபையினால் மேற்கொள்ளப்படும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

Article 10. Everyone is entitled in full equality to a fair and public hearing by an independent and impartial tribunal, in the determination of his rights and obligations and of any criminal charge against him.

படிப்பகம்

உறுப்புரை - 11

1. தண்டனைக்குரிய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படும் எல்லோரும் பகிரங்க விசாரணையின் போது சட்டத்துக்கிணங்க அவர்கள் குற்றவாளிகளெனக் நிருபிக்கப்படும்வரை, சுற்றவாளிகளென ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள். விசாரணையின் போது அவர்களது எதிர்வாதங்களுக்கு அவசியமான எல்லா உறுதிப்பாட்டு உத்தரவாதங்களும் அவர்களுக்கிருத்தல் வேண்டும்.

2. தேசிய, சர்வதேசிய சட்டத்தின் கீழ் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தண்டனைக்குரிய தவறொன்றாகக் கொள்ளப்பாதிருந்த பொழுது புரியப்பட்ட அச்செயல் அல்லது செய்யாமை காரணமாக எவரும் ஏதேனும் தண்டனைக்குரிய தவறுக்கான குற்றவாளியாகக் கொள்ளப்படலாகாது. அத்துடன், தண்டனைக் குரிய தவறு புரியப்பட்ட நேரத்தில் ஏற்புடையதாகவிருந்த தண்டத்திலும் பார்க்கக் கடுமையான தண்டம் விதிக்கப்படலாகாது.

உறுப்புரை - 12

எவரும் அவரது அந்தரங்கம், குடும்பம், வீடு அல்லது கடிதப் போக்குவரத்து என்பவை சம்பந்தமாக தன்னிச்சையான தலையீட்டிற்கோ அல்லது அவரது மரியாதை, நன்மதிப்பு என்பனவற்றின் மீதான தாக்குதல்களுக்கோ உட்படுத்தப்படலாகாது. அத்தகைய தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கெதிராக, ஒவ்வொருவரும் சட்டப்பாதுகாப்புக்கு உரிமையுடையவராவர்.

Article 11. (1) Everyone charged with a penal offence has the right to be presumed innocent until proved guilty according to law in a public trial at which he has had all the guarantees necessary for this defence.

(2) No one shall be held guilty of any penal offence on account of any act or omission which did not constitute a penal offence, under national or international law, at the time when it was committed Nor shall a heavier penalty be imposed than the one that was applicable at the time the penal offence was committed.

Article 12. No one shall be subjected to arbitrary interference with his privacy, family, home or correspondence, nor to attacks upon his honour and reputation Everyone has the right to the protection of the law against such interference or attacks.

உறுப்புரை - 13

1. எந்தவொரு நாட்டினதும் எல்லைக்குள் சுதந்திரமாகப் பிரயாணஞ் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

2. தனது சொந்த நாடு உட்பட ஏதேனும் நாட்டை விட்டுச் செல்லவும் தத்தமது நாட்டுக்குத் திரும்பவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

Article 13.(1) Everyone has the right to freedom of movement and residence within the borders of each state.

(2) Everyone has the right to leave any country, including his own, and to return to his country.

உறுப்புரை - 14

1. வேறு நாடுகளுக்குச் செல்வதன் மூலம் துன்புறுத்தலிலிருந்து புகலிடம் நாடுவதற்கும், துன்புறுத்தலிலிருந்து புகலிடம் துய்ப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அரசியற் குற்றங்கள் அல்லாத குற்றங்கள் சம்பந்தமாக அல்லது ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணான செயல்களிலிருந்து உண்மையாக எழுகின்ற வழக்குத் தொடுப்புகள் சம்பந்தமாக இவ்வுரிமை கேட்டுப்பெறப்படலாகாது.

Article 14.(1) Everyone has the right to seek and to enjoy in other countries asylum from persecution.

(2) This right may not be invoked in the case of prosecutions genuinely arising from non-political crimes or from acts contrary to the purposes and principles of the United Nations.

www.padippakam.com

உறுப்புரை - 15

1. ஒரு தேசிய இனத்தவராகவிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்குமுண்டு.

2. எவரதும் தேசிய இனத்துவம் எதேச்சையாக மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதலோ தேசிய இனத்துவத்தை மாற்றுவதற்கான உரிமை மறுக்கப்படுதலோ ஆகாது.

Article 15.(1) Everyone has the right to a nationality.
(2) No one shall be arbitrarily deprived of his nationality nor denied the right to change his nationality.

உறுப்புரை - 16

1. முழு வயதடைந்த ஆண்களும் பெண்களும் இனம், தேசிய இனம் அல்லது சமயம் என்பவை காரணமான கட்டுப்பாடெதுவுமின்றி திருமணம் செய்வதற்கும் ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும் உரிமை உடையவராவர். திருமணஞ் செய்யும் பொழுதும், திருமணமாகி வாழும் பொழுதும், திருமணம் குலைக்கப்படும் பொழுதும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுண்டு.

2. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமானதும் முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம்.

3. குடும்பமே சமுதாயத்தில் இயற்கையானதும் அடிப்படையானதுமான அலகாகும். அது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

உறுப்புரை - 17

1. தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

2. எவரினதும் ஆதனம் ஒரு தலைப்பட்ச மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதல் ஆகாது.

Article 16. (1) Men and women of full age, without any limitation due to race, nationality or religion, have the right to marry and to found a family. They are entitled to equal rights as to marriage, during marriage and at its dissolution.
(2) Marriage shall be entered into only with the free and full consent of the intending spouses.
(3) The family is the natural and fundamental group unit of society and is entitled to protection by society and the State.

Article 17.(1) Everyone has the right to own property alone as well as in association with others.
(2) No one shall be arbitrarily deprived of his property.

உறுப்புரை - 18

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி மற்றும், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும் வேறொருவருடன் கூடியும், பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

Article 18. Everyone has the right to freedom of thought, conscience and religion; this right includes freedom to change his religion or belief, and freedom, either alone or in community with others and in public or private, to manifest his religion or belief in teaching, practice, worship and observance.

படிப்பகம்

உறுப்புரை - 19

கருத்துச் சுதந்திரத்துக்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கும் எவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது தலையீடின்றிக் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும் எவ்வழிவகைகள் மூலமும் எல்லைகளைப் பொருட்படுத்தாமலும் தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும், பரப்புவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கும்.

Article 19. Everyone has the right to freedom of opinion and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers.

உறுப்புரை - 20

1. அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரத்துக்கு சகலரும் உரித்துடையவர்கள்.

2. ஒரு கழகத்தினைச் சேர்ந்தவராயிருப்பதற்கு எவரும் கட்டாயப்படுத்தப்படலாகாது.

Article 20.(1) Everyone has the right to freedom of peaceful assembly and association.
(2) No one may be compelled to belong to an association.

Article 21.(1) Everyone has the right to take part in the government of his country, directly or through freely chosen representatives.
(2) Everyone has the right to equal access to public service in his country.
(3) The will of the people shall be the basis of the authority of government; this shall be expressed in periodic and genuine elections which shall be by universal and equal suffrage and shall be held by secret vote or by equivalent free voting procedures.

உறுப்புரை - 21

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு பெறுவதற்கு உரிமையுண்டு.
2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.
3. மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது, காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல்கள் மூலம் வெளிப் படுத்தப்படல் வேண்டும். இத்தேர்தல்கள் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப் புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென் பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

உறுப்புரை - 22

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவர். அத்துடன் தேசிய முயற்சி மூலமும் சர்வதேசிய நாட்டிடை ஒத்துழைப்பு மூலமும் ஒவ்வொரு நாட்டினதும் அமைப்பு முறைக்கும் வளங்களுக்கும் இயையவும் ஒவ்வொருவரும் தத்தம் மதிப்புக்கும், தத்தம் ஆளுமையைச் சுதந்திரமான முறையில் அபிவிருத்தி செய்வதற்கும், இன்றியமையாதவையாக வேண்டப்பெறும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகளைப் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

Article 22. Everyone, as a member of society, has the right to social security and is entitled to realization, through national effort and international co-operation and in accordance with the organization and resources of each State, of the economic, social and cultural rights indispensable for his dignity and the free development of his personality.

www.padippakam.com

உறுப்புரை - 23

1. ஒவ்வொருவரும், தொழில் செய்வதற்கும், அத்தொழிலினைச் சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், செய்யுந் தொழிலில் நியாயமானதும் அனுகூல முடையதுமான தொழில் நிபந்தனை களுக்கு உரியோராயிருப்பதற்கும், தொழிலின்மைக் கெதிரான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவர்.

2. ஒவ்வொருவரும் வேறுபாடெதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கும் உரித்துடையவராவர்.

3. வேலை செய்யும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியைபான ஒரு வாழ்க்கையை நடத்துவதை உறுதிப்படுத்தும் நீதியானதும் அனுகூலமானதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களைப் பாதுகாப்பதற்கெனத் தொழிற் சங்கங்களை அமைப்பதற்கும் அவற்றிற் சேர்வதற்குமான உரிமையுண்டு.

Article 23.(1) Everyone has the right to work, to free choice of employment, to just and favourable conditions of work and to protection against unemployment.

(2) Everyone, without any discrimination, has the right to equal pay for equal work.

(3) Everyone who works has the right to just and favourable remuneration ensuring for himself and his family an existence worthy of human dignity, and supplemented, if necessary, by other means of social protection.

(4) Everyone has the right to form and to join trade unions for the protection of his interests.

உறுப்புரை - 24

இளைப்பாறுகைக்கும் ஓய்விற்கும் ஒவ்வொருவரும் உரிமையுடையவர். இதனுள் வேலை செய்யும் மணித்தியால வரையறை, சம்பளத்துடனான காலாகால விடுமுறைகள் அடங்கும்.

உறுப்புரை- 25

1. ஒவ்வொருவரும் உணவு, உடை, வீட்டு வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும் தமது குடும்பத்தினரதும் உடனலத்துக்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, விதவை நிலை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழக்கைக்கு வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக்கும் உரிமையுடையவராவர்.

2. தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும், அவை திருமண உறவினுட் பிறந்தவை யாயினுஞ் சரி, அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினுஞ் சரி, சமமான சமூகப் பாதுகாப்பினைத் பெறும் உரிமையுடையன.

Article 24. Everyone has the right to rest and leisure, including reasonable limitation of working hours and periodic holidays with pay.

Article 25.(1) Everyone has the right to a standard of living adequate for the health and well-being of himself and of his family, including food, clothing, housing and medical care and necessary social services, and the right to security in the event of unemployment, sickness, disability, widowhood, old age or other lack of livelihood in circumstances beyond his control.

(2) Motherhood and childhood are entitled to special care and assistance. All children, whether born in or out of wedlock, shall enjoy the same social protection.

படிப்பகம்

உறுப்புரை - 26

1. ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது ஆரம்ப அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமானதாயிருத்தல் வேண்டும். ஆரம்ப கல்வி கட்டாயமாக்கப்படுதல் வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் உயர் தொழிற் கல்வியும் பொதுவாகப் பெறப்படத்தக் கனவாயிருத்தல் வேண்டும். உயர் கல்வியானது யாவருக்கும் திறமையின் அடிப்படையில் சமமான முறையில் கிடைக்கக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.

2. கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யவும் மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங் களுக்குமான மரியாதையை வலுப்படுத்தவும் கூடியதாக ஆற்றுப்படுத்தப் படல்வேண்டும். அது சகல நாடுகளுக் கிடையேயும் இன அல்லது மதக் குழு வினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்தல் வேண்டு மென்பதுடன், சமாதானத்தைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற் கொண்டு செல்லுவதற்குதவவும் வேண்டும்.

3. தமது குழந்தைகளுக்குப் புகட்டப்பட வேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

Article 26.(1) Everyone has the right to education. Education shall be free, at least in the elementary and fundamental stages. Elementary education shall be compulsory. Technical and professional education shall be made generally available and higher education shall be equally accessible to all on the basis of merit.

(2) Education shall be directed to the full development of the human personality and to the strengthening of respect for human rights and fundamental freedoms. It shall promote understanding, tolerance and friendship among all nations, racial or religious groups, and shall further the activities of the United Nations for the maintenance of peace.

(3) Parents have a prior right to choose the kind of education that shall be given to their children.

உறுப்புரை - 27

1. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அறிவியல், இலக்கிய, கலைப்படைப்பினை ஆக்கிய கர்த்தர் என்ற வகையில் அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்க நெறி, கருப்பொருள் நலன்களின் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

Article 27.(1) Everyone has the right freely to participate in the cultural life of the community, to enjoy the arts and to share in scientific advancement and its benefits.

(2) Everyone has the right to the protection of the moral and material interests resulting from any scientific, literary or artistic production of which he is the author.

உறுப்புரை - 28

இப்பிரகடனத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக, சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

Article 28. Everyone is entitled to a social and international order in which the rights and freedoms set forth in this Declaration can be fully realized.

Article 29.(1) Everyone has duties to the community in which alone the free and full development of his personality is possible.

(2) In the exercise of his rights and freedoms, everyone shall be subject only to such limitations as are determined by law solely for the purpose of securing due recognition and respect for the rights and freedoms of others and of meeting the just requirements of morality, public order and the general welfare in a democratic society.

(3) These rights and freedoms may in no case be exercised contrary to the purposes and principles of the United Nations.

www.padippakam.com

உறுப்புரை - 29

1. எந்த ஒரு சமூகத்தினுள் மாத்திரமே தமது ஆளுமையின் கட்டற்ற, பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ, அந்தச் சமூகத்தின் பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.
2. ஒவ்வொருவரும், தனது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் பொழுது, இன்னொருவரின் உரிமைகளுக்கும், சுதந்திங்களுக்குமுரிய அங்கீகாரத்தையும் மதிப்பையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காகவும், சனநாயக சமுதாய மொன்றிலே ஒழுக்கசீலம், பொதுமக்கள் ஒழுங்கமைதி, பொதுச் சேமநலன் எனும் நீதி முறையான தேவைப்பாடுகளை எதிர்கொள்ளும் நோக்கத்திற்காகவும், தனித்து சட்டத்தினால் தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு மாத்திரமே கட்டுப்படுபவராயமைதல் வேண்டும்.
3. இவ்வுரிமைகளும் சுதந்திரங்களும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கும் தத்துவங்களுக்கும் முரணாக எச்சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கப்படலாகாது.

உறுப்புரை - 30

இப்பிரகடனத்திலுள்ள எவையும் இதன் கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றுள் எவற்றையும் அழிக்கும் நோக்கத்தையுடைய ஏதேனும் முயற்சியில் ஈடுபடுவதற்கு அல்லது செயலெதனையும் புரிவதற்கு எந்த ஒரு நாட்டுக்கோ குழுவுக்கோ அல்லது ஒருவருக்கோ யாதேனும் உரிமையை அளிக்கும் உட்கிடையைக் கொண்டுள்ளதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

Article 30. Nothing in this Declaration may be interpreted as implying for any State, group or person any right to engage in any activity or to perform any act aimed at the destruction of any of the rights and freedoms set forth herein.

படிப்பகம்

www.padippakam.com

அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உள்நாட்டு சர்வதேச மாற்று நடவடிக்கைகள்.

அடிப்படை உரிமைகள் எவை என்ற விடயம் முன்னைய தலைப்புகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளது. அந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சகல அரசாங்க நிறுவனங்கள் போன்றே, உத்தியோகத்தவர்களும் பொறுப்புடையவர்களாவர்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் பொறுப்புக் குறித்து அரசியலமைப்பின் 4 (ஈ) உறுப்புரையில் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது:-

``அரசியலமைப்பினால் வெளிப்படுத்தப்பட்ட ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள் அரசாங்கத்தின் எல்லா உறுப்புகளாலும் போற்றப்படவும், பேணப்படவும், ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதுடன் அவை, இணைத்தும் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முறையிலற்ற விரவும் அத்தகைய அளவுக்குத் தவிரவும் சிறுக்கப்படுதலோ, மட்டுப்படுத்தப்படுதலோ, மறுக்கப்படுதலோ ஆகாது"

இங்கு அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் என்பதால் கருதப்படுவதாவது, அரசாங்க நிறுவனமொன்றிலிருந்து சேவையைப் பெற்றக் கொள்ளும் உரிமையுள்ள ஆளொருவர் திருப்தியுறுமாறு அதனை நிறைவேற்றி வைப்பதாகும்.

பாதுகாப்பளிக்கப்படுவதென்பது, யாதேனுமொரு நபரின் அடிப்படை உரிமையொன்று மீறப்படுமிடத்து முன் வந்து அதனைப் பாதுகாப்பதற்குச் செயலாற்றுதல் மற்றும் அது மீறப்படாத வகையில் செயலாற்றுதலாகும். அதனை வளர்ப்பதும் பொறுப்பாகும். எனின், மதிப்பளிப்பதன் மூலமும் பாதுகாப்பளிப்பதன் மூலமும் மிக்க எளிதாகவும், துரிதமாகவும் மனித உரிமைகளை அனுபவிக்க வாய்ப்பளிப்பதாகும்.

சகல அரசாங்க நிறுவனங்களும், உத்தியோகத்தர்களும் இவ்வாறு அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர்கள் எனக் கூறப்படுவதுடன், அவ்வாறில்லாதவிடத்து சட்டத்தின் மூலம் அவர்கள் விசாரிக்கப்படவும் முடியும். அவ்வாறு செயலாற்றுவதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் 17ஆவது உறுப்புரையினால் வழங்கப்படுகிறது.

``யாதேனுமோர் அடிப்படை உரிமை, ஏதுமோர் ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் மீளப்பட்டுள்ளமை தொடர்பில் அல்லது உடனடியாக மீறப்பட்டுள்ளமை தொடர்பில் உயர் நிதிமன்றத்துக்கு அந்த நபர் விண்ணப்பிக்க உரித்துடையவராவார்".

126ஆவது உறப்புரையினால் உயர் நீதிமன்றத்துக்கு அதற்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுயள்ளமையாலேயே அவ்வாற விண்ணப்பிக்க வேண்டியுள்ளது. அந்த விடயங்களை ஆராய்ந்து திமானமெடுப்பதற்கு அரசியலமைப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அந்த வேண்டுகோள் மீறப்படின் அது நிகழ்ந்து 3 மாத காலத்துள் வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும். எழுத்து மூல மனுவொன்றின் வடிவிலேயே விடயங்கள் முன் வைக்கப்பட வேண்டும்.

மீறலொன்று இடம்பெற்றுள்ளதாக உயர் நிதிமன்றம் கருதும் பட்சத்தில், உரிய நிவாரணமொன்றைப் பெற்றுக் கொடுக்க அல்லது ஆணையொன்றைப் பிறப்பிக்கலாம்.

01) அதன் வண்ணம் அடிப்படை உரிமையொன்றை மீறப்படுமிடத்து, மாற்று நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய மிக்கயர் நிறவனம் உயர் நீதிமன்றமாகும்.

02) அடிப்படை உரிமைகள் மீறப்படுவதுடன் தொடர்புபட்ட மாற்று நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடிய மற்றொரு நிறுவனம், 1996ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. அது மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும்.

படிப்பகம்

03) 3ஆவது நிறுவனமாகக் குறிப்பிடக் கூடியது, நிர்வாகத்துடன் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அல்லது ஒம்புட்சுமன் ஆகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC)

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்கழு, 5 ஆணையாளர்களைக் கொண்டமைந்ததாகும்.

அடிப்படை உரிமை மீறலுக்குள்ளான நபரினாலேயே உயர் நீதிமன்றத்துக்கு மனுவொன்றை (முறைப்பாடு) தாக்கல் செய்ய முடியும். அவர் சார்பாக சட்டத்தரணி ஒருவராலும் அது மேற் கொள்ளப்பட முடியும். எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவ்வாறு மனுத்தாக்கல் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் மிக அதிகமாகும்.

01) உரிமை மீறலொன்ற தொடர்பில் தாமாக ஆணைக்குழுவினால் புலனாய்வுகள் மேற் கொள்ளப்படலாம்.

02) பாதிப்புக்குள்ளான ஆள், ஆட்களின் முறைப்பாடொன்றின்படி புலனாய்வு மேற் கொள்ளப்படலாம்.

03) பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகத் தோற்றும் பிறிதொருவரின் முறைப்பாட்டின்படி புலனாய்வு மேற் கொள்ளப்படலாம்.

முக்கிய விடயங்கள்:

உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறலொன்று தொடர்பான விடயமொன்றை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றம் அதனை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்த முடியும்.

மறுகோணத்தில், மனித உரிமைகள் ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு விடயம் தொடர்பான முடிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழு அதனை உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்த முடியும்.

இதன் காரணமாக, உரிமை மீறல்களைத் தடுப்பதை விட பாரிய பங்களிப்பொன்று ஆணைக்குழுவினால் ஆற்றப்பட முடியும்.

உயர் நிதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வது அதிக பொருள் செலவுடன் கூடியது. போன்றே, முறைமைகள், விதிகளடனான ஒரு பணியாகும். எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மேற்கொள்ளப்படும் முறைப்பாடு ஒன்று சாதாரண கடிதம் ஒன்றின் மூலம் முன் வைக்கப்படலாம். முறைப்பாடுகளை மேற் கொள்ளும் காலம் முக்கியமானது. சம்பவம் இடம் பெற்று ஒரு மாத காலத்துள் உயர் நிதிமன்றத்துக்கு அதனை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், மனித உரிமைகள்ஆணைக்குழு கூறும் சட்டத்தில் குறிப்பிடப்படாதவிடத்தும், நடைமுறையில் 6 மாத காலம் வரையில் முறைப்பாடுகள் ஏற்கப்படும்.

அடிப்படை மனித உரிமையொன்ற மீறப்பட்டுள்ளவிடத்து, மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் உரிய அரசாங்க நிறுவனத்துக்கு அதனைத் திருத்தி அமைத்துக் கொள்வதன் பொருட்டு விதப்புரை செய்ய முடியும் என்பதுடன், இரு சாராரிடையேயும் இணக்கப்பாடொன்றை உருவாக்கும் செயன்முறையொன்றிலும் ஈடுபட முடியும்.

நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்)

அரசியலமைப்பின் 156ஆவது உறுப்புரையினால் பின்வரும் கருமங்களை ஆற்றும் பொருட்டு இந்தப் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்களால்,

www.padippakam.com

- அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனங்களினதும், உள்ளூராட்சி அதிகார சபைகளினதும், அவ்வாறான பிற நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் அடிப்படை உரிமை மீறல், மற்றும்,

- வேறு அநீதியான செயற்பாடுகள் குறித்து விடுக்கப்படும் முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் ஆகியவற்றை சட்டத்தின் அடிப்படையில் ஆராய்ந்து அறிக்கையிடுதல்.

பாராளுமன்ற ஆணையாளர், பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் தவிர்ந்த இதர சகல அரசாங்க நிறுவனங்களின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் எதிரான முறைப்பாடுகள் குறித்து ஆராய்வார். முறைப்பாடுகள் யாவும், சம்பவம் இடம்பெற்று ஆறு மாத காலத்துள்ளானவையாக அமைந்திருத்தல் வேண்டும். மேற்போந்த மாற்று நடவடிக்கையிலிருந்து மேலும் தெரிய வரும் ஒரு விடயம் யாதெனில், சகல அரசாங்க நிறுவனங்களும், உத்தியோகத்தர்களும் மக்களின் இறைமையில் ஓர் அங்கமான அடிப்படை உரிமைகளை மிறல் ஆகாது என்பதாகும்.

எந்தவொரு அரசாங்க நிறுவனத்தினாலும் மக்களுக்கு ஆற்றப்படும் சேவையானது, நியாயபூர்வமானதாக அமையாதவிடத்து, அது தொடர்பாக அந்த நிறவனத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் முறைப்பாடொன்றை அரசியலமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையின் கீழ் மேற்கொள்ள முடியும். இந்த உறுப்புரையானது சகல அரசாங்க, மற்றும் அரசுடன் இணைந்தேயுள்ள நிறவனங்களுடன் ஏற்புடைத்தாக்கிக் கொள்ள முடிவதால், அது மிகவும் விரிவான ஒன்றாகும். எவ்வாறாயினும் சகல அரசாங்க நிறவனங்களும், சகல அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்புடையனவாகும். அவ்வாறு செயற்படுமிடத்து அதனுடன் தொடர்பு பட்ட சகல நடவடிக்கைகளும் நியாயமானவையாக அமைதல் வேண்டும்.

- 12(1) உறுப்புரை இவ்வாறு தெரிவிக்கின்றது:-

  நீதியாக தீர்த்துவைத்தல்.

  சட்டத்தை அமுல்படுத்தல்.

  சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் பொதுவானதாக அமைதல் வேண்டும்.

- 12(2) உறுப்புரை இவ்வாறு தெரிவிக்கின்றது:-

  "இனம், மதம், சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்றும் காரணமாக எந்தப் பிரஜைக்கும் ஓரங்கட்டல் ஆகாது".

இந்த அடிப்படை உரிமையின் மூலம், சமவாய்ப்புக் கோட்பாட்டுச் சட்டத்தினால் பாதுகாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அடிப்படை உரிமைகளுக்கு வரையறைகளம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அடிப்படை உரிமைகள் மிக இன்றியமையாத உரிமைகளாக மாற மாட்டாது. எடுத்துக்காட்டாக,

1) பயங்கரவாதத் தடுப்புச்சட்டம்

11) (சில சந்தர்ப்பங்களில்) அவசரகால சட்டம்.

கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் ஓர் அடிப்படை உரிமையாகவுள்ள போதும், நபரொருவரின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தவோ, கேளிக்கைக்கு உட்படுத்தவோ அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்த முடியாது. அது, குற்றவியல் தண்டனைக் கோவையின் 479ஆம் வாசகத்துக்கும், குடியியல் சட்டத்துக்கும் உட்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

எந்தப் பிரஜையும் பிறிதொருவருக்கு மானபங்கம் ஏற்படுத்த முடியாவிடினும், பாராளுமன்றத்தில் ஆராயப்படும் ஒரு விடயம் குறித்து மானபங்க குற்றச் சாட்டுக்களை விடுக்க முடியாது. அது. பாராளுமன்றச் சிறப்புரிமைச் சட்டத்துக்.கு உட்பட்டுள்ளதே அதற்கான காரணமாகும்.

பேச்சுச் சுதந்திரத்தை இன, மத, சமய பாகுபாட்டை ஏற்படுத்துவதற்கும், நீதிமன்றத்தை அவமதிக்கவும் பயன்படுத்த முடியாது.

வரையறுக்க முடியாத அடிப்படை உரிமைகள்

மேற்போந்தவாறு சட்டத்தின் மூலம் சில விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளது, அரசியலமைப்பிற் 12, 13, 14 ஆகிய உறுப்புரைகள் தொடர்பில் மாத்திரமேயாகும். எனினும் 10, 11 ஆகிய உறுப்புரைகளை வரையறுப்பதற்கு எந்தவொரு சட்டமும் இயற்றப்பட முடியாது.

10 ஆவது உறுப்புரை: தான் விரும்பிய ஒரு மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம்

11 ஆவது உறுப்புரை: சித்திரவதைகள் அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான கரிசனைக்கு அல்லது தண்டனையொன்றுக்கு உட்படுத்துவதன் மூலம் சுதந்திரம்,

சர்வதேச மாற்று நடவடிக்கைகள்:-

மனித உரிமைகள் சாசனமானது ஒரு சட்டமாகாது என்பது மேலே விபரிக்கப்பட்டது. ஆகையால், அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் அவ்வாறே பிற்பற்றப்படவேண்டியதில்லை. அதனை ஒரு கொள்கையாகவே பின்பற்றவேண்டும். எனினும், அவ்வாறல்லாதவிடத்து தண்டனை வழங்கவோ அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்கவோ முடியாது.

இதன்காரணமாக, பெரும்பாலான நாடுகள் மனித உரிமைகள் சாசனத்தில் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்டுள்ளவிடத்து, நடைமுறையில் அவற்றைப் பின்பற்றாத நிலையில் செயலாற்றுவது புலனாகிறது. எனவே, அதற்குரிய ஒரு தீர்வாக, ஐ.நா. சபையானது சகல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய இரு உடன்பாடுகள் தொடர்பில் இணக்கத்தைப் பெற்றுள்ளது.

01. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு.

02. பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு.

இந்த உடன்பாடுகளைப் பின்பற்றவும், அதனடிப்படையில் தமது நாட்டில் சட்டத்திட்டங்களை ஆக்கிக்கொள்ளவும், உரிப்புரிமை நாடுகள் உடன்பட்டுள்ளன. அதன் முன்னேற்றம் தொடர்பான தவணை அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன.

எனினும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய உடன்பாட்டில் இன்னுமொரு முன் நடவடிக்கையும் உள்ளது. எனின், விசேட உடன்பாடொன்றில் கைச்சாத்திடுவதாகும். அந்த உடன்பாட்டில் இலங்கை 1980ல் கைச்சாத்திட்டதுடன், 1998ல் விசேட உடன்பாட்டில் கைச்சாத்திட்டது.

இந்த விசேட உடன்பாட்டால் கருதப்படுவது யாது?

சிவில் அல்லது அரசியல் உரிமையொன்று தொடர்பில் பிரசைகளால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதே இதனால் கருதப்படுவதாகும். அந்தக்குழு சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் இயங்குகிறது.

எமது அடிப்படை உரிமையொன்று மீறப்படுமிடத்து அது தொடர்பிலேயே எம்மால் அவ்வாறான முறைப்பாடொன்றை விடுக்க முடியும்.

அவ்வாறு முறைப்பாடு செய்வதெனில், உள்நாட்டு, மாற்று நடவடிக்கைகளால் நியாயம்

படிப்பகம்

வழங்கப்படவில்லை எனப் புலப்படவேண்டும். எமது அடிப்படை உரிமையொன்று மீறப்பட்டு, நாம் உயர்நீதிமன்றத்திலோ அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மாற்று நடவடிக்கைகளுக்காக வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டு, நியாயம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அந்த சர்வதேச குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம். அநீதி இழைக்கப்பட்டவரின் சொந்தப் பெயரிலேயே முறைப்பாடு செய்யப்படவேண்டும்.

அவ்வாறு முறைப்பாடு செய்த பின்னர், அதன் பிரதியொன்றை அரசாங்கத்திற்கு அனுப்பிவைப்பதுடன் விடயங்கள் விசாரிக்கப்படும். அது தொடர்பில் மேலதிக தகவல்கள் வழங்குவதற்கு முறைப்பாட்டாளருக்கும் அறிவிக்கலாம்.

அந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அந்தக் குழுவிதப்புரை செய்யுமிடத்து அதனை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

அடிப்படை உரிமையொன்று மீறப்படுவது தொடர்பில் நேடியாக முறைப்பாடு செய்யுமிடத்து, மாற்று நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய ஏக சர்வதேச நிறுவனம் அதுவாகும்.

www.padippakam.com

உத்தேச புதிய அரசியல் யாப்பில் சொல்லப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்.

(உத்தேச யாப்பில் குறிப்பிடப்பட்டள்ள சரத்து இலக்கங்களுடன் தரப்பட்டுள்ளது)

08. வாழ்வதற்கான உரிமை பாதுகாக்கப்படுகின்றது. (இருப்பினும் அவசரகாலச்சட்டம், பயங்கரவாததத் தடைச்சட்டம் போன்றவற்றால் அதற்கு ஆபத்து நேரலாம். அதேபோல் மெதுவான மரணத்தை தடுக்கக்கூடிய முறையொன்றும் இல்லை.)

1972 இலும் 1978 நிலைமை இதனால் இருந்ததைவிட நல்லசட்ட ரீதியான பலாபலன்கள் கிடைக்கும்.

09. இம்சை மற்றும் சித்திரவதை போன்றவற்றில் இருந்து நம்மைப் பாதுகாக்க வேண்டும். (08, 09 இரண்டும் எவ்வகையிலும் குறைந்து மதிப்பிடமுடியாதவை.)

10. தான்தோன்றித்தனமாக கைது செய்வது, தடுத்து வைத்திருப்பது, சித்திரவதைக்கு உட்படுத்துவது கடுமையாக மட்டுப்படுத்துகின்றது. இறந்த காலத்துக்குப் பாதிக்கின்ற சட்டங்களை உருவாக்குவது தடுக்கப்படுகின்றது.

01. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கைது செய்வது, தடுத்து வைத்திருப்பதை செய்யமுடியும்.

02. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவ்வாறு செய்யமுடியும். பிடிவிறாந்து தேவைப்படலாம்.

03. கைது செய்யப்படும் பொழுது அதற்கான காரணத்தை சொல்ல வேண்டும். எழுத்தில் தரும்படி கேட்டால் கொடுக்க வேண்டும்.

04. உறவினர், நண்பர்கள் போன்றருடன் தொடர்பு கொள்ள இடமமளிக்க வேண்டும்.

05. வழக்கறிஞர்கின் உதவியை நாட அனுமதிக்க வேண்டும்.

06. 24 மணித்தியாலத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவேண்டும்.

07. பிணையின் அடிப்படையில் விடுதலை செய்யப்படக்கூடும். அதிக பிணை நியமிக்கப்படக்கூடாது.

08. காலம் தாழ்த்தாமல் தண்டனை வழங்குவதோ, விடுதலை செய்யப்படுவதோ நடக்க வேண்டும்.

09. குற்றம் சுமத்தப்பட்டவுடன் வழக்கறிஞரின் உதவியை நாடமுடியும் என்பதை நீதிபதி அறியத்தரவேண்டும்.

10. சந்தேகநபருக்கு எதிராக காலம் தாழ்த்தாமல் முறையதானதொரு நீதிமன்றத்தில் நீதியான ஒரு விசாரணையை பகிரங்கமாக நடத்த வேண்டும். (பாலியல் மற்றும் இளம் பராயத்தினர் பற்றிய வழக்குகளை பகிரங்கமாக நடத்தாமல் இருக்க நீதவான் தீர்மானிக்க முடியும்.

11. சந்தேக நபர் ஒருவர் குற்றவாளியாக நீரூபிக்கப்படும்வரை குற்றமற்றவராக கணிக்கப்படல் வேண்டும். சில சந்தப்பங்களில் நீரூபிக்கும் பொறுப்பு மாறக்கூடும்.

12. எந்த ஒரு நபருக்கும் தனக்கு எதிராகவே சாட்சி சொல்லவோ, ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவோ நிர்ப்பந்திக்கக்கூடாது.

13. குற்றம் செய்யப்படுகின்றபோது இல்லாத ஒரு தண்டனையோ இருந்ததைவிட அதிகமான தண்டனையோ வழங்கப்படக்கூடாது. இதற்கு வரையறைகளைப் போடக்கூடாது.

படிப்பகம்

14. ஒரே குற்றத்திற்காக குற்றவாளி இரண்டு முறை தண்டிக்கப்படலாகாது.

15. நீதிமன்றத்தீர்ப்பினால் அன்றி மரண தண்டனை வழங்கப்படலாகாது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தனிநபர் சுதந்திரத்தை இல்லாமல் செய்யமுடியும்.

16. சுதந்திரம் இல்லாமல் செய்யப்பட்டவர்களை மனிதத்தன்மையுடன் நடத்தப்ப வேண்டும். வரையறைகளைப் போடலாகாது.

17. தேசிய பாதுகாப்பு பொதுமக்கள் சமாதானம் பற்றி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படியல்லாது வேறுவகையிலான வரையறைகள் போட முடியாது.

11. 01. சட்டத்தின் முன் எல்லோரும் சமன்

02. மாற்றமோ திருத்தமோ செய்யக்கூடாததுறை. (இனத்துவம், மதம், மொழி, சாதி, அரசியலோ வேறு கருத்துக்களோ, ஆண்- பெண் தன்மை, தேசிய சமூகத்தன்மையும், உயர்ந்த ஸ்தானமும் பிரஜா உரிமை பெற்றுக்கொண்ட முறை, திருமண நிலைதாய்மை, பெற்றோரின் நிலை.)

(ஆனாலும் தேசிய மொழியைப்பற்றிய நிபுணத்துவம் பெற்றுக்கொள்ளுடம் படி குறிப்பிடமுடியும்.)

மேற்சொன்னகாரணங்களின் அடிப்படையில் பொது இடங்களில் நுழைவதைத் தடுக்க முடியாது.

மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் சிலருக்கு விசேட வசதிகள் கிடைக்கக்கூடும். உதாரணம் நலிவடைந்த நிலையில் இருப்பவர்கள் பாதுகாப்பு போன்ற வரையறைகளைத் தவிர வேறுவரையறைகள் போடப்படமுடியாது.

12. நாட்டின் விரும்பி இடத்தில் வாழவும், போகவும் வரவும் சுதந்திரம் உண்டு. (சட்டத்தின் வரையரறைகளுக்கு உட்பட்டு) நாட்டிலிருந்து வெளியே போவதற்கும் சுதந்திரம் உண்டு.

13. வெளிநாட்டிற்குப் போய் மீண்டும் வருவதற்கும் சுதந்திரம் உண்டு.

14. தனிநபர் இரகசியத்தன்மைக்கு உரிமையுண்டு. (சட்டத்தில் குறிப்பிடப்பட்டள்ள வரையறைகளுக்கு உட்பட்டு)

15. சிந்திப்பதற்கும், வணங்குவதற்கும் மற்றும் மனச்சாட்சியின் சுதந்திரம் உண்டு. (இவ்வுரிமை மட்டுப்படுத்தலாகாது.) ஏனையோருடன் தனது நம்பிக்கையை பகிர்ந்து கொள்ளுவது, பின்பற்றுவது, வெளியிடுவதுபோன்றவற்றைச் செயய் முடியும். (சட்டத்தில் குறிப்பிடப்பட்டள்ள வரையறைகளுக்கு உட்பட்டு)

16. தகவல்களை வெளியிடுவதற்கும் எந்த மொழியிலேனும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் சுதந்திரம் உண்டு. (சட்டத்தில் குறிப்பிடப்பட்டள்ள வரையறைகளுக்கு உட்பட்டு)

17. சட்டத்தின் வரையறைகளுக்கு ஏற்ப அமைதியாக கூட்டம் கூடும் சுதந்திரம் உண்டு.

18. ஸ்தாபன சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. தொழில் சங்க உரிமை நாட்டு மக்களுக்கு மாத்திரமே (சட்டத்தின் வரையறையுண்டு)

19. கலாசாரத்திற்கு, மொழிப்பாவனைக்கு சுதந்திரம் உண்டு. (சட்டத்தின் வரையறையுண்டு)

20. தொழில் செய்யவோ, தொழில் துறையை நடத்தவோ சுதந்திரம் உண்டு. (சுற்றாடல் மக்கள் சுகநலன், பண்பாடு போன்றவற்றிற்கு உள்ள வரையறைகள் நீங்கலாக.)

21. சுற்றாடலுக்கும் மக்களின் நலனுக்காகவும், போடப்பட்டுள்ள சட்டத்தின் வரையறைகள் நீங்கலாக சொத்தக்களை உடமைகளாக்கிக்கொள்ளும் உரிமை நாட்டுமக்களுக்கு உண்டு. பொதுக்காரணத்துக்காக மாத்திரம் சொத்துக்களை தமதாக்கிக்கொள்வது நீதியான நட்டஈடு வழங்கப்பட்டபின்பே நடைபெறவேண்டும்.

22. (சிறார்களின் உரிமைகள்) சகல பிள்ளைகளுக்கும் பெயரைக் கொண்டிருப்பதற்கான உரிமை. பிள்ளை 18 வயதுக்குக்குறைந்த ஒரு நபராகும். இம்சையில் இருந்து கவனிக்காமல் விடப்படுவதில் இருந்து தவறானதில் ஈடுபடுத்தப்படுவதில் இருந்து, அவமானப்படுத்துவதில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமையுண்டு. சட்டத்தின் நடவடிக்கைகளின்போது விசேட கவனிப்பு வழங்கப்படும். பாதுகாப்பு மற்றும் போசனையைப் பெறுவதற்கான உரிமையும் உண்டு. 5-14 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் சுதந்திரக்கல்வியை அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு. பிள்ளைகள் ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தல் ஆகாது.

23. எந்தவொரு நபரிடமிருந்தும் பலாத்காரமாக வேலைவாங்க முடியாது. நீதிமன்றத்தாலோ, இராணுவ விரருக்கு இராணுவப்படையாலோ வழங்கப்படுகின்ற வேலைகள் இதற்குள் அடங்கப்படமாட்டா. அவசர சந்தர்ப்பங்களில் மட்டும் நியமிக்கப்படுகின்ற வேலைகளுக்கு அடங்கப்படமாட்டாது.

24. வேழலைசெய்யும் போது சகலருக்கும் பாதுகாப்பு நிலைமையின் கீழ் அவ்வாறு வேலை செய்வதற்கு உரிமையுண்டு.

25. சமூக உரிமைகள்.

சகல நாட்டுப்பிரஜைகளுக்கும் அவசர வைத்திய சிகிச்சை, சுகாதாரப் பாதுகாப்புச் சேவை, போதுமான உணவும், நீரும், பொருத்தமான சமூக உததவிகளைப் பெறும் உரிமைகள் உண்டு.

சட்டத்தினால் இடமளிக்கப்படுகின்ற விதத்தில் அல்லாது எந்தவொரு நபரும் தமது வீட்டிலிருந்து வெளியேற்றப்படுதலோ, வீடு, உடைக்கப்படுதலோ செய்யப்படக்கூடாது.

26. பாதுகாப்பு படை, மற்றும் பொலிஸ் தொடர்பான அடிப்படை உரிமைகளில் வரையறைகள் உண்டு.

(10, 11 (1), 12, 14, 15 (3), 16, 17 மற்றும் 18)

27. அவசர காலநிலையின் கீழ் சில உரிமைகளை பலவீனப்படுத்த முடியும்.

(இனத்துவம், வகுப்பு, மதம் போன்ற விடயங்களின் அடிப்படையில் வேறுபாடு காட்ட முடியாது.

8, 9, 10(1), 10(2), 10(9), அ(11), 10(15), 13, 15, உரிமைகளை பலவீனப்படுத்த முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் (சுருக்கமாக)

மனித உரிமைகள் பிரகடனத்தைப் போலவே இங்கும் ஆரம்பத்திலேயே சொல்லப்படுவது ''சகல மனிதர்களும் சுயநிர்ணயம் பற்றிய உரிமை உள்ளவர்கள்'' என்பதேயாகும். பிரகடனத்தை ஏற்றுக்கொள்கின்ற சகல அரசுகளும் எவ்வித வேறுபாடும் இன்றி அவ்வுரிமைகளை தமது தேசத்தின் எல்லைக்குள் வாழ்கின்ற டமக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாக உறுதியளிக்கின்றனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள்.

* வாழ்வதற்குப் உள்ள உரிகைமள் பாதுகாக்கபட்டல்
* எவரும் வதைக்குபடுவதற்கோ கொடூரமாக மிருகத்தனமாக அவமதிக்கப்படுவதற்கோ கூடியவகையிரல் தண்டனைக்கோ, இடையூறிற்கோ உள்ளாக்கப்படல் ஆகாது.
* அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப்படல் ஆகாது.
* எவரையும் தான்தோன்றித்தனமாக கைது செய்யவோ தத்து வைக்கவோ கூடாது.
* குற்றம் ஒன்றிற்காக சந்தேகத்தின் கைது செய்யப்பட்டு தத்துவைப்பட்டிப்பருவர் உடனடியாக நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு வரப்படல் வேண்டும்.
* கைது செய்யப்படுவதற்கான காரணம் அந்த நேரமே அந்நபருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.
* சட்டவிரோதமாக கைது செய்யப்பட்ட ஒருவருக்கு நட்ட ஈடு பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு.
* சந்தேக நபராக சுதந்திரம் மறுக்கப்பட்ட ஒருவர் மனிதத்தன்மையாக நடத்தப்பட வேண்டும்.
* ஏற்றுக்கொண்ட பொறுபபை நிறைவேற்றாத காரணத்துக்காக ஒருவரை சிறையில் அடைக்க முடியாது.
* நடமாடும் சுதந்திரம் ஒருவருக்கு இருக்க வேண்டுமட். தான் விரும்பி நாட்டுக்கு போகவும், வரவும் விரும்பிய இடத்தில் வாழுவதற்கான உரிமையும் அதற்குள் அடங்குகின்றது. சட்டபூர்வமாக ஒரு வெளிநாட்டவரை நாட்டிலிருந்து வெளியேற்ற முடியும்.
* சட்டத்தின் முன்னால் சகலரும் சமனாகவே கணிக்கப்படுவர்.
* இறந்த காலத்தைப் பாதிக்கின்ற குற்றவியல் சட்டங்கள் இயற்றப்படல் ஆகாது.
* சகலரும் சட்டத்தின் முன்னால் தனிநபர்களான கருதப்பட வேண்டும்.
* தனிநபர் ஒருவருடைய ரகசியத்தன்மை, குடும்பம், வீடு, கடிதப்பரிமாற்றம் போன்றவை தொடர்பாக தான்தோன்றித்தனமாகவோ, சட்ட வழிமுறையில்லாமலோ தடைசெய்தல் ஆகாது.
* சுதந்திரமாக சிந்திப்பதற்கு
* நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கு
* விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கு
* கருத்துக்களை வெளியிடுவதற்கு சுதந்திரம் இருக்க வேண்டும். இதன்கீழ் செய்தகிளை பெற்றுக்கொள்ளுதலும் அவற்றை வேறுநபருக்கு வழங்குவது அடங்கும்.

படிப்பகம்

* யுத்தத்திற்காக பிரச்சாரம் செய்வது, இன, தேச மற்றும் மத குரோதங்களை ஏற்படுத்துகின்ற விதத்திலான பிரச்சாரங்களை தடைசெய்வதற்கான சட்டங்களை இயற்றுவது இப்பிரகடனத்தின் மூலம் இடம் வழங்கப்படுகிறது.

* அதேபோன்று கீழ்மைபடுத்தி நடத்துதல், எதிர்ப்புணர்விற்கு மற்றும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் தூண்டுதல் செய்யபடல் ஆகாது.

* அமைதியாக கூடுதல், மற்றும் சங்களை நடத்துதல் உரிமைகளாக கணிக்கப்படுகிறது.

* திருமணம், முடிக்கக்கூடிய வயதில் ஆண் - பெண் இருசாரருக்கும் மணம் முடிக்கவும், குடும்பமாகவும், மணமுடித்தும் போதும், திருமணத்தை நடத்தும்போதும், அதனை முடிவுக்கு கொண்டுவரும்போதும் உரிமைகளில் சமத்துவம் உள்ளது என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்

* எவ்வித வேறுபாடும் இன்றி சகல பிள்ளைகளுக்கும் சம உரிமையுண்டு, ஒரு பிள்ளைக்கு சரியான பாதுகாப்பு இருக்க வேண்டும். பிள்ளைக்கு தேசியத்திற்கான உரிமையிருக்க வேண்டும்.

* பொதுப்பணிகளில் ஈடுபடுவதற்கு நாட்டு மக்கள் சகலருக்கும் உரிமையிருக்க வேண்டும்.

* வாக்கு கொடுப்பதற்கும் வாக்குப் பெறுவதற்கும் உரிமையிருக்க வேண்டும்.

* அரச சேவைகளிலர் ஈடுபடுவதில் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

* சகலருக்கும் சட்டத்தின் பாதுகாப்பு இருக்க வேண்டும்.

* எந்த ஒரு நபரினதும் உரிமை மறுக்கப்படுகின்றபோது அந்த நாட்டிலேயே அதற்கான பரிகாரத்தைப் பெற்றுக்கொள்கின்ற உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும்.

பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பாக சருவதேச பிரகடனத்திற்கூடாக பாதுகாக்கபடுவதை எவை?

அங்கு முதலவாதாக குறிப்பிடப்படுதம் கோட்பாடு இது தான். சகல மக்களும் சுயநிர்ணயதுட பற்றிய உரிமையுடயவைர்கள். இதனால் கருதுப்படுவதுயாதெனிரல் தங்களது அரசியல் நிலைமையை தாமே தீர்மானித்துக் கொள்வதற்கும், பொருளாதார சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை தாங்களே திட்டம் இட்டுக்கொள்வதற்கும் சுதந்திரமாக உரிமையுள்ளது என்பதாகும். தாம் அவ்வாறு தீர்மானிக்கின்ற விடயத்தின் பலாபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தமக்கு உரித்தான இயற்கை வளங்களை பயன்பாட்டில் ஈடுபடுத்தவும் அவர்களுக்கு சுதந்திரமான உரிமையுண்டு. இப்பிரகடனத்தை ஏற்றுக்கொள்கின்ற சகல அரசுகளினாலும் தமது தேச எல்லைவக்குள் வாழுகின்ற சகல நபருக்கும் அவ்வுரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கதான உரிமையிருக்கிறது. அங்கு குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளின் சாராம்சம் இதுவே.

* தொழில் செய்யும் உரிமை.

* தொழிலை தேர்ந்தெடுக்கும் உரிமை.

* வேலைசெய்யக்கூடிய நீதியான லாபகரமான நிலைமை.

* சமனான வேலைக்கு சமனான சம்பளம்.

* பாதுகாப்பானதும், சுகாதாரமுமானதுமான வேலைசெய்யும் உரிமை.

* ஓய்வும் பொழுது போக்கும் கிடைத்தல்.

* தொழில் சங்கங்களை உருவாக்குவதற்கும் அவற்றில் ஈடுபடுபடுவதற்கும் பகிஸ்கரிக்கும் உரிமை.

* சமூக பாதுகாப்பு உறுதி.

* குடும்பத்தின் பாதுகாப்பிற்கும், உதவி செய்தலுக்கும்.

* தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்குமான விசேட பாதுகாப்பு ஒழுங்கு.

* போதுமான வாழ்க்கை வசதியிருத்தல், (உணவு, உடை, மற்றும் வீடு உள்ளிட்ட)

* பட்டினியில் இருந்து விடுபடுவதற்கான அடிப்பபடை உரிமை.

* பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகூடிய உடல், மானசீக சுகநலன்.

* ஒழுங்கான கல்வியைப் பெறுதல்.

* நடுத்தரக் கல்வியை இலகுவாக பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் இருத்தல்.

* உயர்கல்வியை எவரும் பெற்றுக்கொள்வதற்கான வழிஜவகைகள் இருத்தல்.

* தமது பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டிய கல்வி தொடர்பாக பாடசாலைகளைத் தெரிந்து கொள்வதற்கும், அவர்களுடைய மதம், மற்றும் தார்மீகக் கலட்வியை தீர்மானிப்பதற்கும் பெற்றோர்களுக்கும் சட்டபூர்வ பாதுகாவலர்களுக்கும் உரிமையிருத்தல்.

* சகலருக்கும் கலாசார வாழ்வில் பங்குபெறவும், அதை ரசித்து இன்புறுவதற்குமான உரிமை.

* விஞ்ஞானக்கண்டு பிடிப்புகளின் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு

* விஞ்ஞான ஆய்வுகள், மற்றும் படைப்புச் செயற்பாடுகள் பற்றி கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவற்றால் பலாபலன்களை அனுபவிப்பதற்குமான உரிமையிருத்தல்.

www.padippakam.com

பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும்இல்லாதொழிப்பது பற்றிய உடன்பாடு.

1979 டிசெம்பர் 18ம் திகதி ஐ. நா. பொதுச்செயலாளர் அங்கீகரிக்கப்பட்டு 1981 செப்டெம்பர் 03ம்திகதியிலிருந்துஅமுலுக்கு வந்தது.

இலங்கையும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

மனித உரிமைகள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஆண் -பெண் சம உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், பொருளாதார, சமூக கலாசார அரசியல் குடியியல் உரிமைகள் சமமாக அனுபவிக்கும் உரிமையாகும்.

பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் இடம்பெறுவது மனித வர்க்கத்தின் கௌரவத்தை மீறும் செயலாகும். அதன் மூலம் அரசியல், சமூக கலாசார மற்றும் பொருளாதார வாழ்வில் சம பங்கேற்புக்கும், சமூகத்தினதும் குடும்பத்தினதும் முன்னேற்றத்துக்கும் மனித இனத்துக்கும் சேவை புரிவதற்கும், தமது திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும் தடங்கள் ஏற்பாடும்.

ஒரு நாட்டில் வறுமைதலைவிரித்தாடும்போது பெண்களுக்கு உணவு, சுகாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு ஆகியன குறைவாகவே கிடைக்கும்.

ஆண் - பெண் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு நீதி, நியாயத்தின் மீது அமைந்த சர்வதேச பொருளாதார முறைமையொன்று பயன்மிக்கதாகும்.

இனவாதம் நேரடி அல்லது மறைமுக காலனித்துவ ஆக்கிரமிப்பு பலவந்தம், நாடொன்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடுதல் ஆகியன ஆண் - பெண் சம உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக அமைவனவாகும்.

சர்வதேச ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் ஆயுதக்களைப்பு, இறைமை, சுதந்திரம் ஆகியவற்றை ஏற்படுத்தலும், ஆண் - பெண் சமத்துவம் ஓங்குவதற்கும் காரணமாக அமையும்.

நாட்டின் அபிவிருத்திக்கும், உலகில் நன்மைக்கும் சகல துறைகள் சார்ந்த பெண்களினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

குடும்பத்தினதும் முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு பெரு முக்கியத்துவம் பெறுவது எனினும், இன்னும் அதற்கு உரிய வரவேற்பு கிடைத்துள்ளதாக தெரியவில்லை. தாய்மைப்பேற்றுக்கு முக்கியத்துவத்தைக் காண்பிக்க வேண்டியதுடன், பிள்ளைச் செல்வங்களை வளர்த்து ஆளாக்குவதற்கு ஆண் - பெண் ஆகிய இருபாலாரினதும் பொறுப்பாகும் பிள்ளைப்பேறு காரணமாகபெண் எதிர்நோக்கும் பாரபட்சங்கள்இல்லாத்தொழிக்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு உரிய வேலை ஆண்களுக்கு உரிய வேலை என்றஅடிப்படையில் வேறு பிரித்தறியும் குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ நிலவகூடாது.

மேற்போந்த விடங்களின்படி பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதில் உடன்பாட்டில்கைச்சாத்திடப்பட்டுள்ள நாடுகள் இணங்குகின்றன.

பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும்இல்லாதொழிப்பது பற்றிய உடன்பாடு-

(உறுப்புரை 3ப் பார்க்கவும்)

படிப்பகம்

உடன்பாட்டின் வாசகங்கள் (இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த இணங்குகியுள்ளது.)

01. முதல்வாசகத்தில் பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் எவையென்பது விபரிக்கப்படுகிறது. ``அரசியல், சமூக, கலாசார, சனசமூக துறைகளிலும் மனித உரிமைகளையும், அத்தியாவசிய சுதந்திரத்தையும் அனுபவிப்பதும் பிரயோகமும்,

* பலவீனமாக்கல்வரையறுத்தல்

* இல்லாமற் செய்தல்

* உட்படஅவ்வாறு பாரபட்சங்கள் நிலவுவதை மறுப்பதும் இடம்பெறுகின்றது.

02. சார்பான நாடுகள் பெண்களுக்கெதிரானசகல பாரபட்சங்களையும் எதிர்க்கின்றன. அவற்றை இல்லாதொழிக்கவும் கொள்கையொன்றையும் பின்பற்றவும் உடன்படுவதுடன், அதன்படி பின்வருவனவற்றை ஆற்றுகின்றன:-

(அ) ஆண் - பெண் சமத்துவம் பற்றியகோட்பாடு இதுகாணும் தேசிய சட்டத்திட்டங்களுக்கு உட்படுத்தப்படவில்லையாயின், உட்படுத்தலும் அந்தக் கோட்பாடுகளை நடைமுறையின்படி சட்டத்தினால் உட்படுத்துவதும்.

(ஆ) பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள் சட்டத்தால் தடைசெய்தலும், தேவைக்கேற்றவாறு உரிய தண்டனைகளை விதித்தலும்.

(இ) ஆணுக்குரியது போன்று அதே அடிப்படையில் பெண்ணின் உரிமைகள் தொடர்பில் சட்டத்தால் கூடுதல் பாதுகாப்பு அளித்தலும், அந்தப் பாதுகாப்பு தேசியநடுவர் குழுக்கள் மற்றும் மக்கள் நிறுவனங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) பெண்களுக்கு பாரபட்சம் காட்டும் எந்தவொரு செயலையும் செய்யாதிருக்கவும், சகல அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்கள் இதன்படி நடவடிக்கை மேற்கொள்ள உறுதிபூணுதல் வேண்டும்.

(உ) அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குப் புறம்பாக பிற எந்தவொரு நபரும் நிறுவனமும் அவ்வாறு செயற்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

(ஊ) பெண்களுக்கு பாரபட்சம் காட்டல், உள்ளடக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்கள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதற்கு இனத்துவம் செய்வதற்கு அவசியமான சட்டங்களும், சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(எ) பெண்களுக்கெதிரான பாரபட்சமாக அமைந்ததாகக் கருதப்படும் தேசிய குற்றவியல் சட்டங்களை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. சரத்து வாசகம்

இந்த உடன்பாட்டுடன் சம்பந்தப்பட்ட சகல நாடுகளாலும் சமூக, அரசியல் பொருளாதார, கலாசார துறைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் பால்நிலைச் சமத்துவம் பேணப்படும் விதத்தில் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களை அனுபவித்தலையும் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவும் பெண்களின் பூரண முன்னேற்ற உறுதிப்படுத்தவும் தேவையான சட்டத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

4. சரத்து வாசகம்

01 அரசாங்கங்களால் பால்நிலை சமத்துவத்தை தாமதமின்றி செயற்படுத்துவதற்காகக்

கையாளப்படும் தற்காலிக திறமுறைகள் (ஏுவசயவயசநள) பாரபட்சமானவையாக கருதப்படமாட்டாது. எனினும், சமமற்ற பாரபட்சமானவையாகவும் கருதப்படும் நிலைமைகள் தொடர்ச்சியாக நிலவலாகாது.

02. தாய்மைப் பேற்றைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயற்முறைகள், பாரபட்சமானவையாக கருதப்படுதல் ஆகாது.

5. சரத்து வாசகம்

(அ) பாலியல் உயர்நிலை, தாழ்நிலை மீது அமைந்த உணர்வுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை இல்லாதொழிப்பதன் பொருட்டு, சமூக, நடத்தைகளிலும், கலாசார நடைமுறைகளிலும் வேறுபாடொன்றை ஏற்படுத்த வேண்டும்.

(ஆ) பிள்ளைகளின்தேவைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டியதுடன், பிள்ளைகளை வளர்த்தெடுத்தல், ஆண் - பெண் இருபாலாரினதும் பொதுக்கடப்பாடாக இணங்காணப்பட வேண்டும். அதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. சரத்து வாசகம்

சகல விதங்களிலுமான பெண்கள் வியாபாரம் மற்றும் பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்தலை தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(2ஆம் பகுதி)

7. சரத்து வாசகம்

அரசியல் மற்றும் மக்கள் செயற்பாடுகளில் பெண்களுக்கெதிரான ஓரங்காட்டங்களை இல்லாதொழிப்பதற்கான பொருத்தமான திறமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

(அ) குறிப்பாக, சகல வாக்கெடுப்புக்களிலும் வாக்களிப்பதற்கும், மக்கள் பிரதிநிதித்துவத்திற்காக தேர்தலில் நிற்கவும்.

(ஆ) அரசாங்கத்தினது கொள்கைகளை ஆக்கலில் பங்கேற்றல், அவற்றை அமுல்படுத்தல்,

(இ) நாட்டின் மக்கள் அரசியல் வாழ்வுடன் தொடர்புபட்ட அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சங்கங்கள், இயக்கங்களின் செயற்பாடுகளில் பங்குபற்றவும்.

ஆண்களைப்போன்றே சமமான உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

8. சரத்து வாசகம்

ஆண்கள் போன்றே சமமானவாறு சர்வதேச விவகாரங்களிலும், அமைப்புகளிலும், அரசாங்கத்தின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான திறமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

9. சரத்து வாசகம்

இனத்துவத்தைப் பெற்றுக் கொள்ளல், பாதுகாத்தல் மற்றும் மாற்றுதல் தொடர்பாக ஆண்களுக்குள்ள உரிமைகளைக்குச் சமானவையாக பெண்களுக்கும் உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாட்டவர் ஒருவருடன் திருமணஞ் செய்தமைக்காக பெண்களுக்கு பாரபட்சம் காட்டுதலும், வேறுபாடுகளைப் பலவந்தமாகச் சுமத்துவதும் இழைக்கப்படலாகாது.

பிள்ளைகளின் இனத்துவம் சமமானதாக அமைதல் வேண்டும்.

www.padippakam.com

10. சரத்து வாசகம்

கல்வித்துறையில் சமமான உரிமைகளும், வாய்ப்புகளும் அளிக்கப்பட வேண்டும்.

(அ) குறிப்பாக, தொழில்வாய்ப்பு, தொழில் வழிகாட்டுகை (Carcur Guidance) ஆகியவற்றுக்காக கல்வித்துறையில் பிரவேசிப்பதும், கிராமிய நகர என்ற பாகுபாடின்றி சமமான வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும். அது முன்பள்ளி (Pre-School) சாதாரண பாடசாலைகள் தொழில்நுட்ப, தொழில்நிலைசார், உயர் தொழில்நுட்ப முதலிய சகல நிறுவனங்களிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) பாடவிதானம் (Chrriculum) பரீட்சைகள், ஆசிரியர் குழாம் பாடசாலைகளில் இடவசதிகள், மற்றும்உபகரணங்கள் சமமானவாறு கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஆண்கள் - பெண்களின் கடமைப்பொறுப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் எண்ணக்கருக்கள் (Concepts) இருப்பின் அவற்றை மாற்றியமைப்பதற்கு கலவன் கல்வி, பாடசாலைப் புத்தகங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பதன் மூலமும் கற்பித்தல் முறைமைகள் (Teaching Mcthodology) மூலமும் அவை ஒழிக்கப்பட வேண்டும்.

(ஈ) புலமைப்பரிசில்கள் மற்றும் கல்வித்துறைசார்ந்த வசதிகள் சமமானவையாக அமைதல் வேண்டும்.

(உ) எழுத்தறிவு மற்றும் சில ஆண் - பெண்களின் கல்வி இடைவெளிகளை இல்லாமற் செய்யும்பொருட்டு, துரித கல்வி வேலைத்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

(ஊ) மாணவிகள் பாடசாலையைவிட்டு நீங்கிச் செல்வதற்குள்ள வாய்ப்புக்கள்அதிகமாக உள்ளமையால், அவை குறைக்கப்படவேண்டும் என்பதுடன், பாடசாலையை விட்டு விலகிய பெண்பிள்ளைகளுக்கும், பெண்களுக்குமான விசேட நிகழ்ச்சிதிட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்.

(எ) விளையாட்டு, உடலியற்கல்வி ஆகியவற்றுக்கானசம வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

(ஏ) குடும்ப நல சுகாதாரம், நலநோம்புகையுடனான கல்விசார் தகைவிலான்களைப் பெற்றுக்கொள்வதில் சமானவாய்ப்புக்கள்

(11 ஆவது வாசகம்)

தொழில்வாய்ப்புத்துறையில் சமமான உரிமைகளை உறுதிப்படுத்துவதன் பொருட்டு,

(அ) வேலைசெய்வதற்கான உரிமையை வேறு பிரிக்க முடியாத ஒரு மனித உரிமையாக்குதல்.

(ஆ) தொழில்வாய்ப்புக்களுக்காக தெரிவு செய்யப்படுவதானது ஒரே அடிப்படையில் ஒரேசேவை வாய்ப்புக்களின்படி நிகழவேண்டும்.

(12 ஆவது வாசகம்)

01 குடும்பத்திட்டமிடல் (குயஅடைல 'டயபெைபெ) விடயங்கள் உள்ளிட்ட சகல சுகாதார வசதிகளும் சமமாக வழங்கப்படவேண்டும். அந்தத்துறையில் பாரட்சமான செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

02. எனினும், பிள்ளைப்பேற்றுக்காலம் (கர்ப்பகாலம்) பிள்ளைப் பேறு (பிரசவம்) பிரசவத்தின் காலம் தொடர்பில் உரிய சேவைகளை வழங்குவதும், பாலூட்டும் காலத்தில் போதிய

படிப்பகம்

www.padippakam.com

போசனையூட்டங்கள் கிடைக்கப்பெறுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(13 ஆவது வாசகம்)

பொருளாதார சமூக வாழ்வின் ஏனைய சந்தர்ப்பங்களின் எனின்,

(அ) குடும்ப மரபு உரிமை மற்றும் நன்மைகளைப் பெறுமிடத்து,

(ஆ) வங்கிகள், ஈட்டுக்கடன்கள் பெறுமிடத்து,

(இ) விளையாட்டு, கேளிக்கை மற்றும் கலாசார நடவடிக்கைகளில் சமமாகக் கருதப்படுவது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(14 ஆவது வாசகம்)

01. குடும்பத்தின் பொருளாதார வாழ்வில் பெண்களிடமிருந்து கிடைக்கப்பெறும் ஊழியத்தை மதிப்பிடும் முறையொன்று பிரயோகிக்கப்பட வேண்டும்.

(அ) சகல அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் பெண்களின் பங்களிப்பு.

(ஆ) குடும்பத்திட்டமிடல் தகவல்கள்மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளளல்.

(இ) சமூகப் பாதுகாப்பு என்பதிலிருந்து நேரடி அனுகூலங்களைப் பெறுவது உறுதியானதாகவும் நிலையானதாகவும் அமைதல் வேண்டும்.

(ஈ) பின்வரும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* தொழிலொன்றைச் சுதந்திரமாக தெரிவு செய்தல்.
* பதவி உயர்வுகளைப் பெறுதல்.
* தொழில்நிலைபாதுகாப்பு, தொழிலின் பிற நிவாரணங்கள், சேவை நிபந்தனைகள் குறித்துரைக்கப்பட்டிருத்தல்.
* தொழிற்பயிற்சி, இடைக்காலப் பயிற்சி.

(உ) ஓய்வுபெறல், தொழில்வறிதாகல், நோய்வாய்ப்படல், உடல் ஊனமுறல், வயது முதிர்தல், பலவீனமுறல் ஆகிய சந்தர்ப்பங்களின்போது சமூகப்பாதுகாப்பினை பெறுவதற்கும் சம்பளத்துடனான விடுமுறை பெறுவதற்கானஉரிமை.

(ஊ) குழந்தைப் பேற்றின்போது, விசேட பாதுகாப்பு உள்ளிட்ட சுகதார நலசேவைகள்.

02. திருமணம், தாய்மைப்பேறு காரணமாக பெண்களுக்கு பாரபட்சம் காட்டுவதை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(அ) பிரசவகால விடுமுறை அல்லது திருமணஞ்செய்தல் காரணமாக வேலையைவிட்டு நீக்குவதற்கு தண்டனையுடன் கூடிய குற்றமாக மாற்ற முடியும்.

(ஆ) ஆற்றிவந்த சேவை, முதுநிலைமை சமூகக் கொடுப்பனவுகள் ஆகியன உரித்துடையதாக பிரசவகால விடுமுறை முறையொன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

(இ) குடும்பத்துக்குரிய கடமைகள், சேவைபுரியும் இடத்து கடமைகள் ஆகியவற்றை நடாத்திச் செல்வதற்கு உசாத்துணை சமூகசேவை முறையொன்று ஏற்படுத்தப்படுவதும், பிள்ளைகளைக் கவனிப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்படுவதும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

படிப்பகம்

(ஈ) கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் கேடு விளைவிக்கக்கூடிய கருமங்களில் ஈடுபடும் பெண்களுக்கு விசேட பாதுகாப்பளித்தல்.

03. விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப முறைகளின் விஞ்ஞானமும் அவற்றைக் கையாண்டு மேற்போந்த விடங்களுடன் தொடர்பான சட்டத்திட்டங்களை அடிக்கடி ஆராய்ந்து தேவையான மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்.

* சகல சனசமூக நிலையங்களிலும் பங்கேற்றல்.

* விவசாயக்கடன், விற்பனை வசதிகள், காணிமற்றும் விவசாய மறுசீரமைப்பு நடவடிக்கையின்போது சமமான கரிசனை பெறுதல்,

* வீடு, துப்புறவேற்பாடு, மின்சாரம், நீதிவழங்கல், போக்குவரத்து, செய்திப்பரிமாற்றம், ஆகியன சார்ந்த வசதிகள்கிராமப்புற பெண்களுக்கும் கிடைக்கப்பெறுவதே ஏற்றங்கீகரித்தல் வேண்டும்.

4 ஆம் பகுதி

(15 ஆவது வாசகம்)

01. சட்டத்தின் முன்னிலையில் ஆண்களுக்குச் சமமான நிலைமையொன்று பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

02. சிவில் சட்ட நடவடிக்கைகளில் அந்தச் சட்ட அதிகாரத்தை அமுல்படுத்துமிடத்து சமமான வாய்ப்புக்கள் பெண்களுக்கும் இருத்தல் வேண்டும். உடன்படிக்கைகளை ஏற்படுத்தல், உடைமைகளின் கட்டுப்பாடு, ஆகியன பற்றியசமமான உரிமைகள் காணப்படவேண்டியதுடன் எந்தவொரு நியாயதிக்க நிறுவனத்தினதும் சரிசமானமாகக் கருதப்படுதல் வேண்டும்.

03. பெண்களின் சட்டரீதியான அதிகாரத்தை வரையறைக்குட்படுத்துமாறு உருவாக்கப்பட்டுள்ள உடற்பாடுகள் மற்றும் பிற தனிப்பட்ட ஆவணங்கள் இரத்துச் செய்யப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

04. பிரயாணங்கள் மேற்கொள்ளல் வீடு, வசிப்பிடத்தைத் தெரிவுசெய்யும் சுதந்திரம் தொடர்பான சட்டத்தின் மூலம் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

(16 ஆவது வாசகம்)

01. திருமணம் குடும்ப விவகாரங்கள் பற்றிய பெண்களுக்கெதிராக பாரபட்சம் காட்டுவதை இல்லாதொழிப்பதற்கு அவசியமான திறமுறைகளை ஆக்குதல் வேண்டும்.

(அ) திருமணம் சார்ந்து சம உரிமைகள்.

(ஆ) வாழ்க்கைத் துணையொன்றைத் தெரிவுசெய்தல், விருப்பைத் தெரிவித்தல் ஆகியவற்றை பூரண சுதந்திரமான ஒரு நிலைமையின்கீழ் மேற்கொள்ளல்

(இ) திருமணததின்போதும், விவகாரத்தின்போதும் சமமான உரிமைகளும், கடமைகளும்.

(ஈ) பிள்ளைகளின் விருப்புகளுக்கு முன்னுரிமைகளிக்கும்இடத்து சமமான உரிமையும், கடமையும்,

(உ) பிள்ளைகளின் எண்ணிக்கை, பிள்ளைகளிடையேயான வசதிடைவெளி ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கான சம உரிமையையும், அதற்கவசியமான தகவல்களையும் அறிவையும் பெறல்.

(ஊ) பிள்ளைகளின் பாதுகாவலர்களாதல், பொறுப்புதாரர்களாதல், பிள்ளைகளைத் தத்தெடுத்தல்,

பற்றியதாக உள்ள சட்டங்களின் கீழ் சமமான உரிமையும் கடமையும் இருத்தல்.

(எ) தனிப்பட்ட உரிமைகள் சமமானதாயிருத்தல் வேண்டும். எனின், குடும்பப் பெயர், தொழில், தொழிலொன்றைத் தேடிக்கொள்ளல் ஆகியவற்றில் சமமான உரிமைகள் இருத்தல்.

(ஏ) சொத்துரிமை, முகாமைத்துவம், நிர்வாகம், உடமைகளை அனுபவித்தல், விற்றல் ஆகியனபற்றி கணவருக்கும், மனைவிக்கும் சமமான உரிமைகள் இருத்தல்.

ஆகியன தொடர்பில் சமநிலை பேணப்படுவது உறுப்படுத்தப்பட வேண்டும்.

மேற்போந்த 16 வாசகங்களுக்கு மேலதிகமாக மேலும் 14 வாசகங்கள் (17-30) வரையானவை இந்த உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த வாசகங்கள் ஐ.நா. சபையின் செய்பாட்டுடன் தொடர்புபட்டவையாகும்.

சிறுவர் உரிமைகள்

இன்று முழு உலகமும் சிறுவர்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஏதோ காரணத்தால் சில நாடுகள் பிள்ளைகளை மிகவும் கீழ்த்தரமாக நடமத்துகிறார்கள்.

பொதுவாக எமது நாட்டில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளில் இன்றும: பிள்ளைகளை அடிமைகளாகப் பாவிக்கின்றார்கள். இவர்களை வேலைக்காக இந்நாடுகளிரல் பாவிப்பது அவற்றின் கலாசாரத்திற்கு ஏற்ற வழக்கம் என்று கூறுகின்றார்கள்.

எகிப்து போன்ற சில நாடுகளில் இன்றும் ஆண் - பெண் பிள்ளைகளின் பாலியல் உணர்ச்சிகளை அடக்கச் செய்வதற்காக ஒழுங்கு முறைகளை பாவனையில் கொண்டிருப்பதாக அறியப்படுகிறோம். தமது சமய, கலாசார, கோட்பாடுகளுக்கு அடங்கியதாக இச்செயற்முறையை அவர்கள் கருதுகிறார்கள். இதனால் விஷேசமாக ஐக்கிய நாடுகளின் தாபனம் சில ஒப்பந்தங்கள் மூலம் மேற்கூறிய செயற்பாடுகளை தவிர்க்குமாறு பலாத்காரம் செய்துள்ளது.

இவற்றுடன் ஒப்பிடும்போது எமது நாட்டின் நிலைமை பெருமைப்படவேண்டியதொன்றாகும். என்றாலும், பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்க வெண்டும். என்ற சிந்தனை மிகவும் பெறுமதி வாய்ந்ததேயாகும். அண்மையில் ஐக்கிய நாடுகளின் தாபனத்தில் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தில் எமது நாடும் கைச்சாத்திட்டது. இதனால் சட்டமூலம் தேவையான வழி வகைகளை பாவனைக்கு கொண்டு வர வழிவகுத்தது ஒரு சிறப்பான அம்சமாகும். கடந்த வருடம் சிறுவர்களை பாலியல் செயற்பாடுகளில் பாவிப்பதற்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டன. உல்லாசப் பயணத் தொழிலுடன் வளர்ந்த பாலியல் சம்பந்தப்பட்ட செயல்கள் பிள்ளைகளினிடையே பெருமளவில் பரந்து வளர்ந்து காணப்பட்டன. மிகவும் சில வெளிநாட்டவர்கள் எமது வழக்குமன்றங்களில் சட்டத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

எமது குற்றவியல் நீதிக்கோவைக்கு பிள்ளைகளை ஆபாசத்தில் ஈடுபடுவதற்கு எதிராக கடும் தண்டனைகளை அளிக்கக்கூடிய சட்டங்களை உட்படுத்துவதின் மூலமே இவற்றை விலக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முடியும். அதற்கேற்ப சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இந்தச் சட்டங்கள் இதற்கான அத்திவாரமாக இருக்கும்.

பிள்ளைகளின் உரிமைகளைப் பற்றிய இணக்கத்தை பாவித்து அவர்களின் உரிமைகளை அரசியல் யாப்பிற்குள் அடக்கிக்கொள்வதால் இந்த யாப்பின் பெறுமதியை வலுவாக்கிக்கொள்ளலாம். இதுவரை எமது அரசியல் யாப்பில் சிறுவர் உரிமைகள் பற்றிய கொள்கைகள் அடக்கப்படவில்லை. பிரசை என்பதின் அர்த்தம் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்வது முக்கியமான ஒரு செயலாகும்.

பிறந்த குழந்தைக்கு பெயரைச் சூட்டவேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்காவிடிலும் பொதுவாக சகலரும் தமது குழந்தைகள் பிறந்தவுடன் பெயர்களை சூட்டுகிறார்கள்.

உடம்பிற்குத் தீங்குவிளைத்தல், உரிமைகளை அலட்சியப்படுத்தல், பிழையான செயல்களில் ஈடுபடுத்தல், ஏசிப்பேசுதல் போன்ற சந்தர்ப்பங்களில் இருந்து பாதுகாப்பு உரிமைகோருவோருமுண்டு.

எனவே இப்படியான குற்றங்களில் இருந்து பாதுகாப்பை வழங்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும்போது தமது கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்க ஊழியர் இப்படியான குற்றங்களில் ஈடுபட்டால் அரசுக்கு எதிராக வழக்கைத் தொர எமக்கு வழியுண்டு.

அரச தாபனங்களுடன் சம்பந்தப்பட்ட சிறுவர்களுக்கு இந்த உரிமை நேரடியாக சொந்தமாகிறது.

www.padippakam.com

இதனால் அரச நிர்வாகத்திற்குட்பட்ட சிறுவர் நிலையங்கள் பாடசாலைகள், விஷேசமான கவனத்தை இதுசம்பந்தமாக செலுத்த வேண்டியுள்ளது. சிறுவர்களை அடித்தல், பேசுதல் நையாண்டி பண்ணுதல் போன்றவை குற்றமாகும். புத்திமதிகள் சொல்லும்போது மிகவும் கவனமாக யோசித்து சொற்களையும், சொரூபத்தையும் கையாள வேண்டும்.

குற்றவியல் வழக்கு தாக்குதல்களில் சிறுவர்களுக்காக விஷேச சட்டங்களை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கல்வி போதனையை ஐந்து முதல் பாதினான்கு வயது சிறுவர்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்பதை சிறுவர்களின் உரிமை என்று நாம் ஏற்கிறோம். இதுவரை எமது கல்விச்சட்டங்களில் இந்தக் கொள்கை ஒரு நிச்சயமானதாக உட்படுத்தவில்லை.

ஆனால், இதை அடிப்படையான உரிமை என்று ஏற்றுக்கொள்வதுடன் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை கட்டாயப்படுத்த சட்டங்களை இயக்க அரசு ஏற்ற ஒழுங்குமுறைகளை எடுக்க வேண்டும். இதற்குத் தேவையான ஒழுங்குமுறை வசதிகளை உருவாக்காமல், சட்டத்தின் மூலமே இந்தக் கொள்கைகளை அமுலக்கு கொண்டு வரலாம் என்பது சந்தேகத்திற்கு இடமானது.

சிறுவர் அடிப்படையான உரிமைகளை மேலும் பலப்படுத்தும்முகமாக சிறுவர்களை தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தக்கூடாது என்பதை புதிய அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாகத்திற்குட்பட்ட சிறுவர் நிலையங்கள் பாசாலைகள் உள்ள சிறுவர்களை கடைக்கு பண்டங்களை வாங்கவோ, தண்ணீர் எடுப்பதற்காக கிணற்றடிக்கோ, விறகு எடுக்க காட்டிற்கோ அனுப்பி ஏதாவது தீங்கு அச்சிறுவருக்கு ஏற்பட்டால் அந்த அதிகாரி பொறுப்பை ஏற்கவேண்டும். இந்தக் குற்றத்தை சீர்படுத்த தற்போது பாவனையில் உள்ள குடியியல் சட்ட நிவாரணங்கள் மிகவும் சிக்கலானாத. இது அடிப்படையான உரிமை என்பதால் நேரடியாக பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளை அரசியல் யாப்பில் உள்ளடக்கப் படுகிறது.

அண்மைக்காலத்தில் இருந்து 18 வயதுக்கு குறைந்த சகலரையும் சிறுவர்கள் என்றே அழைக்கவேண்டும் என்று சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளது.

(சிறுவர் உரிமைகளைப்பற்றிய ஒப்பந்தத்தை உறுப்புரை 2ப் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com

சிறுவர் நிந்தனையும், கொடூரங்களும்

இரக்கம், காட்டாமல் அலட்சியப்படுத்தல், பயமுறுத்தல், அச்சுறுத்தல், மனதை புண்படுத்தல் போன்றவற்றை நாம் நிந்தனை என்போம். ஆனால், இந்த செயல்கள் எல்லாவற்றுக்கும் தண்டனை அளிக்க கூடிய குற்றங்கள் அல்ல.

சிறுவரின் உடலுக்கோ அல்லது மனசௌக்கியத்திற்கோ தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களை கொடூர செயல்களாக நாம் காண்போம். hararment, நிந்தனை செய்தல், அலட்சியப்படுத்தல், ஏசுதல், abandoing, என்பவற்றை கொடூர செயல்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

சிறுவர் என்பவர் 18 வயதுக்குக் குறைந்த ஆண் - பெண் ஆவார். இந்தக்குற்றங்களுக்கு நாங்கள் முறைப்பாட்டை தாய் தந்தை அல்லது பாதுகாவலருக்கு எதிராக பதிவு செய்யலாம்.

தற்காலிக பாதுகாவலரான ஆசிரியர், நிர்வாக உத்தியோகத்தர்களும் இந்தக் குற்றங்களைப் பொறுத்தவரை பாதுகாவலர்களாக கருதப்படுவார்கள். இந்தக் குற்றங்கள் எமது (1995 - எண் 22 எம்ணஸ்ட்) குற்றவியியல் சட்டத்தில் 308 (அ) பிரிவின் கீழ் நீதிமயமாக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு குறையாத தண்டனையும், 10 வருடங்களுக்கு உட்பட்ட சிறைத் தண்டனையையும் சிறுவருக்கு நட்டஈடும் வழங்க வேண்டும். இந்தக் குற்றங்களுக்கான வழக்கை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

1995முன் இம்மாதிரியான வழக்கை மஜிஸ்திரேட் வழக்கு மன்றத்தில் நடத்தினர். இந்நீதிமன்றத்தில் குற்றவியியல் நீதி (314, 315, 316) பிரிவுகளின் கீழ் காயம் பட்ட சிறுவர்களின் வழக்குகளை மட்டும் நடத்தினர்.

அவ்வழக்கை தொடர வைத்திய பரிசோதனையில் அறிக்கை இருப்பின் மட்டுமே இதை கொண்டுசெல்ல முடியும். மன சௌக்கியத்திற்கு தீங்கு விளைவித்த சந்தப்பங்களில் ஆவழக்குத்தொடருவரு இயலாத காரியமாக இருந்தது.

சிறுவர் பாலியல் ஆபாசம்

முன்னைய குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டன. ஆனால், அவை மிகச் சிலதானவாக இருந்தது. இதனால் 1995 எண் 22 திருத்திய சட்டக்கோவைக்கு இணங்க புதிய குற்றங்கள் சிலவற்றை இந்தச்சட்டத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

286 (1) பிரிவு கீழ்வருபவை.

அ. மிருகங்களைப் போன்ற பாலியல் செயற்பாடுகளில்,இவை போன்ற காட்சிகளை காண்பித்தல் புகைப்படங்களிலோ திரைப்படங்கள் போன்றவற்றில் பங்குபற்ற சிறுவரை பணம் கொடுத்து உபயோகிப்பது அல்லது பலாத்காரம செய்வது

ஆ மேற்கூறிய புகைப்படங்கள் போன்றவற்றை விற்பனைசெய்வது ....

இ. இம்மாதிரியான செயல்களில் ஈடுபடுவதற்காக சிறுவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களாக முன்வந்து அனுமதி தருவது.

ஈ. சிறுவர்களின் ஆபாசப் புகைப்படங்கள் விநியோகித்தல், தம்மிடம் வைத்திருத்தல், பிரசுரித்தல், இவற்றைப்பற்றிய விளம்பரப்படுத்தல்.

தண்டனை:-

10 வருடங்களுக்கு மேற்படாமல் 2 வருடங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனை.

ஆபாசப் புகைப்பட பட்டி () போன்ற வேலைக்கு கிடைப்பின் உடனடியாக பொலிசிற்கு அறிவித்தல்

படிப்பகம்

www.padippakam.com

தர வேண்டும். அறிவித்தல் கொடுக்காவிடின் அது குற்றமாகும். வயது வந்தவர்களுக்கான படங்கள் போன்றவற்றை சிறுவர்களுக்கு காட்டுவது மேற்கூறிய சட்டத்தினுள் அடக்கப்படவல்லை.

சிறுவர்களை ஆபாச வேலைகளில் ஈடுபடுத்தல்

குற்றவியல் சட்டம் 360(டி) பிரிவு

அ) பாலியல் ஆபாச வேலைகளில் ஈடுபடுத்துவதற்காக சிறுவர்களை வைத்திருத்தல் அல்லது அதற்கு தேவையான இடவசதிகளை அளித்தல்.

ஆ) பாலியல் ஆபாச வேலைகளில் ஈடுபடுத்துவற்காக சிறுவரை பாங்காடம் செய்வது.

இ) ஆபாச விளம்பரங்களை சிறுவர்களுக்கு காட்டி அவர்களை இப்படியான ஆபாச செயல்களில் ஈடுபடுத்த முனைவது.

ஈ) ஆபாச வேலைகளில் ஈடுபடுத்தும் முகமாக பயமுறுத்தலும் வற்புறுத்தலும்.

உ) இதனால் சிறுவர்களுக்கோ அவர்களின் பெற்றோர்களுக்கே பணங்கொடுத்தல்.

பாரதூரமான நாகரீகமற்ற செயல்கள்

குற்றவியல் சட்டம் 365 (அ) பிரிவின்படி சம ஆண் பாலியல் ஆபாசங்களை மட்டும் குற்றமாக கருதப்பட்டது. தற்போது இந்தப்பிரிவை அகற்றி பாரதூரமான நாகரீகமற்ற செயல்களில் ஈடுபடுவது குற்றமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப்பிரிவில் இக்குற்றங்களைப் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

எனவே ஆண் - பெண் இடையில் ஏற்படும் சம (ஓரினச்சேர்க்கை) பாலியல் உறவுகள் பாரதூரமான நாகரீகமற்ற செயல்களாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் 16 வயதுக்குக் குறைந்த ஒருவருக்கு பாரதூரமான நாகரீகமற்ற செயலைச் செய்தால்

தண்டனை:- 10 வருடம் முதல் 20 வருடம் வரை சிறைத்தண்டனையும், மேலும் நட்டஈடும் வழங்க வேண்டிவரும்.

பாலியல் துன்புறுத்தல்

பாலியல் துன்புறுத்தல், குற்றமான பலாத்காரத்தை மேற்கொள்வது போன்ற செயல்களினால் பாலியல் குற்றங்களில் ஈடுபடுதல், () போன்ற குற்றங்களுக்கு முன் இருந்த சட்டத்திற்கு பதிலாக இன்று 245 பிரிவைச் சேர்த்துக்கொள்கிறோம். இந்தக் குற்றங்களுக்கு வார்த்தைகளால் ஏற்படும் குற்றங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வேலைதளங்களில் மேலதிகாரி மூலம் வார்த்தைகளினாலோ செயல்களினாலோ ஏற்படும் பாலியல் சம்பந்தப்பட்ட நடத்தைகளும், உள்ளடங்கும்.

பாலியல் துன்புறுத்தல் என்பது பாலியல் வல்லுறவைவிட குறைவானது. ஆயினும் பாலியல் வல்லுறவு எனப்படுவது பாரதூரமான குற்றமாகும்.

தண்டனை:-5 வருடத்திற்கு குறைந்த சிறைத்தண்டனை தண்டம், நட்டஈடு, இந்தக் குற்றத்திற்கு வயது எல்லை இல்லை.

பாரதூரமான பாலியல்

இது புதிதாக சட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட குற்றம். ஆனால், பாலியல் வல்லுறவு இல்லை.

* பலாத்காரம் மூலம் பயமுறுத்தலின்மூலம் அச்சுறுத்தல் மூலம் மரண பயத்தை ஏற்படுத்துவதன் மூலம் கிடைக்கும் அனுமதியுடனோ இல்லாமலோ

படிப்பகம்

* சுய புத்தியுடள்ள போதோ அல்லது சுயபுத்தியில்லாதபோதோ,

* சட்டப்படியோ அல்ல சட்டத்திற்கு முரணாகவோ கைது செய்திருக்கும்போது அனுமதியைப் பெற்றுக் பாலியல் திருப்திக்கா செய்யும் செயல்

* உடம்பில் எந்த பகுதியையோ எந்த பாகத்தையோ பாவனைக்கு கொண்டிருக்கலாம்.

16 வயது குறைந்த ஒருவரின் அனுமதியை பெற்றோ அல்லது சம்மதம் இல்லாமலோ இந்தச் செயலில் பாவிப்பது ஒரு குற்றமாகும்.

தண்டனை:- 7 முதல் 20 வருடம் வரை சிறைத்தண்டனையும், நட்டஈடும்.

பாலியல் வல்லுறவு

குற்றவியல் சட்டத்தின் 263 பிரிவு

* பெண்ணின் அனுமதியின்றி பாலிய்ய புணர்ச்சியில் ஈடுபடுதல்

* 16 வயதிற்குக் குறைந்த பெண்ணுடன் அனுமதியுடன் புணர்ச்சியில் ஈடுபடுவதும் பாலியல் வல்லுறவாகும்.

பாலியல் வல்லுறவு என்பது 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கானது. பெற்றோர் ஆசியுடன் திருமணஞ் செய்ய பெண்ணுக்கு 16 வயது பூர்த்தியாக வேண்டும். முஸ்லிம் பெண்களுக்கு 12 வயதாக வேண்டும். தமது விருப்பப்படி திருமணம் செய்ய ஆண் பெண் இருவருக்கும் 18 வயது பூர்த்தியாக வேண்டும்.

* பலாத்காரமாக பாலியல் வல்லுறவு உறுதிப்படுத்த பிறப்பு உறுப்பின் காயங்கள் அவசியமில்லை.

* 18 வயதிற்குக் குறைந்த பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்தால் 10 - 20 வரை சிறைத்தண்டனை அனுமதிக்க வேண்டும். மேலும் தண்டமும் நட்டஈடும் கொடுக்க வேண்டும்.

* 18 வயதிற்குகுறைந்த ஆண் 16 வயதிற்குக் குறைந்த பெண்ணுடன் இந்தச் செயலில் ஈடுபட்ட குற்றவாளியாகக் காணப்பட்டால் 10 வருடத்திற்கு குறைந்த சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

* 16 வயதிற்கு குறைந்த பெண் தனது இரத்தச் சொந்தக்காரர்களினால் பாலியல் வல்லுறவு புரியப்பட்டால் குறைந்தது 15 வருடம் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

முடிவுரை

கடந்த காலங்களில் இது தண்டனைக்குரிய குற்றமல்ல.

* குற்றவியல் சட்டம் 364(அ) இது ஒரு குற்றமாகும்.

* தத்து எடுத்து வளரும் பிள்ளைக்கு இப்படியான குற்றமிழைக்கப்பட்டால் அதுவும் குற்றமாகும்.

தண்டனை:- 7 வருடம் தொடக்கம் 20 வருடம் வரை சிறைத்தண்டனை

365 (அ) கீழ் குற்றமாகும்.

* பாலியல் வல்லுறவு முறையில் ஈடுபட்டவரின் பெயர்களை விளம்பரப்படுத்தல் குற்றமாகும்.

* அப்படிப்பட்ட செயல்களைப்பற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்க வழக்கு மன்றத்தின் அனுமதி எடுக்க வேண்டும்.

சிறுவர்களை விற்றல்

பாலியல் பாவனைக்கோ அல்லது வேறு ஏதாவது பாவனைக்கு சிறுவர்களை விற்பது குற்றமாகும்.

குற்றவியல் சட்டம் 350, 359, 360(அ) 360(ஆ) பிரிவுகள் இதற்கேற்ற (சிறுவர்களை கடத்திக் கொண்டு போவதற்கு சமானமாகும்.)

www.padippakam.com

காமத் தரகு

இலங்கையில் அல்லது வெளிநாட்டில் விபசாரத்திலோ அல்லது பாலியல் அபசாரங்களிலோ ஆண்,பெண்களை ஈடுபடுத்துவதுவே காமத் தரகுவாகும்.

16 வயதிற்கு குறைந்தவர்களை அவரின் வதிப்பிடத்திலிருந்து அகற்றுவதும் வேறு ஸ்தானத்தில் பலாத்காரமாக வைத்திருப்பதும் இந்தக் குற்றத்தில் அடங்கும்.

தண்டனை: 2 வருடங்களுக்குக் குறையாத,10 வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை.

சிறுவர்களை விற்றல்

1. சட்ட விரோதமாக பிள்ளையை சுவீகரிப்பதற்காக பிள்ளையை நாட்டிலிருந்து வெளியேற்றல்
2. இந்த சட்ட விரோத செயலுக்காக பிள்ளைகளைப் பெறுவதற்காக பெண்களை(சோடிகளை) சேர்த்துக் கொள்ளல்
3. பிறக்கவிருக்கும் குழைந்தையை விலைக்கு வாங்குவதற்காக முற்பணம் கொடுத்தல்
4. பிள்ளையை விற்பதற்காக பொய்யான பிறப்புச் சான்றிதழை உருவாக்கல்
5. வஞ்சகமாக பிள்ளையின் பெற்றோராக முன்வரல்

தண்டனை: 2 முதல் 10 வருட சிறைத் தண்டனை

படிப்பகம்

www.padippakam.com

சிறுவர் உரிமைகள் பட்டயமும், சமூகமும்

ஆம்!

01. சிறுவர்களுக்கு சமூகத்தில் பூரண பாதுகாப்பு இருக்க வேண்டுமா?

02. சிறுவர்கள் எளிதில் வழிதவறிச் செல்லக் கூடிய வாய்ப்புள்ளமையால், அவர்களுக்கு விசேட கரிசனையும், பாதுகாப்பும் இருக்க வேண்டும்.

03. 18 வயதிற்கு குறைந்த நபர் ஒருவர் சிறுவர் அல்லது சிறுமி ஆவாரா?

04. இனம், மதம், மொழி, நிறம் பால் பாகுபாடு எவையுமின்றி பெற்றோர் யாராக இருந்தவிடத்தும் சிறுவர்களுக்கு முழுமையாக உரிமைகள் உரித்தாக வேண்டுமா?

05. சிறுவர்கள் தொடர்பான விடயங்களில்லன சிறுவர்களின் உபரிம நலன் பற்றிக் கருத்தில் கொள்ளப்படுகின்றதா?

06. பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல உரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் உடன்பட்டுள்ளதா?

07. சிறுவர்களின் திறன்களை வளர்ப்பதிலும் உரிய வழிகாட்டுகையிலும் பெற்றோர் மற்றும் குடும்பத்தவர்களுக்குள்ள உரிமைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

08. சிறுவர்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை நிலைபேறு வளர்ச்சி ஆகியவற்றுக்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அரசாங்கத்தின் கடப்பாடு ஆகுமா?

09. பிறப்பு முதற்கொண்டே பெயர் ஒன்றையும் இனம் ஒன்றையும் தாங்கி இருப்பது சிறுவர்களின் ஓர் உரிமை ஆகுமா?

10. சிறுவர்களின் பெயர் பிரஜா உரிமை குடும்பத் தொடர்புகள் ஆகிய பாதுகாக்கப்பட வேண்டுமா? அவை இல்லாமற் செல்லும் இடத்து மீள அவை உறுதிப் படுத்தப்பட வேண்டுமா?

11. பெற்றோர் பிரிந்திருக்கும் போது சிறுவர்களின் நல்வாழ்விற்கு அவசியமாயின் அவ்விருவருடனும் உறவுகளைத் தொடர்வதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டா?

12. பிள்ளைகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு வெளிநாடொன்றிற்குச் செல்லவோ அல்லது வெளிநாடொன்றில் இருந்து திரும்பவோ பெற்றோருக்கு உள்ள உரிமையை அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமா?

13. சட்டவிரோதமாக சிறுவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதையும் வெளிநாடுகளில் தங்க வைத்துக் கொள்வதையும் தடுப்பது அரசாங்கத்தின் ஒரு கடப்பாடு ஆகுமா?

14. சிறுவர்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் இடத்து சிறுவர்களின் எண்ணங்கள் அல்லது கருத்துக்கள் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டுமா?

15. தம்மைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாக சிறுவர்களுக்கு பேச்சுமூலம், எழுத்து மூலம் அல்லது வரைதல் மூலம் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் அவசியமாகுமா?

16. பெற்றோர் அல்லது வயதில் மூத்தவர்களின் வழிகாட்டலின் கீழ் நாட்டின் சட்டத்திற்கு இணங்க சிந்திக்கும், எண்ணத்தில் உதிப்பவற்றின் மீது நம்பிக்கை கொள்ளும் வழிபடும் சுதந்திரம் சிறுவர்களிற்கு இருக்க வேண்டுமா?

17. நண்பர், நண்பிகளுடன் கூடிப் பழகுவதற்கும், சங்கங்களில் இணைந்து செயற்படுவதற்குமான உரிமை சிறுவர்களிற்கு அவசியமாகுமா?

படிப்பகம்

www.padippakam.com

18. தமது பேருக்கு வரும் கடிதங்கள், தமது நாட்குறிப்பேடு ஆகியவற்றை மற்றையோருக்கு காண்பிக்காது இருக்கும் உரிமை சிறுவர்களுக்கு இருக்க வேண்டுமா?

19. சிறுவர்களின் நல்வாழ்விற்கு காரணமாக அமையும் அறிவைப் பெறுவதற்கான தகவல்களை எந்த வழிமுறையூடாகவும் பெற்றுக் கொள்ளும் உரிமை சிறுவர்களிற்கு இருக்க வேண்டுமா? சிறுவர்களின் சிந்தையைப் பாழ்படுத்தும் படியான பத்திரிகைகளை தணிக்கை செய்வது அரசாங்கத்தின் ஒரு கடப்பாடு ஆகுமா?

20. சிறுவர்களின் போசனை, பாதுகாவல் ஆகியன பெற்றோருக்குப் போன்றே அரசாங்கத்திற்கும் உரிய ஒரு கடப்பாடு ஆகுமா?

21. பெற்றோர் உள்ளிட்ட எந்த ஒரு இடத்தில் இருந்தும் சிறுவர்களிற்கு ஏற்படக் கூடிய சகலவிதமான உளவியல், உடலியல் இம்சைகள், துன்பங்களை விட்டும் தவிர்ப்பதற்கும் அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கத்திற்கு கடப்பாடு ஒன்று இருக்க வேண்டுமா?

22. பெற்றோர் அற்ற அல்லது அவர்கள் இருந்த விடத்தும் உரியள பாதுகாப்பு இன்றிய பிள்ளைகளுக்கு விசேட பாதுகாப்பு அளிப்பது அரசாங்கத்தின் ஒரு கடப்பாடு ஆகுமா?

23. சிறுவர்களைத் தந்தெடுக்கும் போது அவர்களின் உச்சநலன் என்ற விடயம் அங்கு ஏற்புடையதாகுமா?

24. அகதிச் சிறார்களுக்கு விசேட பாதுகாப்பு அளிப்பது அரசாங்கத்தின் ஒரு கடப்பாடு ஆகுமா?

25. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கு முழு நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமை உள்ளதா?

26. சிறந்த சுகாதார சேவைகளையும் பாதுகாப்பையும் பெறுவது சிறுவர்களின் ஓர் உரிமை ஆகுமா?

27. போசனை, பாதுகாவல் அல்லது சிகிச்சைக்காக அரசாங்கத்தின் ஆணைப்படி ஏதும் இடங்களில் தடுத்து வைக்கப்படும் சிறுவர்களிற்கு அவற்றை முறையாகப் பெறுவதற்கான உரிமை கிடைக்குமா?

28. நாட்டில் நிலவும் சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினால் நன்மை பெறும் உரிமை சிறுவர்களுக்கு உண்டா?

29. உரிய சமூகம் மற்றும் ஒழுக்கப் பண்பாட்டு வளர்ச்சியுடன் உணவு, உடை , வாழிடம் ஆகியவற்றை சிறுவர்களுக்கு வழங்கும் கடப்பாடு ஒன்று பெற்றோருக்கு உண்டா? பெற்றோரால் அவ்வாறு ஆற்ற முடியாது எனின் அரசாங்கம் அதில் தலையிட வேண்டுமா?

30. கல்வி பெறுவது சிறுவர்களின் ஓர் உரிமை ஆகுமா? அது இலவசமாக வழங்கப்பட வேண்டுமா? பாடசாலை செல்லாமையைக் குறைக்க வேண்டுமா? பாடசாலையின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை பிள்ளையின் கௌரவத்திற்கு ஏற்புடையத்தாக்கிக் கொள்ள வேண்டுமா?

31. சிறுவர்களின் திறன்களை வளர்த்தல், ஒற்றுமையையுடன் கூடிய சுதந்திர சமூகமொன்றில் வாழ்வதற்கு பிள்ளைகளுக்கு வழிகாட்டல், மற்றையோரின் உரிமைகளை மதிப்பதற்கு பயிற்சி அளித்தல் ஆகியன கல்வியின் நோக்கங்களாக அமைய வேண்டுமா?

32. சிறுபான்மையினர் மற்றும் ஆதிவாசியினரின் பிள்ளைகளுக்கு தமக்குரித்தான கலாசார, மொழி, நம்பிக்கைகள் என்பவற்றை அமுல் படுத்தும் உரிமை இருக்க வேண்டுமா?

33. விளையாட்டு , கேளிக்கை, ஓய்வு மற்றும் கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சிறுவர்களிற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமா?

படிப்பகம்

34. சிறுவர்களின் உடலியல் மற்றும் உளவியல் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கத் தக்க நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுப்பதற்கானள சட்ட திட்டங்கள் இருக்க வேண்டுமா? தொழில் குறைந்த பட்ச வயதொன்று உள்ளதா? சிறுவர்கள் புரியும் வேலைகளுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டுமா?

35. போதையூட்டிகளின் பாவனைகளில் இருந்தும் விற்பனையில் இருந்தும் சிறுவர்கள் தூரமாக்கப்பட வேண்டுமா?

36. சிறுவர்களிடம் இருந்து பாலியல் ரீதியாக நன்மை பெற முனைவதைத் தடுப்பதற்கான சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமா?

37. சிறுவர்கள் விற்கப்படுவதும் கடத்திச் செல்லப்படுவதும் முன்னேற்ற வேண்டிய கைங்கரியமாக அமையுமா?

38. சிறுவர்களின் நலனிற்கு ஊறு விளைவிக்கத் தக்க சகலவிதமான துஸ்பிரயோகங்கள் சுரண்டல்கள் ஆகியன தடை செய்யப்பட வேண்டுமா?

39. சிறுவர்களால் தவறொன்று இளைக்கப்படுமிடத்தும், அவர்களுக்கு தாழ்வு எண்ணத்தை அல்லது மன வேதனையை ஏற்படுத்தும்படியான கொடூரமான இம்சைகள் அல்லது துன்புறுத்தல்கள் செய்வதற்கு அரசாங்கத்துக்குப் போன்றே வேறு எந்தவொருவருக்கும் உரிமை இருத்தல் ஆகாதா?

40. 15 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள், எந்தவொரு ஆயுதப்படைகளிலும் சேர்க்கப்படுதல் ஆகாது. யுத்த காலங்களில் அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கான கடப்பாடு அரசாங்கத்துக்கு உள்ளதா?

41. யுத்தம், இம்சை, துன்புறுத்தல்கள், புறக்கணிப்பு, முறைகேடான நன்மை பெறுதல் ஆகியன காரணமாக பாதிப்புக்குள்ளான சிறார்களுக்கு, உடலியல், உளவியல் ரீதியாக ஆறுதல் பெறுவதற்குரிய சிகிச்சையளிப்பதற்கான திட்டமொன்று எமது சமூகத்தில் காணப்படுகின்றதா?

42. குற்றமொன்று தொடர்பில் சிறுவரொருவர் குற்றம் சாட்டப்பெற்றுள்ளவிடத்து சிறுவர்களுக்கு காரணம் விளக்கமளிப்பதற்கு முழுதளவிலான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமா? பொலிஸ், சட்டத்துறையினர், நீதிபதிகள் ஆகியோர் பிள்கைளின் கௌளரவத்தைப் பாதுகாக்க வேண்டுமா?

www.padippakam.com

சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன? (WHAT IS CHILD ABUSE?)

* தேவையின்றி அநாவசியமாக அதட்டுதல்.
  தேவையற்ற விதத்தில் கேளிக்கை செய்தல்.
  ஒழுக்கக் கேடான மோசமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தல்
  சிறுவர்களை முறைகேடான விதத்தில் தொடல்.
  தம்மை முறைகேடான விதத்தில் தொடுமாறு பிள்ளைகளை வற்புறுத்தல்.
  பிள்ளையின் தன்னம்பிக்கையைப் பாழ்படுத்துதல்.

* தமது மன அழுத்தத்தைத் தணித்துக் கொள்வதற்காக பிள்ளைகளை உடல் சார்ந்த இம்சைகளுக்கு உட்படுத்தல்.
  தவறு செய்யத் தூண்டுதலும், அபாயம் நேர இடமளித்தலும்.
  பிள்ளையின் ஆடையணிகள், தூய்மை தொடர்பில் புறக்கணிப்பு மனோபாவம்.
  பிள்ளைகளை வீட்டு வேலைக்காரர்களை போல் நடாத்துதல்.
  பிள்ளையின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமை.
  பிள்ளை எதிர்பார்க்கும் அன்பைப் பெற்றுக் கொடுக்காமை.

* பிள்ளை தமது வீட்டுக்குள்ளேயே வேலைக்காரர்களாக உள்ளமையால், கல்வி, விளையாட்டுக்கான அவகாசம் கிடைக்காமை.
  உடலியல், உளவியல் ரீதியாக இம்சைக்குள்ளாகுமாறு தண்டித்தல்.
  பிள்ளையின் நோய் நொடிகளைக் கவனிக்காமல் புறக்கணித்தல்.
  பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்காமை.
  பிள்ளையைப் பாதுகாப்பற்ற நிலையில் வைத்திருத்தல்.

படிப்பகம்

www.padippakam.com

தாபனவிதிக்கோவை, பிற பொது நிருவாக மற்றும் நிறைவேற்றுநர் தர சட்டத்திட்டங்களின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவையாற்றி வருகின்றனர். ஓய்வூதியச் சட்டத்துக்கிணங்க, 55 வயதைப் பூர்த்திசெய்யமிடத்து அவர்கள் ஓய்வூதியமொன்றைப் பெறும் உரிமையைப் பெறுவர்

எனினும், அரச சார்பற்ற பிற நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரிவோர், தொழில் மற்றும் பிற சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தப்படுவதுடன், ஓய்வூதியத் திட்டமொன்றுக்குப் பதிலாக, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், நுகர்வோர் கொடுப்பனவு சட்டம் ஆகியவற்றிலிருந்து நன்மைகளைப் பெற உரிமை பெறுகின்றனர்.

ஊழியர் சேமலாப நிதியம் (EPF)

நிறுவனமொன்றிலோ அல்லது தொழிற்சாலையொன்றிலோ (பலவாகவும் அமையலாம்) பணியாற்றி, ஆண்களாயின் தமது 55 ஆவது வயதிலும், பெண்களாயின் தமது 50 ஆவது வயதிலும் சேவையிலிருந்து ஓய்வுபெறுமிடத்து, தத்தமது பெயர்களில் ஊ.சே. நிதியத்தில் திரட்டப்பட்டிருந்த தொகையை வட்டியடன் பெறுகின்றன. அந்த நிதியத்தில், ஊழியரின் ஊதியத்திலிருந்து சுமார் 8% வீதமும், தொழில் கொள்வோர் / முதலாளியிடமிருந்து 12 % வீதமும் வைப்பிலிடப்படுகின்றது. எனின், ஊதியத்தில் 1/5 க்குச் சமமான தொகையொன்று வட்டியாக மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது. ஓய்வுபெறுமிடத்து, அத்தொகையை வட்டியடன் (2 1/2) பெற்றுக் கொள்ள முடியும். தொழில் கொள்வோர் மாதாந்தம் குறித்த தமது பங்களிப்பை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்க சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF)

இது வேலையாள் அல்லது ஊழியரின் நன்மைக்காக உருவாக்கப்பட்டதாகும். ஊழியர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து, அத்தொகையையும் நிதிய அலுவலகத்திலிருந்து அவரால் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு ஊழியர் சேமலாப நிதியம் போன்று ஊழியர்கள் எவ்வித பங்களிப்பையும் செலுத்த வேண்டியதில்லை. 3% வீத பங்களிப்புத் தொகையொன்றை ஊழியர் சார்பில் வேலைகொள்வோர் ∴ முதலாளி செலுத்திவர வேண்டும்.

ஊழியர் பணிக்கொடைச் சட்டம் (GRATUITY ACT)

* ஊழியர் ஒருவர் ஆற்றும் பணிக்காக அவருக்கு நன்மைகளைக் கிட்டச்செய்யும் மற்றைய சட்டம், பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டமாகும்.
* இந்தச் சட்டத்தின்படி, ஏதுமொரு நிறுவனத்தில் அல்லது தொழிற்சாலையில் 05 ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலான காலம் சேவையாற்றிய ஊழியர்களுக்கு மாத்திரமே இது உரித்துடையதாகும். இங்கு 05 ஆண்டுகால வரையறைக்கு மேலதிகமாக, பிறிதொரு வரையறையும் உள்ளது. அதாவது குறித்த இடத்தில் 12 மாதங்களுக்கு முன்னர் எப்பொழுதாவது 15 க்கு மேற்பட்ட ஊழியர்கள் சேவையாற்றியிருக்க வேண்டும். இங்கு ஒருளவர் சேவையை விட்டு விலகியிருப்பின் 30 நாட்களுக்குள் அவர்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டுமென சேவை கொள்வோர் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.
* 05 ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலான ஒவ்வொரு ஆண்டுக்காகவும் அரை மாதத்துக்குரிய ஊதியம் விதம் (அவர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தின்படி) உரிய ஆண்டுகளைக் கணிப்பிட்டு, அந்த பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். மாதாந்த ஊதியம் பெறாதவர்களாயின் (அவர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தின் படி) 14 நாட்களுக்குரிய ஊதியம் என்ற அடிப்படையில் உரிய ஆண்டுகளைக் கணிப்பிட்டு கொடுப்பனவை மேற்கொள்ளுதல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

* ஏதுமொரு காரணத்தால் சேவை முடிவுறுத்தப்பட்டிருப்பினும், பணிக்கொடையைக் கொடுப்பனவு செய்யுமாறு குறித்த சட்டம் விதித்துள்ளது. ஊழியர் மரணித்திருப்பின், சட்டப்படி உரித்துடையவர்களால் அத்தொகையை பெற்றுக்கொள்ள முடியும்.

* வீட்டு வேலைக்காரர்கள், தனியார் சாரதிகள், பங்களிப்புத் தொகை செலுத்தாமலேயே ஓய்வூதியம் உரித்துடைய ஊழியர்கள் ஆகியோருக்கு பணிக்கொடை உரித்துடையதாகாது.

தொழிற்சங்கங்கள் (LABOUR UNIONS)

தமது தொழில்சார்ந்த உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஊழியர்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை அரசியலமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்பவசியமான சங்கங்களைத் தாபிப்பதற்கான நடைமுறை தொழிற்சங்கச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற, பொலிஸ், முப்படைகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் தொழிற்சங்கங்களை நிறுவுவதற்கான உரித்துரையோராகார்.

தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டம்

சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் வேளையிலோ அல்லது சேவைக்குரிய பணியொன்றை நிறைவேற்றும் பொருட்டு வெளிச்செல்லும் வேளையிலோ நேரிடும் ஆபத்துக்களுக்கான நட்டஈடுகளைக் கொடுப்பனவு செய்யுமாறு இந்தச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், சேவை தொடர்பாகவுள்ள சட்டதிட்டங்களுக்குப் புறம்பாகவோ அல்லது குடிபோதையில் இருக்கும் வேளைகளிலோ நேரிடும் ஆபத்துக்களின் போது, ஊழியர்களுக்கு அவ்வாறு நட்டஈட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கான உடன்பாடுகள் எவையும் கிடையா.

கடைகள், அலுவலக சேவைச் சட்டம்

கடை என்பதால் கருதப்படுவதாவது, சில்லறை அல்லது மொத்த விற்பனைக்கான கடைகள், ஹோட்டல்கள், உணவுபானங்கள், விற்பனையகங்கள், முடிதிருத்தும் நிலையங்கள், புகைப்படப்பிடிப்பு நிலையங்கள், உடை அழுத்தி நிலையங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏதுமோர் இடமாகும்.

அலுவலகம் எனப்படுவதாவது, எழுத்தாவண நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட ஓர் இடமாகும். வியாபார நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், தொழிற்சாலையொன்றினதோ, தோட்டமொன்றினதோ, விளையாட்டுச் சங்கம் ஒன்றினதோ தொழிற்சங்கமொன்றினதோ அலுவலகமாகும் சட்ட அறிஞர்கள் .. மருத்துவ அலுவலகங்கள், பத்திரிகை நிறுவனங்கள், பாடசாலை அலுவலகங்கள் ஆகியனவாகும். அறக்கட்டளை நிறுவனங்களின் எழுத்தாவண நடவடிக்கைகள் இந்தச் சட்டத்துக்குட்பட மாட்டா.

அவரவர்குரிய வேலைநேர மணித்தியாலங்கள், அலுவலக நேரங்கள் ஆகியன சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அமையப்பெற்றிருக்க வேண்டும். இளம்பராய சிறுவர்கள், மகளிர் ஆகியோர் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளன. அலுவலகம் திறக்கும் - மூடும் நேரங்கள் குறித்துரைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், ஊழியர்களுக்கான விடுமுறைகளும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும். ஊழியர்களுக்கு நேரடியாக ஏதும் நன்மைகள் கிட்டச்செய்யும் மேற்போந்த சட்டங்கள் தவிர்ந்தவிடத்து, தொழில் பாதுகாப்பு, சிறப்புரிமைகள் ஆகியன

படிப்பகம்

தொடர்பிலான இன்னும் பல சட்டங்களும் உள்ளன.

கைத்தொழில் பிணக்குகள் சட்டம்

ஊழியர் - வேலைகொள்வோர் ஆகியோரிடையே சேவை தொடர்பாக எழக்கூடிய பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காகக் கையாளப்படும் முக்கிய சட்டம் இதுவாகும்.

இந்தச் சட்டமானது, மாகாண சபைகள், உள்ராட்சி, கூட்டுறவுத்துறை சார்ந்த ஊழியர்கள் ஆகியோர் தொடர்பில் ஏற்புடைத்தாகாது. எனினும் கூட்டுறவுத்துறை ஊழியர்களால், தொழில் நியாதிக்க சபைக்கு பிரச்சினைகளை ஆற்றுப்படுத்த முடியும்.

இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தொழில் ஆணையாளர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். அமைச்சருக்கோ அல்லது ஆணையாளருக்கோ பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக பின்வரும் மூன்று நடைமுறைகளைப் பின்பற்ற முடியும்.

01. இணக்கப்படுத்தல்

02. தீர்த்து வைத்தல்

03. தொழில் நியாதிக்க சபை ஒன்றுக்கு ஆற்றுப்படுத்தல்

தொழில் நியாதிக்க சபைக்கு மேலதிகமாக, தொழில் நீதிமன்றம் ஒன்றும் உள்ளது. சனாதிபதியினால் நியமிக்கப்பட்டு, தொழில் அமைச்சரால் சூழ்நிலைக்கேற்ப பெயர் குறிப்பிடப்படும் நீதிபதிகள் ஐவர் (05) உள்ளனர். தொழில் நீதிமன்றத்துக்கு ஏதுமொரு விடயத்தை அமைச்சரே முன்வைப்பார்.

www.padippakam.com

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

1945 ஆம் ஆண்டில் ஐ.நா சபை தாபிக்கப்பட்டவேளையிலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு செயற்பட்டு வந்தது. இந்த அமைப்பு 1919 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். எனினும் ஐ.நா. சபை தாபிக்கப்பட்டதை அடுத்து, 1946 ஆம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பும் ஐ.நா. சபையுடன் இணைந்த ஒரு சுயேட்சை அமைப்பாக மாறியது.

குறிக்கோள்கள்:

* சமூக நீதியை உறுதிப்படுத்துவதனூடாக நிலைபேறான,

01. உலக சமாதானத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக அமைதல்

02. சர்வதேச செயற்பாடொன்றின் மூலம் செயற்படும் நிலைமையைத் தோற்றுவித்தல், வாழ்க்கை நிலைமைகளை மேம்மடுத்தல், பொருளாதார, சமூக உறுதிப்பாடுகளை முன்னேற்றுதல்

இந்தக் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக அரசாங்கம், தொழிலாளர் அமைப்புக்கள். முகாமைத்துவ அமைப்புக்கள் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொண்டு, குறைந்த பட்ச தராதரங்களை சிபார்சு செய்கின்றது. சர்வதேச தொழிலாளர் உடன்பாடுகளை வரைவதும் அது சார்ந்த ஒரு பணியாகும். அதன்படி, மனித உரிமைகள், அமைப்புக்களை நடாத்திச் செல்வதற்கான சுதந்திரம், வேதனங்கள், வேலைசெய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை, தொழில்புரிவதற்கான குறைந்தபட்ச வயதெல்லை, பல்வேறு தொழிலாளர் நட்டஈட்டை வழங்கல், சமூகப்பாதுகாப்பு சம்பளத்துடனான விடுமுறை காலம், தொழிற்சாலை ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு, தொழிலாளர் மேற்பார்வை ஆகியன பற்றிய விதிகள் ஆக்கப்படுகின்றன.

தொழிலாளர் பாராளுமன்றம் ஒன்றும், சமமான வருடாந்த சம்மேளனமொன்றும் இடம்பெற்றுவருகின்றது. அதில் அரசாங்கத்தின் சார்பில் இரு பிரதிநிதிகளும், பிரபுக்கள் சார்பிலும், தொழிலாளர் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் கலந்து சிறப்பிப்பர். அதன்பணி யாதெனில், உடன்பாடுகள் வடிவில் சர்வதேச சமூக தராதரங்களை ஒழுங்குபடுத்துவதாகும். உலக தொழிலாளர் அமைப்பின் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

1948 ஆம் ஆண்டில் இலங்கை இந்த அமைப்பில் தனது உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டது. தற்போது எமது நாட்டின் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, தொழில் அமைச்சு, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு, பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து, பாட்டாளி மக்களின் நல்வாழ்வுக்காக இந்த அமைப்பு அயராது உழைத்து வருகின்றது.

இலங்கையின் கைத்தொழில் பிணக்குகள் சட்டம், ஊழியர் பணிக்கொடைச் சட்டம், ஊழியர் சேமலாபஸ், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் போன்ற சட்டங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு உலக தொழிலாளர் அமைப்பு பெரிதும் பாடுபட்டது.

படிப்பகம்

மனிதாபிமானச் சட்டம் (Humanitarian Law)

மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் பல்வேறு உடன்பாடுகள் உருவாக்கப்பட முன்பே மனிதாபிமானச் சட்டம் உலகில் நிலவியது. அது சர்வதேச சட்டங்களின் ஓர் அங்கமாகும். அந்தச் சட்டம், யுத்தங்களில் ஈடுபடும் நாடுகளுடனும், உண்ணாட்டு அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களை நோக்கி நகரும் தரப்பினருடனும் தொடர்புபட்டதாகும். யுத்தத்தின் போதோ அல்லது போராட்டங்களின் போதோ எதிர்த்தரப்பினர் மீது மனிதாபிமானம் ∴ மனிதத்தன்மையுடன் நடந்து கொள்வது குறித்த கொள்கைகளின் கோவையொன்று அதன்மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. அந்தக் கொள்கைகளை எதிர்த்தரப்பினரின் உரிமைகளாக உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே அவற்றை மீறுமிடத்து, அதற்குப் பொறுப்பானவர்கள் உலக நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளிகளாக்கப்பட முடியும். இது, ஆயுதப் போராட்டம் பற்றிய சட்டம் என்றழைக்கப்படும்.

ஆயுதப் போராட்டங்கள் காரணமாக, அதனுடன் தொடர்புபடாத தரப்பினரான சிவில் குடிகளும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிப்பதைத் தடுப்பதும் அதன் முக்கிய நோக்கமாகும்.

19 ஆம் நூற்றாண்டின் முதலரைப்பாகம் முதற்கொண்டே யுத்தத்தின் போது காயமுறுவோர் மற்றும் கைதிகளைக் கவனித்தல் பற்றிய உடன்பாடுகள் நாடுகளால் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 1949 ஆம் ஆண்டு அவற்றை மேலும் மாற்றியமைத்து, ஜெனீவா உடன்பாடுகள் நான்காகவும், 1977 ஆம் ஆண்டு விசேட உடன்பாடுகள் இரண்டாகவும் ஆவணப்படுத்தப்பட்டது. அவையே ஜெனீவா உடன்பாடுகள் எனக் குறிப்பிடப்படுகின்றது. விசேட உடன்பாடுகளின் மூலம் சிவில் குடிகள், காயப்பட்டோர், சுகவீனமுற்றோர் மற்றும் கைது செய்யப்பட்ட இராணுவ ஆளணியினரைப் பாதுகாத்தல் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

தற்போது சுமார் 200 நாடுகள் இந்தச் சட்டங்களைப் பின்பற்றுவதாக கைச்சாத்திட்டுள்ளவிடத்தும், அவற்றில் கைச்சாத்திடாத தரப்பினரும் அந்தச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

இந்தச் சட்டங்களின் பொழிப்பு ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

01. முரண்பாடுகள் மீது நேரடித் தொடர்பற்றதும், அவ்வாறு தொடர்புற முடியாத ஆட்களின் உயிர், அவர்களின் பண்பாட்டு கௌரவம் மற்றும் உடலியல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு ஊறுவிளையாதவாறு செயற்பட வேண்டும். அவர்களுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பளிப்பதுடன், மனிதத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

02. சரணடையும் அல்லது போரிட முடியாத எதிரியொருவரைக் கொல்வது அல்லது இம்சைகளுக்க உட்படுத்துவது தடை செய்யப்பட்டதாகும்.

03. சரணடைந்த எதிரணியைச் சேர்ந்த காணப்பட்டவர்களுக்கு அல்லது நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். வைத்தியத் துறையினருக்கும், தாபனங்கள், போக்குவரத்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றுக்கும் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும். செஞ்சிலுவை இலச்சினை பொறித்த (செஞ்சிலுவை ∴ அரைச்செம்பிறை) இடங்கள் பாதுகாக்கப்படுவதுடன், அவற்றுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்.

04. எதிரணித் தரப்பினரின் ஆதிக்கத்துக்கு உட்படும் சிவில் குடிகளினதும், போராட்டங்களில் கலந்து கொள்வோரினதும் உயிர், கௌரவம், தனிப்பட்ட உரிமைகள், நம்பிக்கைகள் ஆகியன மதிக்கப்பட வேண்டும். துன்புறுத்தும் செயற்பாடுகளிலிருந்தும், ஒன்றுக்கொன்றிழைக்கும் அன்றேல் பழிவாங்கலில் இருந்தும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு, அவர்களின் குடும்பத்தவருடன் கடிதத் தொடர்புகளைப் பேணுவதற்கும், நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

www.padippakam.com

05. யுத்தம் புரியும் தரப்பினருக்கும் அல்லது அவர்களின் ஆயுதந்தாங்கிய இராணுவத்தினருக்கு, தாம் விரும்பியவாறு, யுத்தம் புரியும் நடைமுறைகளைப் பின்பற்ற முடியாது. தேவையற்ற விதத்தில் சேதங்களை விளைவித்தல், அசாதாரணமான துன்புறுத்தல்கள், நோவினைகளை இழைத்தல் ஆகியன தடைசெய்யப்பட்டவையாகும்.

06. சிவில் குடிகளின் உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதற்கு முற்படும் போராளிகள் மற்றும் சிவில் குடிகள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். சிவில் குடிகள் வசிக்கும் பிரதேசங்களையோ அல்லது அவர்களின்ன சொத்துக்கள் உள்ள இடங்களையோ தாக்குதல் இலக்குகளாக அமைத்தலாகாது. தாக்குதல்கள் எப்பொழுதும் யுத்தத்துக்காக மாத்திரமே அமைதல் வேண்டும்.

* மேற்போந்த சட்டதிட்டங்கள் குறித்த உடன்பாடுகளில் விபரமாக காண்பிக்கப்பட்டுள்ளன. போராட்ட தரப்பினரால் விசேடமாகப் பின்பற்றி ஒழுகப்பட வேண்டியவையும் அதன்கீழ் விளக்கப்படுகின்றன.

* செஞ்சிலுவைச் சங்கம் சார்ந்த ஆட்களையும், மருத்துவமனைகளையும் பாதுகாத்தல் வேண்டும்.

* சிறுவர்களும், மகளிரும் இம்சைகளுக்கு உட்படுத்தப்படுதல் ஆகாது

* சிறைக்கைதிகளையும் மனிதர்கள் போன்றே நடந்து வேண்டும்.

* சிவில் குடிகள் போன்றே அவர்களின் உணவுப் பொருள்கள், விவசாய மற்றும் கைத்தொழில் பிரதேசங்கள், பண்ணை வளர்ப்பு, குடிநீர் பெறும் வழிகள் ஆகியவற்றுக்கும் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும். சிவில் குடிகளை வெளியேறுமாறு அச்சுறுத்தல் விடுத்தல் ஆகாது.

* கலாசார மற்றும் சமய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், உடைமைகளையும் பாதுகாத்தல் வேண்டும்.

* இந்த நான்கு உடன்பாடுகளுக்கும் பொதுவான ஒரு வாசகம் உள்ளது. அது மூன்றாவது வாசகமாகும். அந்த வாசகம் அனைத்துத் தரப்பினர் தொடர்பிலும் செல்வாக்கும் செலுத்துவதாலேயே முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த நாட்டின் அல்லது அமைப்பின் சட்டரீதியான நிலைமையைக் கருத்திற் கொள்ளாமல் ஜெனீவா உடன்பாடுகளில் கைச்சாத்திடாத தரபபினர் தொடர்பிலும் அந்த வாசகம் செல்வாக்குச் செலுத்துகின்றது

செஞ்சிலுவைச் சங்கம் *(ICRC)*

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டியானது. (ஐசி.ஆர.சி.) இந்த ஜெனீவா உடன்பாட்டை செயலுருப்படுத்தும் நிறுவனமாக 1863 ஆம் ஆண்டு தொடக்கம் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. பக்கச்சார்பின்றிய ஓர் அமைப்பான செஞ்சிலுவைச் சங்கத்துக்கு யுத்தகளப் பிரதேசங்களுக்குள் பிரவேசிப்பதற்காக அனுமதி வழங்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் சகர தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

பிற்சேர்க்கை - 1

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, இலங்கை

மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்

(10. 11ஆவது சரத்துக்கள்)

ஆணைக்குழுவின் பணிகள் 10. ஆணைக்குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பிலும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்தல் அவற்றை அனுசரித்தல் என்பவற்றை ஊக்குவித்தல் தொடர்பிலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்துறை செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் கண்காணித்தல்.

(ஆ) அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளையிட்டு விசாரணை செய்தலும் புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க மத்தியஸ்தம் மூலமும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும்.

(இ) அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதிலும், ஊக்குவிப்பதிலும் பாதுகாப்பதிலும் சட்டவாக்க, நிர்வாகப் பணிப்புரைகளையும் நடபடி முறைகளையும் தொகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்.

(ஈ) தேசிய சட்டங்களும் நிர்வாகச் செயல்முறைகளும், சர்வதேச மனித உரிமைகளுக்கும் வழமைகளுக்கும் நியமங்களுக்கும் அமைந்ததாயுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல்.

(உ) மனித உரிமைகள் துறையில் பொருத்தனைகளுக்கும் வேறு சர்வதேசச் சாதனங்களுக்கும் ஒப்பளிப்பதற்கான அல்லது இசைவதற்கான அவசியத்தின் மீது அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல்: அத்துடன்

(ஊ) மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தலும் அது தொடர்பிலான கல்வியை ஏற்பாடு செய்தலும்.

11. ஆணைக்குழு அதன பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு பின்வரும் தத்துவங்கள் எதனையும் அல்லது அவை அனைத்தையும் பிரயோகிக்கலாம்.

(அ) இச்சட்டத்தின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கிணங்க அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை எதனையும் புலனாய்வு செய்தல்.

(ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் அவர்களுக்குக் கையளிக்கக் கூடியவாறான ஆணைக்குழவின் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய எண்ணிக்கையினதான உபகுழுக்களை மாகாண மட்டங்களில் நியமித்தல்.

(இ) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவள்ளமை தொடர்பிலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையிடுதல்.

படிப்பகம்

www.padippakam.com

(ஈ) நீதிமன்றக் கட்டளையொன்றினாலோ அல்லது வேறு வகையிலோ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஆட்களின் நலனை அத்தகைய தடுப்புக்காவலிடங்களை ஒழுங்காக பரிசீலனை செய்வதன் மூலம் கண்காணித்தலும் அத்துடன் அவர்களின் தடுப்புக்காவல் நிலைமைகளை மேம்படுத்தவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விதப்புரைகளைச் செய்தலும்.

(உ) உயர்நீதிமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் எடுக்குமாறு பணிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஊ) நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்துவதன் மூலம் மனித உரிமைகள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் அத்துடன் அவை பற்றிய விழிப்பு நிலையை மேம்படுத்துதல் மற்றும் அத்தகைய ஆராய்ச்சியின் பெறுபேறுகளைப் பரப்புதல் அத்துடன் விநியோகித்தல்.

(எ) இன்னலுற்ற ஆள் ஒருவருக்கு அல்லது இன்னலுற்ற ஆள் ஒரு வரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆள் ஒருவருக்கு 13 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்வதில் அவரால் நியாயமாக ஏற்படக் கூடிய செலவினங்களைச் சமாளிப்பதற்குப் போதுமான அத்தகைய பணத் தொகையை அதன் பூரண தற்றுணிபில் வழங்குதல்.

(ஏ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

படிப்பகம்

www.padippakam.com

பிற்சேர்க்கை - 1

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

குடும்பம்

சனநாயகம் வீட்டிலேதான் ஆரம்பமாகிறது. பெற்றோரும் பிள்ளைகளும் தத்தமது உரிமைகள் சுதந்திரங்கள் பொறுப்புகள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளும்போது சனநாயகத்திற்கு அத்திவாரம் இடப்படுகின்றது. பிற்கால வாழ்க்கையில் தனிமனிதர் சமுதாயத்திற்கு ஆற்றும் பணிக்கு இந்த அத்திவாரம் பெரும் தாக்கத்தை உண்டாக்குகிறது.

இன்று குடும்பமானது சேர்க்கையிலும் அமைப்பிலும் பெருமளவிலும் மாறுபட்டிருந்தாலும் சமுதாயத்தின் பிரதான கூறாக குடும்பமே இன்னமும் உலகெங்கும் போற்றப்படுகின்றது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் ஒரு குடும்பம் தனத இளைஞர்களுக்குப் பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்க வேண்டியதன் பொறுப்பை வலியுறுத்துவதுடன், சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகள் குடும்பச் சூழலை இழந்த பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாட்டினை உடையன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு அன்பு காட்டுவதற்கும் குடும்பமே முழுமுதல் ஆதாரம். இறுதிப் பற்றுக்கோடும் குடும்பமே. தமது பிள்ளைகளுக்குத் தகுந்த வசதிகளை வழங்கத் தவறும் குடும்பங்கள் விடயத்தில் அரசாங்கம் தலையிடல் அவசியமென்பதைப் பெரும்பாலான நாடுகள் அங்கீகரிக்கின்ற போதிலும் சிரமமான நிலைமைகளில் சிக்குண்ட குடும்பங்கள் அல்லது சிறுவர்களுக்கு அரசாங்கத்தின் தாபரம் போதுமானதாயிருப்பது அபூர்வமே.

ஒவ்வொரு பிள்ளைக்கும் உய்வு, பாதுகாப்பு மேம்பாடு ஆகியன பிறப்புரிமை என்பதுடன் தனது எதிர்காலம் தொடர்பான முடிவுகளில் பங்குகொள்ளும் உரிமையும், அதற்கு உண்டென்று சமவாயம் கூறுகிறது. ஒவ்வொரு பிள்ளைக்கும் நல்லாரோக்கியம், கல்வி, மற்றும் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளைப் பெறவும். சுரண்டல், துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறவும் உரிமை உண்டென்னும் தார்மீகக் கோட்பாட்டை அனேகமாக எல்லா நாடுகளிலும் கொள்கை வகுப்போர் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆயினும் வளர்முக நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான சிறுவர்களுக்கு இந்த உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்பே இல்லாதிருக்கிறது.

பிள்ளையின் சிறந்த நலன் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென சமவாயத்தின் 3வது உறுப்புரை அங்கீகரிப்பதுடன், இந்தப் பொறுப்பைப் பெற்றோர் தட்டிக்கழிக்கும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நாடு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பணிக்கிறது. சமவாயத்தை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் ஏனைய விடயங்களுடன் பின்வருவற்றையும், நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடுடையவனவாகும். பெற்றோர் தமது பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சித் திறங்களுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளை ஆற்றுப்படுத்தும் உரிமையுடையவர்களென்பதை மதித்தல் (உறுப்புரை 5). பிள்ளையின் பாதுகாப்பு அல்லது சிறந்த நலன் பாதிக்கப்படும் நிலைமையில் அல்லாமல் மற்றும்படி அப்பிள்ளை பெற்றோரிடமிருந்து பிரியாதிருப்பதை உறுதிப்படுத்துதல் (உறுப்புரை 9). குடும்பத்தினர் மீளவும் ஒன்றுசேரும் பொருட்டு பிள்ளகைளும் அவர்களின் அனுமதித்தல் (உறுப்புரை 10). அவசியமாயின் அரசாங்க உதவிபெற்று பிள்ளையை வளர்க்கும் கூட்டுப்பொறுப்பு பெற்றோருக்கு உண்டென்பதை அங்கீகரித்தல் (உறுப்புரை 18). பெற்றோரும் பராமரிக்கும் மற்றோரும் பிள்ளையை இம்சைப்படுத்துவதிலிருந்து பாதுகாப்பளித்தல் (உறுப்புரை 9).

1993 மே மாதம் 18ம் திகதி வரை 136 நாடுகள் சமவாயத்துக்கு ஒப்புதல் கொடுத்துள்ளன.

சர்வதேச குடும்ப ஆண்டு (1994) அண்மித்து வரும் இவ்வேளையில் கூட தமது எதிர்காலத்தைத்

படிப்பகம்

தீர்மானிக்கும் விடயங்களில் சிறுவர் பங்குபற்றுதற்கான உரிமை புரட்சிகரமான ஓர் எண்ணக் கருவாகவே இருந்து வருகிறது.

சட்டத்தின் கண்ணிலும் பாரம்பரிய அடிப்படையிலும் பெரும்பாலான சமுதாயங்களில் சிறுவர்கள் பெற்றோரின் சொத்தாகவே கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆண்களுக்குச் சமுதாயம் அளித்துள்ள அதிகாரத்தின் விளைவாகவே பெற்றோர் எதேச்சாதிகாரமாகத் தமது பிள்ளைகளை நடத்தி வந்துள்ளார்கள். பல குடும்பங்கள் பெண்களை அடக்கியாண்டும் வருகின்றன. பெண்களிலும் ஆண்களுக்கு முதலிடமளித்தல், குழந்தை வளர்ப்பு, சிறுவர் பராமரிப்பு, வீட்டுவேலை ஆகிய மாமூலான பணிகளைத் தவிர ஏனைய துறைகளில் ஆண்களுடன் சமமாகப் பங்கு பெறும் ஆற்றலை மறுத்தல் என்பன இங்கு குறிப்பிடத்தக்கன. இது விடயத்தில் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் (1989) ஆகிய இரண்டும் ஒன்றினுக்கு ஒன்று அனுசரணையாக உள்ளன. ஒரு குடும்பம் சிறுவர்களைச் சுரண்டிப்பிழைக்க அல்லது துஷ்பிரயோகம் செய்ய முற்படும் ஆபத்து இருக்கக் கண்டால் அரசாங்கம் தலையிடுவதற்கு மேற்படி இரண்டு சமவாயங்களும் இடமளிக்கின்றன. தாய்மாருக்கு வழங்கப்படும் அல்லது மறுக்கப்படும் வாய்ப்புகளும் பிள்ளைகளின் உய்வு, பாதுகாப்பு, மேம்பாடு என்பவனவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதையும் இரண்டு சமவாயங்களும் ஏற்றுக்கொள்கின்றன.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் பிரகாரம் தமது பிள்ளைகளை வளர்க்கும் கூட்டுப் பொறுப்பு பெற்றோருடையது. இதில் தாபரம் அளிக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டு. ஆயினும் சிறுவர்களைத் தமது சொத்துப் போலவோ துணைப்பொருள் போலவோ பெற்றோர் நடத்தக்கூடாது. சமவாயம் பிள்ளையை தனித்துவமான உரிமைகளையுடைய வேறொரு பிறவியாகக் கணிக்கிறது.

தானாக எண்ணித் துணியும் ஆற்றலுள்ள பிள்ளைக்குப் பின்வரும் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமென சமவாயம் குறிப்பிடுகிறது.

* தமது நல்வாழ்வு சார்ந்த விடயங்களில் தமது கருத்தை வெளியிடும் உரிமையும் அவை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டுமென்னும் உரிமையும் (உறுப்புரை 12).

* பெற்றோரின் முறையான வழிநடத்தலுக்கு அமைய சிந்தனை, மனச்சான்று, சமயம், ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் உரிமை (உறுப்புரை 14).

* மற்றவர்களைச் சந்திக்கவும், சங்கங்கள் அமைக்கவுமான உரிமை (உறுப்புரை 15)

* தமது வீட்டிலும் பிறருடனான கடிதத் தொடர்புகளிலும் அந்தரக்கத்தைப் பேணும் உரிமை (உறுப்புரை 16).

* பன்முகப்பட்ட தேசிய சர்வதேச மூலஸ்தானங்களிலிருந்து விசேடமாக சமூக, தார்மீக, ஒழுக்க நல்வாழ்வுக்கும் உடல், உள நல்லாரோக்கியத்துக்கும் வகைசெய்வதை நோக்கமாகக் கொண்ட மூலஸ்தானங்களிலிருந்து தகவல்களை அணுகிப்பெறும் உரிமை (உறுப்புரை 17).

ஒப்புதல் கொடுக்கும் நாடுகள் சமவாயத்தின் 54 உறுப்புரைகளையும் சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் வயது வந்தவர்களுக்கும் பரப்புதல் வேண்டுமெனச் சமவாயம் திட்டவட்டமாகப் பணிக்கிறது.

சுருங்கச் சொன்னால், பெற்றோர் தமது பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிப் பாங்கான ஆற்றலை மதிப்பதுடன், தமது வழித்தோன்றல்கள் மீது தமக்குள்ள அதிகாரம் முற்றுமுழுதானதல்ல என்பதை ஏற்கவும் வேண்டும். புறக்கணிப்பு, இம்சை, சுரண்டல், அல்லது ஏனைய துஷ்பிரயோகங்களினால் பிள்ளையின் சேமநலன் பங்கமுறும் பட்சத்தில் பெற்றோரின் உரிமைகள் மறுதலிக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம். பிள்ளையைக் காப்பாற்றும் ஆற்றல் குடும்பத்துக்கு இல்லையெனத் தீர்ப்பளிக்கப்பட்டால் அல்லது புறக்கணிப்புக்கும் வன்செயலுக்கும் குடும்பமே காலாக இருந்தால் குடும்பத்தில் தலையிட்டுத் தகுந்த பரிகாரம் காணும் பொறுப்பு அரசாங்கத்தக்கு உண்டு.

மரபுகளும் குடும்ப ஆசாரங்களும் அநேகசந்தர்ப்பங்களில் பொருளாதார நெருக்கடிகளினாலும் ஏனைய சுமைகளினாலும் நிலைகுலைந்து வரும் உலகிலே, பிள்ளை தன் கருத்தை வெளியிடுதற்கான உரிமை பிள்ளையின் பராமரிப்பு, உணர்வார்ந்த ஆதரவு, பாதுகாப்பு, நன்நெறி என்பனவற்றுக்குப் பெற்றோரே பிரதான பொறுப்பாளிகள் என்பது அடங்கலான பல்வேறு வகைப்பட்ட சிறுவர் உரிமைகளுக்கிடையிலே ஒரு சமநிலையைப் பேணச் சமவாயம் முயல்கிறது. குழந்தையின் முன்னறி சமூகச் சூழல் குடும்பமேயாகும். பெற்றோரின் பராமரிப்பில் வளரும்போது பிள்ளை அனுபவிக்கும் பாசம் அல்லது பய உணர்வு, நம்பிக்கை அல்லது பாதுகாப்பற்ற உணர்வு என்பன உலகத்தின் பால் பிள்ளைக்கு ஏற்படும் அபிப்பிராயத்தைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. சாதாரணமான சூழல்கள் நிலவும் பட்சத்திலன்றி மற்றும்படி ஒரு தலைமுறையின் இயலாமைகள், விருப்புவெறுப்புகள் அல்லது குறைபாடுகள் அடுத்த தலைமுறையைச் சாருவது இயல்பே.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமானது நியாய புத்தியும் நம்பிக்கையும் மங்கிவரும் வரலாற்றுக் கட்டத்திலேயே. இவை இரண்டினுக்கும் குரல்கொடுக்க வந்திருக்கிறது.

பாலியல் உபத்திரங்கள்

விபச்சாரம், ஆபாச நடவடிக்கைகள் என்பன உலகளாவிய விதத்தில் வளர்ச்சியடைந்துவரும் தொழில்துறைகளாகும். வறுமை, பேராசை, மலிவான பாலியல் சார்ந்த நடவடிக்கைகளுக்குள்ள கீழ்த்தரமான கிராக்கி என்பன இத்தொழில் செழித்தோங்குவதற்கு ஏதுவாக உள்ளன. வறிய நாடுகளிலும், செல்வநாடுகளிலும் கோடிக்கணக்கான சிறுவர் சிறுமியரின் வாழ்க்கையை இது நாசமாக்கி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய மட்டத்திலோ சர்வதேச மட்டத்திலோ அதிக சிரத்தை காண்பிக்கப்படுவதில்லை.

சில நாடுகளில் ஏழு வயதுச் சிறுவர்களைக் கூட வயது வந்தவர்கள் வாங்கியும், விற்றும் வருகிறார்கள். இதனைச் செய்வோர் சிறுவர்களின் பெற்றோர், பாதுகாவலர், ஆசிரியர், ஏன் தர்ம நிலையங்கள் எனப் போலி வேடம் பூண்டுள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளாகக்கூட இருக்கலாம். உடலாலும், உணர்ச்சியாலும் அடிமைகளாக்கப்பட்டும் இச்சிறுவர்கள் பின்னர் கூலிக்கு விடப்பட்டு பலதரப்பட்ட ஆண்களாலும், சில சமயங்களில் பெண்களாலும் இம்சைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ளூர்வாசிகளே வாடிக்கையாளர்களாக இருப்பர். எனினும், சில நாடுகளில் சிறுவர் சிறுமியருடன் உடலுறவு கொள்ளும்வாய்ப்பு, உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வியாபாரத் தந்திரமாக வெளிநாடுகளில் பிரசாரம் செய்யப்படுகிறது. தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிற் பல பாலியல் வேட்கையுடைய ஐரோப்பிய உல்லாசப்பிரயாணிகளை மட்டுமல்லாமல் ஆசியப் பிராந்தியத்தின் பிற பகுதிகளைச் சேர்ந்த ஆண்களையும் காந்தம் போற கவர்ந்து வருகின்றன.

பல நாடுகளில் பாலியப் புணர்ச்சித் துணைவர்களுக்கான கிராக்கி பெருகிவருவதாக சமீபத்திய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்குக் காரணம் விபச்சாரம் செய்யும் சிறுபிள்ளைகளை எச்.ஐ.வி என்னும் ஆட்கொல்லி நோய் அநேகமாகப் பீடிப்பதில்லை என்னும் தவறான நம்பிக்கையாகும். துரதிருஷ்டவசமாக இது உண்மை அன்று. ஏனென்றால், அதிகமான சிறுவர்களுக்கு பாலியல் துஷ்பிரயோகம் பூரண தண்டனையாகவே அமைந்து வருகிறது.

இந்தச் சிறுவர்களுக்குப் பணம் கொடுக்கும் பாதர்கள் மிகவும் கௌரவமானவர்களாகவே காணப்படுகிறார்கள். இவர்கள் எமது உலகத்தின் போக்கைப் பிரதிபலிக்கிறார்கள். தொழில்மயமான நாடுகளில் பாதுகாப்புப் பற்றிய கோட்பாடுகளை முன்வைத்து குற்றச்செயல்கள் புரிவோருக்குக் கடுந் தண்டனை விதிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கும் அதே மனிதர்கள், வறுமையை நேருக்கு நேர் எதிர்கொள்ளும்போது தாமே குற்றவாளிகளாக மாறத் தயங்குவதில்லை. இவ்வாறு வளர்முக நாடுகளில் வளர்ந்து வரும் பாலியல் விபசாரம் பாலியல் சார்ந்த உல்லாசப் பிரயாணம் என்பன

www.padippakam.com

தொடர்பாக ஆராய்ச்சி நடத்திய பிரெஞ்சுப் பாதிரியும் வைத்தியருமாகிய பிராங்கோ லே.'.போ என்பவர் குறிப்பிடுகிறார்.

பல நாடுகளில் சட்டத்தை நிறைவேற்றுவோர் பாலியல் துறையில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் விடயம் குறித்துப் பராமுகம் காட்டிவருவதை மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவின் சமீபத்திய அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பொலிசார் விரும்பினால் சிறுவர்களையும், சிறுமிகளையும் விபசார விடுதிகளிலிருந்து விடுவிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட திட்டங்கள் இருக்கவே செய்கின்றன. ஆயினும், சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரிகள் இது விடயத்தில் பெரும்பாலும் கண்டும் காணாதவர்கள் போல் நடந்து கொள்கிறார்கள். ஏனென்றால், பிறருக்கு உதவ முன்வருவதால் தமக்கு ஒருவித பயனும் கிடைக்கப்போவதில்லை என அவர்கள் நினைக்கிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்கள் தமக்குப் போதிய ஊதியம் வழங்காமல் இருக்கும்போது தாம் ஏன் சட்டத்தை நிலைநாட்டுவதில் அக்கறை கொள்ள வேண்டும் என்று அவர்கள் நியாயம் கற்பித்துக் கொள்கிறார்கள். எவ்வாறாயினும், அப்படடமான ஊழல் அல்லது ஒத்துழைப்பின் மூலம் அவர்களும் இந்த நடவடிக்கைகளில் பங்கு கொள்கிறார்கள்.

பொய்யான அடையாள அட்டை அல்லது திருமணச் சான்றுப் பத்திரங்களைக் காட்டி சிறுவர்களைக் கடத்திச் சென்று எல்லைப் புறங்களில் வியாபாரம் செய்யும் பழக்கம் சாதாரணமாகிவிட்டதென மேற்படி அறிக்கை கூறுகிறது. அமைப்பு வாரியான குற்றச்செயல்களுடன் சிறுவர்களை வைத்து நடத்தும் ஆபாச நடவடிக்கைகள் போதைப்பொருள் வியாபாரம் ஆகியனவும் இணைந்துள்ளன என்பதையும் அறிக்கை குறிப்பிடுகிறது.

இத்தகைய ஒழுக்கச் சீர்கேடுகளுக்கு ஆளாகும் சிறுவர்கள், பெரும்பாலும் மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், மணமுறிவு ஏற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது மது அல்லது போதைப் பொருள்களுக்கு அடிமைகளான பெற்றோரைக் கொண்டவர்களாவர். சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் தாய்மாரே விபசாரிகளாகயிருக்கிறார்கள். யாசித்தும் திருடியும் அல்லது போதைப் பொருள்களை விற்றுப் பிழைக்கும் வீடுவாசலற்ற அநாதைச் சிறுவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு விபசாரம் இலாபகரமான ஆபத்துக் குறைந்த வாழ்க்கை நெறியாக இருக்கலாம். வறிய குடும்பங்களைச் சேர்ந்த பல சிறுவர்கள் சிறு வயதிலேயே வேலைக்காரர்களாக பணக்கார வீடுகளுக்குத் தானம் பண்ணப்படுகிறார்கள். அவ்வீடுகளில் உள்ளவர்கள் இச் சிறுவர்களை உட்படுத்துவதுண்டு. வேறு சிறுவர்கள் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பெற்றோரிடமிருந்து 50 - அமெரிக்க டொலர் போன்ற அற்ப தொகைக்கு விலைக்கு வாங்கப்பட்டு பட்டணங்களிலும் பெரு நகரங்களிலும் விபசார விடுதிகள் அல்லது வெளிநாட்டவருக்கு விற்கப்படுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் பெற்றோர் தமது பிள்ளைகள் கௌரவமான தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என நம்பும்படி ஏமாற்றப்படுவதும் உண்டு. தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் சிலவற்றில் லட்சக்கணக்கான சிறுவர் சிறுமியர்கள் விபசாரிகளாக உள்ளரென்று அரச சார்பற்ற அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. ஒரு கடற்கரையை அண்டிய விடுதியிலே 16 வயதுக் குறைந்த 10,000 சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டுவருவதாக மேற்படி அமைப்புக்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. இச் சிறுவர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 75 ரூபாய் கூலி அல்லது வெறுமனே சாப்பாடும் துணிமணியும் வழங்கப்படுகிறது.

ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியப் பிராந்தியங்களிலும் பாலிய விபசாரமும், விபசாரப் பரிவர்த்தனையும் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. மத்திய கிழக்கு நாடுகள் தமது பிராந்தியத்தில் இந்தப் பிரச்சினை இல்லையென்று வாதிட்டாலும், இந்நாடுகளைச் சேர்ந்தவர்களிற் சிலர் பாலியற் சுகங்களைத் தேடி வெளிநாடுகளுக்கு குறிப்பாக தென்கிழக்கு ஆசியப் பிராந்தியங்களுக்குச் சென்று வருவதாக அறிய வருகிறது.

தொழில்மயமான நாடுகளில் வறுமை, குடும்பத்தில் நிலவும் வன்செயல், இம்சை போன்றனவும்

படிப்பகம்

www.padippakam.com

போதைப்பொருள் பிரயோகமும் பாலிய விபசாரமும் அதிகரிப்பதற்கு ஏதுவாக விளங்குகின்றன. வீட்டைவிட்டு ஓடிப்போகும் சிறுவர் சிறுமியர் இந்தச் சகதியில் விழுந்து விடுகிறார்கள். பாலியல் விபசாரத்தால் பணம் திரட்டுவோரைத் தண்டிப்பதற்கான சட்டங்கள் எல்லா நாடுகளிலும் உண்டு. ஆயினும் இவற்றினை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம் காட்டப்படுவதில்லை. மேலும் கிராக்கியைத் தூண்டுகின்ற உளவியல், மற்றும் பிற பிரச்சினைகளை சட்டத்தினால் மட்டும் தீர்க்க முடியாது. ஒரு சமுதாயத்தில் பாலிய விபசாரமும் சுரண்டலும் பீடைப்போலப் பரவினால், அதனைப் பூண்டோடு களைவதற்கு அச்சமுதாயம் முன்வந்து சட்ட அதிகாரிகளுக்கு உதவ வேண்டும். சட்டமும் நீதியும் அடிப்படையில் சிகிச்சைப் பாங்கானவை. சமுதாய உணர்வுடன் கூடிய தடுப்பு நடவடிக்கை சார்ந்த தொடர்பான கொள்கைகள் இன்றியமையாதவை, சமூகப் பாதுகாப்பு, மற்றும் நல்வாழ்வு தொடர்பான கொள்கைகள், பெற்றோர் தமது குடும்பங்கள் சிதறாமற் பாதுகாப்பதற்கும் தமது பிள்ளைகளைப் படிப்பித்து அர்த்தமுள்ள சுரண்டலுக்கு அப்பாற்பட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்வதற்கும் வழிவகுக்க வேண்டும்.

உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதும் அவசியம். எங்கேனும் எந்தப் பிள்ளையேனும் அதற்குரிய கௌரவத்துடனும் மதிப்புடனும் நடத்தப்படல் வேண்டும்.

பாலியல் சார்ந்த உல்லாசப் பிரயாணத்துறையை ஒழிப்பதற்கான யோசனைகளில் விகாரமான பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டமைக்காகப் பிடிபட்ட வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை அந்தந்த நாடுகளின் சட்டங்களுக்கமையத் தண்டிப்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர்களின் பரிதாப நிலைமையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதன் மூலமே மேற்படி சீரழிவுக்கான காரண காரியத்தொடர்புகளை அறுக்கலாமென சிறுவர்களின் உய்வு, பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவற்றுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள யுனிசெப் நிறுவனத்தினதும் ஏனைய அமைப்புகளினதும் அனுபவங்கள் காட்டுகின்றன.

விபசாரம், ஆபாச நடவடிக்கைகள் அடங்கலான பாலியல் சார்ந்த சுரண்டல் மற்றும் இம்சைகளிலிருந்து சிறுவர்களையும் சிறுமிகளையும் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை சிறுவர்கள் உரிமைகள் பற்றிய சமவாயம் வலியுறுத்துகிறது. (உறுப்புரை 34). சிறுவர்களைக் கடத்திச் சென்று விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்தல் ஆகியன பற்றியும் கவனஞ் செலுத்தியுள்ளது. (உறுப்புரை 35). பெற்றோர், சட்டப்படியான பாதுகாவலர் அல்லது பிள்ளையைப் பராமரிக்கும் பணி சுமத்தப் பெற்ற வேறெவரினதும் கண்காணிப்பிலுள்ள சிறுவர்களின் பாலியல் இம்சைகளை 19வது உறுப்புரை விவரிக்கிறது.

மேற்குறித்தவாறான சகல நிலைமைகளிலிருந்தும் சிறுவர்களைக் காப்பாற்றவும் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், துஷ்பிரயோகத்துக்கு ஆளானவர்களுக்குச் சிகிச்சையளித்தல் ஆகியவற்றுக்கான செயல்திட்டங்களை உருவாக்கவும் தகுந்த சட்டவாரியான வழிவகைகளை உறுதிப்படுத்துவது சமவாயத்துக்கு ஒப்புதல் தெரிவித்துள்ள நாடுகளின் கடமையாகும்.

உய்வும் மேம்பாடும்

இன்று சுமார் 35,000 சிறுவர்களின் உயிரைக்காப்பாற்றும் சந்தப்பத்தை சர்வதேச சமுதாயம் நழுவவிட்டுவிட்டது. சின்னமுத்து, சளிசுரம், வயிற்றோட்டம், அடங்கலான பல்வேறு காரணங்களால் அச்சிறுவர்கள் இறந்தார்கள். தொழில் மயமான நாடுகளில் இவை உயிருக்குப் ஆபத்தாக இருப்பது அபூர்வம். ஆயினும், வளர்முக நாடுகளில் இவற்றால் இவ்வாண்டில் சுமார் 1 கோடியே 29 இலட்சம் சிறுவர் சிறுமியர்கள் தமது உயிரைப் பறிகொடுப்பார்கள்.

துன்பத்தையும், மரணத்தையும் தடுக்கக்கூடிய நுட்பங்களும் ஏனைய வளங்களும் உலகில் இருந்தும் தடுப்பு மருந்துகள், அன்டிபயோடிக்ஸ் அல்லது மீள நீருட்டும் உப்புகள் என்பன கிடைக்கப்பெறாமையால்

படிப்பகம்

www.padippakam.com

சிறுவர்கள் வருந்தவும், சாகவும் நேருவது எமது துர்ப்பாக்கியம். எனினும், 1990களில் தார்மீக உயர்வென்பது தேசிய, சர்வதேச ஆற்றலுக்கு இரண்டாம் பட்சமாகவே காணப்படுகிறது. இதனால் சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் முன்னரைப்பாக்கிலும் கூடுதலாக முக்கியத்துவம் பெறுகிறது. சிறுவர்கள் ஒவ்வொருவருக்கும் உய்வதற்கும் ஆரோக்கியம், சுகாதாரம், பராமரிப்பு வசதிகள் ஆகியவற்றில் அதியுயர்ந்த தரத்தை எய்துவதற்கும் உரிமையுண்டென்பதைக் சமவாயம் வலியுறுத்துகிற. ஒரு நாட்டின் சட்டங்கள் பருவமெய்வதும் வயதை முன் தள்ளிவைத்திருந்தாலன்றி மற்றும்படி 18 வயதுக்குட்பட்ட சிறுவரை ஓர் ஆள் எனச் சமவாயம் கணிக்கிறது.

சமவாயம் ஆரமப மற்றும்நோய்த்தடுப்புச் சுகாதார பராமரிப்புக்கு விசேட முக்கியத்துவமளிக்கிறது. இதில் பொதுச்சுகாதாரக் கல்வியும் அடங்கும். வறிய சமுதாயங்களில் வாழும் குடும்பங்கள் தமது பிள்ளைகளின் தேவைகளை முடிந்த வரை குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கு இக்கல்வி உதவுகிறது.

உதாரணமாக வயிற்றோட்டம் ஏற்படும் சமயத்தில் உடல் நீர் வற்றுவதைத் தடுப்பதற்கு வேண்டிய இலகுவான உப்புச்சீனிக் கலவையைத் தயாரிக்கும் முறையை பெற்றோருக்குப் போதிக்கலாம். 5 சதத்திற்கும் குறைந்த செலவில் வீட்டிலேயே தயாரிக்கக் கூடிய இந்தக் கலவைகள் ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சம் உயிர்களைக் காப்பாற்றி வருகின்றன.

அண்மையில் பேரு நாட்டில் வாந்தி பேதிக்கொள்ளை நோய் பரவியபோது மேற்சொன்ன வாய்வழி மீள நீர் வழங்குதற்கான உப்புகள் பரவலாகக் கிடைத்தமையும் மேற்படி சிகிச்சை பற்றிப் பொதுமக்கள் அறிந்திருந்தமையும் நோய்வாய்ப்பட்டோரின் மரண விகிதாசாரத்தை 1 சத வீதத்துக்கும் குறைந்த மட்டத்தில் நிறுத்த உதவியது. 256,00க்கும் கூடுதலான பேரு நாட்டவர்கள் வாந்திபேதி நோய்க்கு ஆளானார்கள். ஆனால் இறந்தோரின் எண்ணிக்கை 2500 மட்டுமே. ஒப்பு நோக்காகக் பார்க்கும்போது 1991 இல் 19 ஆபிரிக்க நாடுகளில் வாந்திபேதி நோய் பரவியபோது மரண விகிதாசாரம் 8 சத வீதம் அல்லது அதற்குக் கூடுதலாக அமைந்தது.

தேசங்கள் தமது சிறுவர்களின் நலனின் பொருட்டு செயலாற்றும் ஆற்றல் உடையன என்பதை கடந்த தசாப்த காலத்தில் ஆறு பிரதான ஆட்கொல்லி நோய்களுக்கு எதிராகத் தடுப்பு மருந்தேற்றும் முயற்சியில் ஏற்பட்ட துரித விஸ்தரிப்பு சுட்டிக்காட்டுகிறது. 1990ஆம் ஆண்டளவில் உலகின் 80சதவீதமான சிறுவர்களுகட்கு தடுப்பு மரந்துப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று உலகசுகதார ஸ்தாபனமும், யுனிசெபப் நடத்திய மருந்துப் பிரசார இயக்கத்தினால் உந்தப் பெற்று தேசங்கள் பல அசாதாரணஷமான முறையில் ஆளணிகளைத் திரட்டி மேற்கொண்ட பிரயாசை உலகின் வறிய நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான சிறுவர்கள் தமது ஆயுளின் முதல் ஆண்டில் தடுப்பு மருந்துகளைப் பெறு வழிவகுத்தது. உலகளாவிய இயக்கத்தின் இலக்கு கைகூடியது. அத்துடன், கடந்த ஆண்டில் சுமார் 30 லட்சம் மரணங்கள் தவிர்க்கப்பட்டன. அல்லது (16 லட்சம்பேர்) சின்னமுத்து, நோயிலிருந்தும், (8லட்சம்பேர்) பிரசவசமய ஈர்ப்புவலியிலிருந்தும் (6 லட்சம்பேர் குக்கலிலிருந்தும், உயிர்பிழைத்தனர்.) மேலும் பல லட்சக்கணக்கான சிறுவர்கள் ஆயுட்கால ஊனங்களிலிருந்து காப்பாற்றப்பட்டனர். இவர்களில் 400,000 இளம்பிள்ளைவாத நோயாளிகளும், அடங்குவர். தடுப்பு மருந்துகளின: மூலம் இவ்வளவு உயிர்களையும் பாதுகாக்க ஒரு பிள்ளைக்கு சராசரி 10 அமெரிக்க டொலர் வீதம் செலவாயிற்று.

உயிர்தப்பும் சிறுவர்களின் மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் பற்றியம் சமவாயம் குறிப்பிடுகிறது. இவற்றுள் ஏனையவற்றுடன், கல்விகற்கும் உரிமை, உபத்திரவங்கள், துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப்பெறும் உரிமை, ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமை, கருததுக்களை சுதந்திரமாக வெளியிடும் உரிமை, அக்கருத்துக்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய உரிமை, தமது பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இயலாத குடும்பங்களைத் தாபரிக்க வேண்டிய தேவை என்பன அடங்கும்.

படிப்பகம்

www.padippakam.com

ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) மா அதிபர் பெடரிகோ மேயர் குறிப்பிட்டவாறு, சிறுவர்களின் உயிரைப் பேணும் போராட்டம் அவ்வாறு பேணப்பட்ட உயிர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் முயற்சியுடன் இணைந்ததாக அமைய வேண்டும். யுனிசெப்பின் பிரயாசையால் உயிர்க்காக்கப்படும் சிறுவர்கள் (நாள் தோறும் 7000பேர்) தமது மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் அருகிவரும் உலகில் வளர இருப்பது முரண்பாடான காரியமாகும் என அவர் குறிப்பிடுகிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர் இச்சிறுவர்களின் உயிரைப்பலி கொண்டிருக்கக் கூடிய வறுமை, அறியாமை, போன்ற அதே அம்சங்கள் உடல், உள, மற்றும் ஆய்வறிவு மேம்பாட்டைத் தொடர்ந்தும் ஊறுபடுத்தாதிருப்பதற்கு நாம் என் செய்யலாம்?

ஒப்புதல் கொடுத்த நாடுகள் ஆரம்ப வகுப்புகளிலாவது இலசவமாகவும் கட்டயமாகவும் கல்வி வழங்கும் கடப்பாடுடையனவெனச் சமவாயம் வரையறுத்துள்ளது.

1990செப்டெம்பரில் நடைமுறைக்கு வந்தது முதல் சிறுவர்க்கான உலக உச்சிமாநாட்டில் உய்வு, மேம்பாடு என்பன தொடர்பாக பிரகடனஞ்செய்யப்பட்ட 27 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான உறுதிமிக்க துணைக்கருவியாகச் சமவாயம் பரிணமித்துள்ளது. 2000 ஆம் ஆண்டுக்கான இலக்குகளில் பினவருவன அடங்கும் பிரதான சிறுபராய நோய்களைக் கட்டுப்படுத்தல், சிறுவர் போசாக்கின்மையைச் சரிபாதியாகக் குறைந்தல், ஐந்து வயதுக்கு உட்பட்டோரின் மரண விகிதாசாரத்தை மூன்றில் ஒரு பங்காக குறைத்தல், தாய்மைச்சமய மரண விகிதாசாரத்தை சரிபாதியாக குறைத்தல், சகல சமுதாயங்களுக்கும் பாதுகாப்பான நீர்விநியோகமும், வடிகால் வசதிகளும் வழங்குதல், குடும்பத்திட்டச் சேவைகள் உலகெங்கும் கிடைக்கச் செய்தல், சகல சிறுவர்களுக்கும் அடிப்படைக்கல்வி ஊட்டுதல்.

உலகின் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான செலவுச் சுருக்கமான நடைமுறைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆண்டுதோறும் 25 கோடீ நூறு கோடி அமெரிக்க டொலர் மேலதிகமாகத் தேவைப்படுமென்று யுனிசெப் மதிப்பிட்டிருக்கிறது. இது பெருந்தொகை பணம் போலத்தோன்றலாம். ஆனால் இந்த வருடம் அமெரிக்கர்கள் பியர் பானத்துக்கும், ஐரோப்பியர்கள் திராட்சை ரச மதுவுக்கும் செலவிடவிருக்கும் பணத்திலும் இது மிக மிகக் குறைந்த தொகையே.

கல்வி

கோடிக்கணக்கான சிறுவர்களுக்கு படிப்பு என்பது தெருக்கள், வயல்வெளிகள் அல்லது கூலிவேலைத்தளங்களில், அதாவது பாடசாலை தவிர வேறெங்காவது பெற்றுக்கொள்ளும: ஒன்றாக இருக்கிறது. இந்த வருடம் வளர்முக உலகில் 6 - 11 வயதுக்குட்பட்ட 1000 லட்சத்திற்கும் கூடுதலான சிறுவர், சிறுமியர்கள்: அடிப்படைக் கல்வி பெறும் வாய்ப்பற்றவர்களாக இருக்கிறார்கள். இந்தப் போக்கு நீடிக்குமானால் 2000 ஆவது ஆண்டளவில் இத்தொகை இருமடங்காகும்.

இதில் வருந்தத்தக்க விடயம் என்னவென்றால், இந்த இளைஞர்களில் பெரும்பாலானவர்களுக்கு தமது பெற்றோருக்கு இருந்ததைப் பார்க்கிலும் சிறப்பான வாய்ப்பைப் பெற வழி இருக்காதென்பதாகும். அநேகர் இளம் பராயத்திலேயே வேலைத்தளங்களில் உபத்திவரங்களுக்கு உள்ளாவார்கள். முறையான அடிப்படைக் கல்வி இல்லாமையால் அவர்களின் எதிர்காலம் வறுமையாலும் எழுத்தறிவின்மையாலும் இருண்டு கிடக்கிறது.

எழுத்தறிவின்மை கூடுதலாக இருக்கும் வறிய நாடுகளில் எதிர்காலம் மேலும் மோசமானதாக இருக்கிறது. படிப்பறிவற்ற தொழிலாளர் அணி ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக விளங்குகிறது. விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை, முன்னேற்றங்கள் அதிக உணவு உற்பத்தி செய்வதைச் சாத்தியமாக்கியுள்ளன. தொழில் துறை உற்பத்திகளைப் பெருக்கியுள்ளது. நோய், மரணம், ஆகியவற்றுக்கான முக்கிய காரணங்களைத் தடுத்துவருகின்றன. ஆயினும் இந்த அறிவை எவ்வளவு சிறப்பாகக் கிரகித்துப் பயன்படுத்தலாமென்பதிலேயே ஒரு நாட்டின் பொருளாதார, சமூக, முன்னேற்றங்கள் முன்னரைப் பார்க்கிலும் அதிகம் தங்கியுள்ளன.

படிப்பகம்

1990இல் (தாய்லாந்து) ஜொம்தியன் நகரில் நடைபெற்ற அனைவருக்கும் கல்வி தொடர்பான உலக மாநாடு கல்வித்துறையில் இரண்டு தசாப்த காலம் ஏற்பட்ட முன்னேற்றத்துக்குப் பின்னர் வளர்முக உலகில் ஆரம்பக் கல்வித்துறையில் உலகளாவிய முறையில் முதலீடு செய்தல் ஸ்தம்பிதமடைந்துள்ளதெனவும் ஆபிரிக்காவின் அநேக பகுதிகளில் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் எச்சரிக்கை செய்தது. சில நாடுகளில் கல்வித்துறைக்கென ஒதுக்கப்படும் பணம் பாடநூல்களுக்கோ, ஆசிரியர்களின் சம்பளத்துக்கோ போதாதாயுள்ளது. கல்வியின் தராதரம் அதாலபாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ளமையால், பெருந்தொகையான மாணவர்கள் படிப்பைக் கைவிட்டு வருகிறார்கள். 1980களின் முடிவில் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம் (யுனெஸ்கோ) 100 வளர்முக நாடுகளில் நடத்திய ஆய்வின்படி மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் ஒவ்வொரு மாணவருக்கும் ஒதுக்கி வந்த தொகையைக் குறைந்துள்ளனவென்றும், 50சத வீதமான நாடுகள் ஆரம்ப வகுப்புகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை வீழ்ச்சியடைந்துள்ளதெனவும் தெரியவந்துள்ளது. வளர்முக உலகில் வயதுவந்த நால்வரில் ஒருவர் வீதமானவருக்கு படிக்கவோ, வாசிக்கவோ தெரியாது.

இந்தப்புள்ளி விவரங்களில் மற்றுமொரு அவமானம் மறைந்து கிடக்கிறது. இந்த வருடம் ஆரம்ப பாடசாலையிற் சேராதிருக்கும் சிறுவர்களில் குறைந்த பட்சம் 60 சத வீதமானோர் பெண்பிள்ளைகளாவர், உலகில் எழுத்தறிவற்ற நூறுகோடி மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்களாவர்.

கல்வித்துறையில் பெண்களுக்குப் பாகுபாடுகாட்டும் நாடுகள், எதிர்வரும் பல தசாப்தங்களில் அதன் பாதகமான விளைவுகளை அனுபவிக்க நேரும். படிப்பறிவு, பெற்ற பெண்கள், தமது உயரிய ஆக்கத்திறன் மூலமும், நல்ல போசாக்கு, சுகாதாரம், வயிற்றோட்டத்தினால் ஏற்படும் உடல் நீர்வற்றுதலுக்கு எதிராக வாய்வழி மீள நீரூட்டும் சிகிச்சை, தடுப்பு, மருந்தூட்டல், குடும்பத்திட்டம், போன்ற அடிப்படை அறிவின் பயனாக ஆரோக்கமான சிறுவர்களை வளர்ப்பதன் மூலமும், ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். படித்த பெண்கள் காலந்தாழ்த்தியே திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆரோக்கியமான குழந்தைகளை அளவோடு பெறுகிறார்கள். தமது வாரிசுகளின் கல்வி வளர்ச்சியில் முதலீடு செய்வதன் மூலம் மேற்படி அனுகூலங்களைப் பெருக்கிக் கொள்கிறார்கள் என்று பல்வேறு ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன.

கல்வித்துறையில் முதலீடு செய்வதனால் கிட்டும் வருமானத்தைச் சம்பளம், உற்பத்திறன் ஆகிய அளவுகோல்களைக் கொண்டு கணித்தல், பெண்கள் ஆண்களிலும் 20 சதவீதம் கூடுதலாக வருமானம் பெற்றுத்தருகிறார்கள் என மலேசியாவில் நடத்திய ஆய்வுகள் தெரியத்தருகின்றன.

சிசுமரண விகிதாசாரசத்தைக் குறைப்பதற்கு அதிமுக்கியமான ஒரே மார்க்கம் பெண்களின் எழுத்தறிவேயாகும் என்கிறார் யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் கிராண்ட் படிப்பறிவோ எழுத்தறிவோ அற்றவர்களினுடையதைப் பார்க்கிலும் படித்த தாய்மாரின் பிள்ளைகள் உயிர்பிழைப்பதுக்கும் ஆரோக்கியமாக வளர்வதற்கும் அதிக சந்தர்ப்பம் உண்டு.

பாடசாலைகளில் அதிக பிள்ளைகளைச் சேர்ப்பிப்பது முதற்படியாகவே அமையும் என்று யுனெஸ்கோவின் மா அதிபர்பெடரிகோ மேயர் ஜொம்தியன் மாநாட்டிற் குறிப்பிட்டார். பல நாடுகளில் கல்வித்தராதரம் குறைந்து காணப்படுவதன் விளைவு மாணவர்களின் பலவருடகாலம் பாடசாலைக்குச் சென்றபோதிலும் நிலைபேறான எழுத்தறிவைப் பெறமுடியாமலிருப்பதாகும். ஆரம்பக் கல்வித்துறைக்குப் புதுப்பலம் ஊட்டுவதற்கு உலகளாவிய அடிப்படையில் ஏற்படக்கூடிய மேலதிகச் செலவு ஆண்டுக்கு 500 கோடி அமெரிக்க டொலர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனினும், இத்தொகையை ஏற்கவேயிருக்கும் வளங்களை மீளொதுக்கீடு செய்வதன்மூலம் சரிகட்டிக் கொள்ளலாமென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வளர்முக நாடுகள் சராசரியாக கல்வி, சுகாதாரம் ஆகிய இருதுறைகளைப் பார்க்கிலும் அதிகமாக இராணுவத்திற்கு செலவிட்டு வருகின்றன என்றும் சில நாடுகள் தமது சிறுவர்களுக்குக் கல்வி

புகட்டும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதிலும் நான்கு மடங்கு அதிக ஊதியத்தைப் போர்புரியத் திரட்டும் படை வீரர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகள் பெரும்பான்மையானோருக்கு எழுத்தறிவு புகட்டுவதற்குப் பதிலாக வெகுசில பணக்காரர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வி ஊட்டுவதில் பணத்தைச் செலவிட்டு வருகின்றன.

இந்தியாவில் கல்வித்துறைச் செலவில் 50சதவீதம் கற்றறிந்த 10 சதவீதமானோருக்கு மானியம் வழங்குதற்குச் செலவாகின்றதெனக் கணிக்கிப்பட்டிருக்கிறது. இந்தியா, தொழில் வாய்ப்பிலும் அதிக தொகையாகப் பட்டதாரிகளை உற்பத்திசெய்துவிட்டு, அவர்களில் ஆற்றல்மிக்க பலர் வெளிநாடுகளில் வேலைதேடிச் செல்வதை ஆற்றாமையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறது. அதேவேளையில் அந்நாட்டின், அரைவாசி அளவான சிறுவர்கள் ஆரம்ப கல்வியைப்பூர்த்திசெய்யத் தவறிவிடுகிறார்கள். ஒரேயொரு பட்டதாரியை உண்டாக்க ஏற்படும் செலவில் சுமார் 70 சிறுவர்களுக்கு ஆரம்ப கல்வி ஊட்ட முடியுமென்று கணிப்பிடப்பட்டிருக்கிறது.

மூன்று பிரதான இலக்குகளை அடையும் பாங்கில் தமது செலவினங்களைச் சீரமைக்குமாறு ஜொம்தியன் மாநாட்டின் பிரதான அமைப்பாளர்களான யுனெஸ்கோ, யுனிசெப், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திட்டம், உலக வங்கி ஆகியன உலக நாடுகளைச் கேட்டுக்கொண்டன. 2000ம் ஆண்டளவில் உலகச் சிறுவர்களில் 80 சதவீதத்தினராவது ஆரம்பக் கல்விபெறச் செய்தல், வயது வந்தோரின் எழுத்தறிவின்மையை 1990இன் மட்டத்திலும் 50 சதவீதமாக்க குறைத்தல், சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் சம வாய்ப்பு என்பவனவே இம்மூன்று இலக்குகளுமாகும்.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் இரண்டு உறுப்புரைகள் கல்வி, சார்ந்த விடயங்கள் பற்றித் தனியாக விவரிக்கின்றன. மற்றும் ஐந்து உறுப்புரைகள் கல்வி சார்ந்த இலக்குகளைக் குறிப்பிடுகின்றன.

உறுப்புரை 28 படிப்புத் தொடர்பான அடிப்படை உரிமை பற்றிய வலியுறுத்துவதுடன் பின்வருவனவற்றின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

* அனைவருக்கும் ஆரம்பக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் கிடைக்க வேண்டும்.
* வெவ்வேறு வகையான இடைநிலைக் கல்வியை ஊக்கி வளர்க்க வேண்டும்.
* எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி மற்றும் தொழில்சார் தகவல்கள் கிடைக்க வேண்டும்.
* பாடசாலைக்குக் கிரமமாகச் செல்வதை ஊக்குவிக்கவும் படிப்பை இடையில் நிறுத்திவிடுவதைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

உறுப்புரை 29 கீழ்வரும் தேவைகளை விவரிக்கிறது.

* பிள்ளையின் ஆளுமை, திறமைகள், உடல், உள ஆற்றல்கள் முழுமையாகப் பரிணமிக்கச் செய்தல்.
* சுதந்திர சமுதாயத்தில் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதற்குப் பிள்ளையைத் தயார் செய்தல்.
* பிள்ளை தன் பெற்றோர், கலாசாரத் தனித்துவம், மொழி, ஆசாரங்கள் ஆகியவற்றுடன் மற்றவர்களின் பண்பாடு;, ஆசாரங்கள் ஆகியவற்றையும் கனம் பண்ணும் பண்பை வளர்த்தல்.

சமவாயத்தின் வேறிடத்தில் சிறுவர்களுக்குரிய கீழக்காணும் உரிமைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

www.padippakam.com

சமூக, கலாசார நோக்கங்கள் சார்ந்த தகவல்களைப் பெறல் (உறுப்புரை 17).. பெற்றோர் தொழில்புரியும் வேளையில் பிள்ளை பராமரிப்பு மற்றும் சேவைகளைப் பெறல் (உறுப்புரை 18) இளைப்பாறுதல் ஓய்வெடுத்தல் மற்றும் கலாசாரம், கலை சார்ந்த நடவடிக்கைகளில் பங்குகொள்ளும் சுதந்திரம் (உறுப்புரை 31) சர்வதேச சட்டத்தின்படி தமது உரிமைகள் இன்னின்வை வென்பதை உணர்ந்துகொள்ளும்பொருட்டு சமவாயத்தின் உறுப்புரைகள் சிறுவர்கள் வயது வந்தவர்கள் ஆகிய அனைவருக்கும் பரவலாகத் தெரியச் செய்வதும் பங்காளி நாடுகளின் கடமையென உறுப்புரை 42 விவரிக்கிறது.

நாடுகளுக்கிடையிலான மகவேற்புகள்

கடந்த ஆண்டில் தொழில்மய நாடுகளைச் சேர்ந்த அந்நியர்கள் ஆசியா, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 20,000 சிறுவர்களைத் தத்தெடுத்துக்கொண்டனர். சுகதேசிகளாகவுள்ள சிசுக்களுக்கு கிராக்கி துரிதமாக வளர்ந்து வருகிறது.

வட அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் தத்துப் பிள்ளைகளாகக் கொடுப்பதற்கு இருக்கும் சிசுக்களின் தொகை அருகி வருகிறது. ஒவ்வொரு ஆரோக்கியமுள்ள சிசுவுக்கும் 50 விண்ணப்பதாரர் என்னும் விகிதாரத்தில் இங்கெல்லாம் கிராக்கி பெருகிவருகிறது. இதற்கு முக்கிய காரணம் கருத்தடை, கருச்சிதைவு, என்பனவும் தனித்த தாய்மார் தமது பிள்ளைகளைத் தம்மோடு வைத்துக்கொள்வதில் நாட்டம் காட்டுவதுமாகும். குழந்தைகளைச் சுவீகரித:துக் கொள்வதற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை தோன்றியதன் விளைவாக பிள்ளைப் பாக்கியமற்ற குடும்பங்கள் வெளிநாடுகளில் தனியார் துறை ஆள்களிடம் அல்லது முகவர் நிலையங்களிடம் சிசுக்களை நாடிச்செல்ல ஆரம்பித்தனர். இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்வதற்கு மேற்படி நிறுவனங்கள் பெருந்தொகைப் பணத்தை வசூலிக்கின்றன.

நாடுவிட்டு நாடு வாரியாக நடைபெறும் மகவேற்புகளில் சுமார் 75 சதவீதமானவை அந்தரங்கமாக சுத்தியுடனும் குழந்தையின் நலனைக் கருத்திற் கொண்டும் வெற்றிகரமாக அமைகின்றன என்பதை அனுபவமூலமாக அறியமுடிகிறது. ஆனாலும் குழந்தைகளுக்கு ஏற்பட்டுவரும் கிராக்கி, தரகர்களுக்கு மக்கள் கொடுக்க தயாராக உள்ள பணத்தின் தொகை, வளர்முக நாடுகளிலிருந்து குழந்தைகளைச் சுவீகரித்து வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வது தொடர்பான சட்டங்களின் குறைபாடுகள் என்பன சிறுவர் உரிமைகள் மீது அக்கறை கொண்டுள்ள வட்டாரங்களில் பீதியைத் தோற்றுவித்துள்ளன. சுவீகாரம் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கு முன்மாதிரியாக சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் விளங்குகிறதென்பது சிறுவர் உரிமைத் துறை நிபுணர்களின் கருத்தாகும்.

மகவேற்புத் தரகர்கள் அறவிடும் தொகை, குழந்தை ஒன்றினுக்கு அமெரிக்க டொலர் 5000 முதல் 30,000 வரை ஆகும். இது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் நாடுவிட்டு நாடு சென்று அநாதைக் குழந்தைகளைத் தத்தெடுக்கத் தூண்டுதலாயிருந்த மனிதாபிமான உணர்ச்சி செத்துவிட்டதென்பதையே புலப்படுத்துகிறது. ஐரோப்பாவில் யுத்தத்தினால் அநாதைகளான சிறுவர்களைப் பல அமெரிக்கர்கள் தத்தெடுக்க முன்வந்தபோதே நாடுவிட்டு நாடு சென்று மகவேற்கும் வழக்கம் உத்வேகம் பெற்றது. கொரிய யுத்தத்தின் முடிவில் இந்த வழக்கம் மேலும் தீவிரமடைந்தது. அந்த காலகட்டத்தில் அநாதைகளும் அமெரிக்கர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் கணிசமான அளவில் சுவீகரிக்கப்பட்டார்கள்.

துரதிஷ்ரவசமாக இன்றைய நாள்களில் நாட்டுக்கு நாடு நடைபெறும் சுவீகாரம் குடும்பச் சூழலை இழந்த குழந்தைகளின் பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக அமைவதற்குப் பதிலாக பிள்ளையில்லாக் குடும்பங்களின் பிரச்சினைக்குப் பரிகாரமாகக் கருதப்படுகிறது. பலத்த கிராக்கி, கொள்ளை, லாபம், என்பனவும் பல தரப்பட்ட செய்திச் சரடுகளுக்கு வழிவகுத்துள்ளன. இவற்றுள் பின்வருவன அடங்கும்.

படிப்பகம்

* குளிர்காலப் பருவத்தில் அமெரிக்க ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் மத்திய அமெரிக்க நாடொன்றில் குழந்தைகளைப் பெற்று, அங்கேயே அவற்றைப் பெயர் பதிவித்தபின் அக்குழந்தைகளுடன் சொநதது ஊருக்குப் திரும்புகிறார்கள். ஜெர்மனிய ஆராய்ச்சியாளர் ஒருவர் 1987இன் கோடைப் பருவத்தில் பிறப்பு இடாப்பொன்றைப் பரிசோதனை செய்தபோது 6 ஒல்லாந்தர், 8 பிரேஞ்சுக்காரர், 11 ஜெர்மனியர், 15 ஸ்பானியர்கள், 6 சுவிஸ்காரர், 61 அமெரிக்கர்கள் ஆகியோர் பிள்ளைகள் பெற்றதாகப் பதிவாகி இருந்ததைத் கண்டுபிடித்தார்.

* லத்தீன் அமெரிக்க நாடொன்றிலே 35 வயதான ஒரு பெண் குழந்தைகளை திருடி, உள்ளூர் வைத்தியர் ஒருவர், சட்டதரணி ஒருவர், வெளிநாட்டவர்கள் பலர் ஆகியோருக்கு தலா 11 டொலர் விலைக்கு விற்றமைக்காகக் கைது செய்யப்பட்டார். ஏறக்குறைய 30 பிள்ளைகளை இந்தப் பெண் திருடிவிற்றிருக்கலாமென உள்ளூர் பத்திரிகைகள் செய்து வெளியிட்டன.

* 33 வயதான ஐரோப்பிய குடும்பப் பெண் ஒருத்தி, பொறுப்பற்ற கணவனுக்கும், அவனது மைத்துனனுக்கும் ஏழாண்டுக் காலத்தில் பெற்றெடுத்த ஏழு குழந்தைகளை சுமார் 35,000 டொலர் பணத்துக்காக விற்றார். இந்தக் குழந்தைகள் ஐரோப்பாவில்,: புதுக்குழந்தைப் பெருஞ்சந்தை ஒன்றினூடாக ஒவ்வொன்றும் 15,000 முதல், 25,000 பவுன் விலைக்கு மீண்டும் விற்பனை செய்யப்பட்டதாகப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன.

* ஐந்து பிள்ளைகளின் தாயான லத்தீன் அமெரிக்க அபலை ஒருத்தி தன் 10 வயது மகனை ஐரோப்பிய நாட்டுப் பெற்றோருக்கு 300 டொலருக்கு தத்தாகக் கொடுத்த பின்னர் 7 வயதும், 12 வயதும் உள்ள மேலும் இரண்டு மகன் மாரையும் சுவீகாரத்துக் கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

தரகர்கள் உயிரியல் மற்றும் சுவீகாரப் பெற்றோர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்யும் சிசுப் பரிமாற்றம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாறான தனிப்பட்ட ஏற்பாடு பிள்ளையின் பாதுகாப்புக்கோ அதன் பெற்றோர் அல்லது தாபரிப்புப் பெற்றோரின் நலனுக்கோ உகந்ததல்ல. பொருளாதார நோக்கங்கள் காரணமாக சட்ட ரீதியான மகவேற்புக்கும் பிள்ளை கடத்தும் தொழிலுக்கும் வேறுபாடு காண்பது சிரமமாகிறது.

தனிப்பட்ட முறையிலான மகவேற்பில் உள்ள வேறு முக்கிய குறைபாடுகள்:

* மகவேற்புக்கான காரணத்தை நிர்ணயித்தல்

* பெற்றோரின் சம்மதம் பெறப்பட்டதா என்னும் ஐயம்.

* குழந்தையின் ஆரோக்கியம் பற்றிய அரைகுறையான அல்லது பிழையான தகவல்

இன்றைய சர்வதேசப் போக்கு பிறந்த நாட்டில் சரி, புகும் நாட்டில் சரி, தனிப்பட்ட முறையிலான சுவீகார நடவடிக்கைகளுக்குப் பதிலாக தகுதிவாய்ந்த முகவர் நிலையங்கள் மூலமாக அவற்றை ஏற்பாடு செய்தலாகும். எந்தவகையான சுவீகாரத்துக்கும் கீழ்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டுமென்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

* சுவீகாரப் பெற்றோரை மிக அவதானமாகத் தேர்ந்தெடுப்பதுடன் பிள்ளையின் புகுமனையைப் பற்றியும் விரிவாக ஆராய்தல்

* சொந்த நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும் பிள்ளையின் விசேட தேவைகள் பற்றி சுவீகாரப் பெற்றோரைத் தயார் செய்வதுடன் தத்தெடுத்த பின்னர் ஆலோசனையும் ஆதரவும் அளித்தல்.

* பிள்ளைகளுக்கும் அவர்களைச் சுவீகரிக்க முன்வரும் பெற்றோருக்கும் பொருத்தம் பார்த்தல்

www.padippakam.com

இதில் பிள்ளையின் பின்னணி, தேவைகள், ஆகியவற்றுடன் அவசியமான தகவல்களையும் தாபரிப்புப் பெற்றோருக்கு வழங்குதலும் அடங்கும்.

* உயிரியற்பாங்கான பெற்றோரைக் குழந்தையிடமிருந்து நிரந்தரமாகப் பிரிந்திருப்பதற்குத் தயார் செய்தல்.

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலும் பொதுநலவாய தந்திர ராஜ்யங்களிலும் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட கொந்தளிப்புகளின் விளைவாக சுவீகாரத்துக்கு இருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை துரிதமாகப் பெருகும் சாத்தியமுண்டு. 1991இல் நாடுகளுக்கிடையில் சுவீகரிக்கப்பட்ட சிறுவர்களின் சர்வதேச மொத்தத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினை ருமேனியா, வழங்கியது. 1989இன் பிற்கூற்றிலிருந்து 1991இன் நடுக்கூற்றுவரையான 18 மாத காலப்பகுதியில் சுமார் 10,000 சிறுவர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேறினார்கள். அல்பேனியா, மோல்டோவா, ருமேனியா ஆகிய நாடுகள் தமது எல்லைகளை உலகுக்குத் திறந்துவிட்டதன் பின்னர் இரவோடிரவாக சுவீகாரப் பெற்றோரின் சொர்க்கமாக அந்நாடுகள் மாறின. சிறுவர்களின் இனவாரியான ஒற்றுமையும் சுவீகாரம் தொடர்பான சட்டங்கள், சமூக கட்டுப்பாடுகள் என்பன தளர்வாக இருந்தமையும் இதற்குக் காரணங்களாயின. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த நாடுகளுக்கிடையிலான மகவேற்புகளில் அரைக்கரைவாசிக்கு அமெரிக்காவே புகலிடமாக அமைந்தது.

நாடுகளுக்கிடையிலான மகவேற்புகளில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுதல் தொடர்பாகச் சர்வதேச சமுதாயம் கொண்டுள்ள அக்கறையின் பயனாக, பிள்ளைகளின் சொந்த நாடுகளிலேயே மாற்று ஏற்பாடுகளைச் செய்யும் முயற்சி மீளவும் மேற்கொள்ளப்படுகிறது. கட்டுப்பாடுகளை பலப்படுத்தும் முயற்சிகள், தரகர்களாகத் தனிப்பட்டோருக்குப் பதில் முகவர் நிலையங்களை நாடுதல், தத்துப் பிள்ளைகளின் சொந்த நாடுகளில் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை இயற்றுதல் என்பன இம் முயற்சிகளிற் சிலவாம். மேலும் மகவேற்பு மற்றும் ஒரு குடும்பச் சூழலில் குழந்தை வளர வேண்டியதன் அவசியம் என்பன தொடர்பான உரிமைகளைச் சிறப்பாக விவரிக்கும் சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் மதிப்பு அதிகரித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுவீகாரத்தை அங்கீகரிப்பதில் உறுதியான கட்டுப்பாட்டைப் பின்பற்றுதல், சிறுவர்களை ஒரு நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குக் கொண்டு செல்லும் விடயத்தில் கடும் நிபந்தனைகளை, விதித்தல், இவற்றில் ஈடுபடுவோர் கொள்ளை இலாபம் சம்பாதிக்காது நேர்மையாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்தல் என்பன சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளின் கடமைகளாகும்.

குடும்பச் சூழல் மறுக்கப்பட்ட சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குதலும் பொருத்தமான மாற்றுக் குடும்பப் பராமரிப்பை அல்லது நிறுவனவாரியான உறைவிடத்தை உறுதிப்படுத்தலும் சமவாயத்தின் பங்காளி நாடுகளின் கடமையென உறுப்புரை 20 கூறுகிறது. இந்தப் பராமரிப்பின்போது பிள்ளையின் கலாசாரப் பின்னணி கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். தாபரிப்பும் இதில் அடங்கலாம். பிள்ளையின் பிறந்த நாட்டிலேயே மாற்றுநடவடிக்கை எடுப்பது விருப்பத்தக்கதென உறுப்புரை 21 சொல்லுகின்றபோதிலும் பொருத்தமான தாபரிப்பு அல்லது சுவீகாரக் குடும்பம் சொந்த நாட்டிலேயே கிடைக்காத பட்சத்தில் நாடுகளுக்கிடையிலான மகவேற்பு நடைபெறலாமெனவும் குறிப்பிடுகின்றது. சமவாயத்தின் வேறு உறுப்புரைகளும் நாடுகளுக்கிடையிலான மகவேற்பு பற்றிக் குறிப்பிடுகின்றன.

சுவீகாரம் நடைபெறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தகுதி வாய்ந்த அதிகாரிகளே அங்கீகாரம் வழங்கவேண்டும். பிள்ளையின் சூழ்நிலை தொடர்பான நம்பத்தக்க தகவலை ஆதாரமாகக் கொண்டே அங்கீகாரம் தீர்மானிக்கப்பட வேண்டும். உறுதி செய்யும் நாடுகள் இவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

பிள்ளையின் சொந்த சமூக தேசிய பின்னணியில் தகுந்த பராமரிப்பு வழங்கும் முயற்சியில் தோல்வி கண்டதன் பின்னரே வெளிநாட்டு சுவீகாரம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

படிப்பகம்

மேற்சொன்ன பிரச்சினைகளை முன்னிட்டு, 1988இல் தனியார் சர்வதேசச் சட்டம் தொடர்பாக ஹேக் நகரில் நடைபெற்ற மாநாட்டில் நாடுகளுக்கிடையிலான சுவீகாரத்தின் குடியுரிமை அம்சங்கள் பற்றிய சமவாயம் ஒன்று உருவாக்கப்பட முடிவு செய்யப்பட்டது. அத்தகைய சமவாயம் நாடுகளுக்கிடையுள்ள சுவீகாரம் தொடர்பான விதிகளை வரையறை செய்வதுடன், நடைமுறைகளைச் செம்மைப்படுத்தவும், உதவும். அத்துடன், அனுப்பும் நாடு, ஏற்கும் நாடு இரண்டினதும் கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றில் ஓரளவு ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்தும் ஹேக் மாநாட்டின் தீர்மானத்துக்கு ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய சபை, அமெரிக்க ராஜ்யங்களின் அமைப்பு ஆகியவற்றின் ஆதரவு உண்டு.

உணர்ச்சிப் பாங்காகவும், ஏனைய வகையிலும் அல்லல் சில இருப்பினும் குடும்பங்களைப் பிரிந்து வாழும் சிறுவர்களுக்குத் தாபன வாரியான பராமரிப்பிலும், சுவீகாரமே மேலானதென்று நம்பப்படுகிறது. நீண்டகாலம் ஒரு பராமரிப்பு நிலையத்தில் வளரும் பிள்ளை உள்ளூரிலோ வெளிநாட்டிலோ புதியதொரு தாபரிப்புக் குடும்பத்தைத் தேடிப்பிடிப்பது அரிது. வெளிநாடுகளில் சுவீகாரம் செய்யப்பட்ட சிறுவர்களில் ஐந்தில் மூன்று பங்கினர் குழந்தைகளாவர்.

ஆகவே சிறுவர் உரிமைகள பற்றிய சமவாயத்தின் குறிக்கோள் குடும்பங்களை இழந்த சிறுவர்களுக்குக் கிட்டும் நல்ல வாய்ப்புகளுக்கு இடையூறு விளைவிப்பதல்ல, அவர்களை விற்பனைப் பண்டங்களாகத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கேற்ற சர்வதேச நியமனங்களையும் கட்டுப்பாடு நடைமுறைகளையும் நிலைநாட்டுவதாகும்.

தெருவோரச் சிறுவர்கள்

நகரங்கள் வளர வளர அவற்றின் உருவழிந்த ஓரங்களில் வாழும் சிறுவர், சிறுமியர் தொகையும் பெருகுகிறது. பாலியப் பருவத்தை இழந்த சிறுவருக்கென ஒரு கொடி இருக்குமானால் நகரத்துத் தெருவோரச் சிறுவன் அதன் சின்னமாக விளங்குவான்.

2000ஆவதுர் ஆண்டளவில் உலக சனத்தொகையில் சரிபாதியோர் 25 வயதுக்குடபட்டோராயும் நகரங்களில் வசிப்போராயும் இருப்பர். அவர்களில் அநேகர் ஏழைகளாக வாழ்வார்கள். 1980களின் நடுக்கூற்றில் இருந்தவர்களைப் பார்க்கிலும் 24 கோடியே 70 லட்சம் கூடுதலான 5-19 வயதுக்குட்பட்ட நகரச் சிறுவர்கள் இருப்பார்கள். இவர்களிற் பெரும்பான்மையானவர்கள் (23 கோடியே 30 லட்சம்) வளர்முக நாடுகளில் வசிப்பர். 2000 ஆவது ஆண்டளவில் லத்தீன் அமெரிக்காவில் மட்டுமே 30 கோடி பருவமடையாச் சிறுவர்கள் நகரங்களைச் சார்ந்தவர்களாக இருப்பார்களென்றும் இவர்களில் 30 சதவீதத்தினர் ஏழைகளாக விளங்குவர் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. முற்றாக அல்லது அரைக்கரைவாசி கைவிடப்பட்ட நிலையில் வாழும் சிறுவர்களின் எண்ணிக்கை கோடிக்கணக்கில் உயரும்.

தெருவோரச் சிறுவர்கள் பற்றிய வரை விலக்கணத்தைப் பொறுத்து அவர்கள் தொடர்பான கணிப்பும் வேறுபடும். ஆயினும், 100 தசலட்சம் என்னும் யுனிசெப்பின் கணிப்பு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வறிய நாடுகளில் மட்டுமின்றிச் செல்வ நாடுகளிலும் தெருவோரச் சிறுவர்கள் காணப்படுகிறார்கள். ஆயினும் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளிலேயே வசிக்கின்றனர். லத்தீன் அமெரிக்கவில் சுமார் 40 தசலட்சம் ஆசியாவில் 25-30 தச லட்சம் ஆபிரிக்காவில் 10தச லட்சம் அனேகர் ஆண்பிள்ளைகள்.

தெருவோரச் சிறுவர் பிரச்சினை தொடர்பான கணிப்புகளுக்கும் தெருவோரச் சிறுவர் மற்றும் வசிப்பிடமின்மை என்பவற்றுக்குமுள்ள வரையறைக்கும் நிரம்பச் சம்பந்தமுண்டு. புள்ளிவிவர நிபுணர்களும் சர்வதேச முகவர் நிலையங்களும் உலகின் பெரு நகரங்களின் விளிம்புகளில் வாழ்க்கை நடத்தும் கோடிக்கணக்கான சிறுவர்களுக்கு உதவ முனையும்போது தமது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடன் ஓரளவு உறவுகளை வைத்திருக்கும் சிறார்களுக்கும் தான்தோன்றிகளாகத்

தெருக்களையே கதியாகக் கொண்ட சிறுவர்களுக்கும் வேறுபாடு காண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளன. இந்த வேறுபாட்டை நிர்ணயிப்பது முக்கியம். ஏனென்றால் வசதியற்று தெருவோரங்களில் வாழும் குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு இருப்பிடமும் பாதுகாப்பும் கொடுக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியுமானால் தெருச் சிறார்களைப் பராமரிப்பதற்கான நெடுங்காலச் செலவினங்களைச் சமுதாயத்தவர்கள் குறைத்துக்கொள்ள ஏதுவாயிருக்கும்.

நகர்மய முன்னேற்றம் வறுமை, மாற்றுவழிகள், இல்லாமை என்பவற்றின் விளைவே தெருச்சிறுவர் பிரச்சினை, சிலருக்கு குலைந்த குடும்பங்கள் அல்லது வன்செயல்களிலிருந்து நிரந்தர விமோசனமளிக்கும் இடமாக தெருக்கள் விளங்குகின்றன. ஏனையோருக்கு குடும்ப வருமானத்தை இட்டு நிரப்புவதற்கு காலத்தைக் கழித்துச் சந்தோசம் காண்பதற்கு அல்லது வீட்டில் நிலவும் நெருக்கடியான சூழலிலிருந்து தற்காலிக விடுதலை பெறுவதற்கு ஏற்ற இடமாகத் தெருக்கள் அமைகின்றன. யுனிசெப் தெருவோரச் சிறார்களை நான்கு பிரதான பிரிவினராக வகுத்துள்ளது.

* உயிர் பிழைத்திருப்பதும் உறைவிடமுமே உடனடித் தேவைகள் எனக் கருதி தெருவோரங்களில் வாழும் சிறுவர்கள்.

* தமது குடும்பத்தவர்களிடமிருந்து பிரிந்து விடுதிகள், கைவிடப்பட்ட வீடுகள், கட்டடங்கள் போன்ற தற்காலிக உறைவிடங்களில் வசிக்கும் சிறுவர்கள் அல்லது இடம்மாறி நண்பர்களுடன் வாழும் சிறுவர்கள்.

* தமது குடும்பத்தவர்களுடன் உறவு கொண்டிருந்தாலும் வறுமை, இடநெருக்கடி குடும்பத்தில் காணப்படும் பாலியல் சார்ந்த அல்லது வேறு வகை உபத்திரவங்கள் காரணமாகச் சில இரவுகளிலும் பெரும்பாலான பகல்களிலும் தெருக்களிலும் திரியும் சிறுவர்கள்.

* நிறுவனங்களின் பராமரிப்பில் இருப்பவர்களும், இருப்பிடமற்ற நிலைமையில் வெளியேறி மீண்டும் அவ்வாறான நிலையை எய்த நேரும் என அஞ்சுகின்றவர்களுமான சிறுவர்கள்.

நகரங்கள் ஒருபோதும் சிறுவர்களைக் கருத்திற் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதில்லை. அத்துடன் சில சமுதாயங்களில் அவல நிலைக்குள்ளாகிக் கட்டுக்கடங்காமலிருக்கும் இளைஞர்கள், பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளறி விடுகிறார்கள். தெருவோரச் சிறுவர்கள், கொலம்பியா தேசத்தில் கமின்ஸ் அல்லது சிஞ்சஸ் (மூட்டைப்பூச்சிகள்) என்றும் பிரேஸில் நாட்டில் மார்ஜினே (களவாணிகள்) என்றும் பேரு நாட்டில் பஜரோ புருடேரோ (பழங்குருவிகள்) என்றும் வியட்நாமில் புயிடோய் (குப்பைப் பிள்ளைகள்) என்றும் ருவாண்டாவில் சாலிகோமான் (போக்கிலிப் பயல்கள்) என்றும் கமரூனில் முஸ்டிக்ஸ் (கொசுக்கள்) என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களின் வாழ்க்கையில் உண்மையான கரிசனையுடையவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால், பெரும்பாலும் சுரண்டலுக்கும், உபத்திரவங்களுக்கும் உள்ளாவதே அவர்களின் விதி. தென் அமெரிக்காவின் பெரிய நகரமொன்றிலே தினமும் இரண்டு சிறுவர்கள் வீதமானோர் வன்செயல்களுக்கு இலக்காகிறார்கள்.

பூர்வீகம் அல்லது சூழல் எவ்வாறாக இருந்தாலும் படிப்பும் குடும்பத்தின் உறுதியான பற்றுக்கோடும் இல்லாத சிறுவர்கள் முறைசாரப் பொருளாதாரக் கட்டுக்கோப்பிலே அன்றாடங் காய்ச்சிகளாக வாழ்க்கை நடத்த முடியுமன்றி முன்னேறுவதென்பது முடியாத காரியமாகும்.

நகர்சார்ந்த பகுதிகளின் துரித வளர்ச்சியும் தீவிர வேலையில்லாத்திண்டாட்டமும் எந்தத் தொழிலுக்கும் கடும் கோட்டியை ஏற்படுத்துகின்றன. இதனால் லட்சக்கணக்கான சிறுவர்கள் அந்நியர் எடுப்பார் கைப்பிள்ளைகளாக அவதியுறுகிறார்கள். பலர் அவர்களைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

ஆயினும், பெரும்பாலான வளர்முக நாடுகளின் பெரு நகரங்களிலே சேவைகள் சார்ந்த பொருளாதாரத் துறையின் கீழ் மட்டத்தில் இச் சிறுவர்கள் தமக்கெனத் தனித்தனி ஸ்தானங்களை உருவாக்கியிருக்கிறார்கள். எடுபிடி வேலைகள், சப்பாத்து மினுக்குதல், சிறு பண்டங்களைக் கொண்டு

www.padippakam.com

திரிந்து விற்றல், கார்களைக் கழுவுதல், நிறுத்துதல், காத்தல், மற்றும் பல சமுதாயத்துக்குப் பயனுள்ள கூலி வேலைகளை இவர்கள் செய்கிறார்கள். அநேகர் ஏழு அல்லது அதிலும் குறைந்த வயதில் இருந்தே தம்மைத்தாமே தாபரிக்கப்பாடுபடுகிறார்கள். ஆபிரிக்க, ஆசியா, லத்தீன் அமெரிக்கா போன்றவற்றின் நகரங்களிலேயே இத்தெருசிறார்கள் அன்றாடக் காட்சிகளாக விளங்குகின்றமையால் அவர்களைச் சூழ இருக்கும் பெரியவர்கள் அவர்கள் பள்ளிக்கூடம் செல்லாதிருப்பதேன் என்ற கேள்வியைக் கேட்பதேயில்லை. என்ன இவர்கள் துரதிருஷ்டம்.

பல நகாரங்களில் மதச்சார்புடைய அல்லது அரச சார்பற்ற அமைப்புகள் இத்தகைய சிறுவர்க்குப் புகலிடமளித்து வருகின்றன. இளைஞர்களை முறைசாராப் பாடசாலை அல்லது தொழிற்பயிற்சிச் சூழலில் வளரத்தூண்டும் வகையில் உண்ண உணவு அல்லது படுக்க இடம் கொடுத்து உதவி வருகின்றன. (இத்தாலி) புளோரன்ஸ் நகரில் அமைந்துள்ள யுனிசெவ் சர்வதேச சிறுவர் மேம்பாட்டு நிலையம் நகர்சார்ந்த ஏழைச்சிறுவர்களின் நிலைமை தொடர்பாக ஐந்து நாடுகளில் (பிறேசில், இந்தியா, இத்தாலி, கீன்யா, பிலிப்பைன்) மேற்கொண்ட ஆய்வுகளை வெளியிட்டது. நிலையத்தின் நகர்சார் சிறுவர் செயல் திட்டம் நடத்திய இந்த ஆய்வுகள் நகரத்தின் வறுமையின் மத்தியிலேயே வாழும் சிறுவர்களின் பிரச்சிரனை உலகின் பல பாகங்களிலும் வரவர மேசமடைகின்றதென்பதை உறுதிப்படுத்துகின்றது.

பல வளர்முக நாடுகளில் யுனிசெப்பின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் நகர்சார்ந்த அடிப்படைச் சேவைகள் நகர்ப்புற ஏழைகளின் சிறுவர்கள் மீது கவனம் செலுத்துகின்றன. பிலிப்பைன்ஸ் சிறுவர்களுக்கு ஆற்றும் உதவி பெண்களுக்கான வருவாய் உண்டாக்கும் வேலைத்திட்டங்கள், செம்மையான சுகாதார பாராமரிப்பு மற்றும: போசாக்குச் சேவைகள் குடும்பத்திட்டம் ஆகியவற்றுடன் வறிய சமுதாயங்களுக்கான சுகாதார மற்றும் வடிகால் வசதிகள் போன்ற வடிவங்களில் வழங்கப்படுகிறது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் சிறுவர்களின் உயர்ந்த நலன்கள் எவ்வாறான சூழ்நிலைகளிலும் பேணப்படல் வேண்டுமெனவும் பெற்றோர் அல்லது மற்றோர் போதுமான பராமரிப்பை வழங்கத் தவறும் பட்சத்தில் பங்காளி நாடுகள் அப்பொறுப்பை ஏற்கவேண்டுமெனவும் வரையறுத்துள்ளது. (உறுப்புரை 3)

சமவாயத்தின 54 உறுப்புரைகளிற் பெரும்பாலானவை சிறுவர்கள் சம்பந்தப்பட்டன. குடும்பச் சூழலை இழந்த சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும், (உறுப்புரை 20), பெற்றோர் அல்லது பராமரிப்போரின் உபத்திரவம் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து காக்கப்படவேண்டுமெனவும் (உறுப்புரை 19) குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்பதற்கும் (உறுப்புரை 28) தகுந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கும் (உறுப்புரை 27) உரிமையுண்டென்பதை அங்கீகரிக்கிறது.

ஓய்வு, பொழுது போக்கு ஆகியவற்றைக் கொண்ட பாலயப் பருவம், பொருளாதார, பாலியல் இன்னொரன்ன உபத்திரவங்களிலிருந்து பாதுகாப்பு (உறுப்புரைகள் 32,34,36) என்பன பிள்ளையின் உரிமை எனச் சமவாயம் கூறுகிறது. பாலியல் நீதி பரிபாலனத்தில் பாகுபாடு காண்பிக்கக் கூடாதெனவும், (உறுப்புரை 40) குறிப்பிடுகிறது. சிறுவர் சிறுமியர் தமது வறுமையின் நிமித்தமாக பொலிசாரிடமும், சமூகத்தைக் காப்பாற்றும் பொறுப்பைச் சுமந்து நிற்கும் பிற அதிகாரிகளிடமும் அநேக சந்தர்ப்பங்களில் இரட்டிப்புத் தண்டனை பெறுவது வழக்கம்.

நகரங்களுக்கு மானிடத் தோற்றம் அவசியம். வறுமையின் பிடியிற் சிக்கி எதிர்நீச்சல் போடும் கோடிக்கணக்கான சிறுவர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறான பராமரிப்பையும் வளர்ப்பையும் வழங்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது விடயத்தில் சமுதாயவாரியான செயற்பாடு அவசர தேவையாக விளங்குகிறது. அது தார்மீகக் கடமை மட்டுமல்ல, அவ்வாறு செய்யாவிட்டால் எம்மத்தியில் வாழும் வசதியற்ற குரோத குணம்படைத்த மக்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகும்.

படிப்பகம்

www.padippakam.com

பொருளாதாரச் சுரண்டல்

வீங்கிய விரல்களும் வலிக்கும் நுரையீரல்களும் கூனிய முதுகுகளும் கொண்ட சிறுவர்கள் உலகின் எழில்மிகு கம்பளங்களை சிலவற்றை உருவாக்குகிறார்கள்.

பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணகான சிறுவர், சிறுமியர் விளையாடவோ, பாடசாலை செல்லவோ, பாலப் பருவத்தை அனுபவிக்கவோ நேரமின்றி வேலைசெய்கிறார்கள். கோடிக்கணக்கான டொலர் பெறுமதி வாய்ந்த ஏற்றுமதித் தொழிலை நிலைபெறச் செய்துவரும் இவர்கள் பெறும் ஊதியமோ அன்றாட சீவனத்துக்கே போதுமானது. பிஞ்சு விரல்கள் துரிதமாக இயங்கும் பருவமாகிய ஆறு அல்லது ஏழு வயதிலேயே இவர்கள் கம்பளங்களுக்கு முடிச்சுப் போடப்பயிலப்படுகிறார்கள். அனால், நெசவுத்தறிச் சொந்தக்காரர்கள் இவர்களை விரும்பக் காரணம் அவர்களின் கீழ்ப்படிவும், அற்ப சம்பளத்துக்கு மிக மோசமான நிலைமைகளில் வேலைசெய்ய இவர்கள் உடன்படுவதுமேயாகும்.

கம்பள நெசவு சிரமமிக்க, ஆரோக்கியத்தைக் கெடுக்கின்ற தொழிலாகும். சிறுவர்கள் குந்தியிருந்து கம்பளித் தூசைச் சுவாசித்தித்து, கண், துஞ்ச விரல் நொக, மணிக்கணக்கில் வேலை செய்வார்கள். முடிச்சுகளைப் போடுவதற்கு அவர்கள் உபயோகிக்கும் அரிவாள் போன்ற கருவி, விரல்களில் கொப்பளங்களைத் தோற்றுவிக்கும். கம்பளத்தின் இரசாயனச் சாயங்களில் இவ்விரல்கள் தோயும்போது வலி மேலும் மோசமாகும். அவர்கள் வளரும்போது சில சமயங்களில் முதுகில் கூனல் உண்டாவதுமுண்டு. வயதடையும் பருவத்தில் பெரும் பாலானவர்கள் நோயாளிகளாக வேலையிலிருந்து விலகிவிடுகிறார்கள். அநேக சந்தப்பங்ளில் இவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தமது சொந்தப் பிள்ளைகளையே தமது முன்னைய வேலைத்தளங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இவ்வாறாக சுரண்டல் சகடக்கால் பேலச் சுழன்று கொண்டே போகிறது.

சிறுவரைச் சுரண்டி வாழும் வழக்கம் குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்திற்கு மட்டும் உரியதொன்றல்ல. வளர்முக நாடுகளில் மட்டுமல்லாமல் அநேக தொழில்மய நாடுகளிலும் பல லட்சக்கணக்கான சிறுவர்கள் பாலியப்பருவத்திலிருந்தே வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். பலருக்கு வேலை வேதனையின் உறைவிடம். அதற்கு ஏதுவாகவுள்ள நிலைமைகள் குறிப்பாக வறுமை, இரவோடிரவாக மறையக் கூடியதொன்றல்ல. சிறுவர்களின் உழைப்பு பெரும்பாலும் குடும்பத்தின் சீவனத்துக்கு இன்றியமையாததாகிறது. ஆயினும் அரசாங்கங்கள் மனம் வைத்தால் சுரண்டலையும் மனித உரிமைகள் மறுக்கும் ஏனைய தூநடத்தைகளையும் நெறிப்படுத்த முடியும்.

உதாரணரமாக, ஐரோப்பா, இந்தியா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிறுவர் உரிமைப்பிரசாரகர்கள் சிறுவர் உழைப்பைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கம்பளங்களுக்கு எதிராக நடத்திய இயக்கம், கமப்ள உற்பத்தித்துறையில் சிறுவர் உழைப்பைச் சுரண்டும் நடவடிக்கையை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் கம்பள ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையும் அகில இந்திய கம்பள உற்பத்தியாளர் சங்கமும் முன்வருவதற்கு ஏதுவாயிற்று. இறக்குமதியாளரின் வழங்குநர் பட்டியலில் இருந்து பேர் நீக்கப்படும் என்றும் அரசாங்கத்தின் மானியத்தை இழக்க நேரும் என்றும் அச்சம்கொண்ட 30 உற்பத்தியாளர்கள் தமது கம்பளத்தறிகளைப் பதிவு செய்து கொள்வதற்கு முன் வந்தனர். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்களா எனக் கிராமமாகப் பரிசோதனை செய்வதற்கு இது வழிவகுத்தது.

இத்தகைய சிறு வெற்றிகளை உலகமெங்கும் கிடைத்தல் அவசியம். ஏனென்றால், மிக வறிய சமுதாயங்களில் சிறுவர்களை தனித்தோ தமது பெற்றோர் அல்லது உறவினர்களுடன் சேர்ந்தோ வேலைசெய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. பானங்கள், சிற்றுண்டிகள், பத்திரிகைகள் மற்றும் பண்டங்களை அவர்கள் கொண்டு திரிந்து விற்கிறார்கள். பிரேஸில் நாட்டில் வாழைக்குலைகளை வெட்டுகிறார்கள். கொலம்பியாவில் செங்கற்களைச் சுமக்கிறார்கள். மொரக்கோவில் ஓடுகளுக்கு

படிப்பகம்

கல் உடைக்கிறார்கள். எகிப்தில் கந்தை துணிகள் மற்றும் கழிவுகளைச் சேகரிக்கிறார்கள். சூடானில் பஞ்சு அறுவடை செய்கிறார்கள்.

பெரும்பாலான துஷ்பிரயோகங்கள் விவசாயத்துறை, நகர்புற முறைசாராப் பொருளாதாரத்துறை மற்றும் வீட்டு வேலைக்கு ஆள் வைத்திருத்தல் ஆகியவற்றில் இடம் பெறுகின்றன. வீடுகளில் வேலைசெய்யும் இளம் பெண்கள் பெரும் உபத்திரங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்த விபரீதங்களுக்கு உந்து சக்தியாக அமைவன வறுமை, சனப்பெருக்கம், தொழில்மயமாகுதல் மற்றும் நகர்ப்புறங்களின் துரித வளர்ச்சி என்பனவாகும்.

நகர்ப்புறங்களில் வேலைசெய்வதிலும் விவசாயத்துறையில் குடும்பத்தின் ஏனைய அங்கத்தினரின் கண்காணிப்பில் கூலி வேலை செய்வது பாதகம் குறைந்ததாகத் தோன்றலாம். ஆனால், இயந்திர விவசாயம், பண்ணைகளைப் பெருந்தோட்டங்களாக மாற்றியமையும் உச்ச தொழில்நுட்ப உள்ளீடுகளைப் புகுத்தியமையும் ஏழைக்கிராம மக்களும் அவர்கள் உழுதுண்டு வாழும் காணிகளுக்கும் உள்ள பற்றுதலை முற்றாக மாற்றியுள்ளன. அதிகமான குடும்பங்கள் காணியற்றோராகின்றன. அல்லது சீவனத்துக்கு வகைசெய்ய முடியாத அளவுக்கு அவர்களின் காணிகள் குறுகிவருகின்றன. பிறரின் காணிகளில் கூலிகளாக வேலை செய்வதால் நகர்சார்ந்த கூலிகளுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைப்பதில். பிள்ளைகளையும், கூட்டி வந்து வேலைசெய்ய வேண்டுமென்ற நிபந்தனையில் பெரியவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது சாதாரண வழக்கமாக உள்ளது. நவீனமயமாக்கப்பட்ட வேளாண்மை, சிறுவர்கள் ஆபத்தான இயந்திரங்களினால் ஏற்படக்கூடிய விபத்துக்களுக்கும் துன்பந்தரும் கிருமிநாசினிகள் பூண்டு நாசினிகளுக்கும் முகம் கொடுக்க வைக்கிறது. இவையும் ஏனைய காரணங்களும் நகர் சார்ந்த பகுதிகளை பார்க்கிலும் கிராமப் பகுதிகளில் சிறுவர் மரணம், நோய், போசாக்கின்மை, ஊனம், எழுத்தறிவின்மை என்பன அதிகரிப்பதற்குப் பெருமளவு ஏதுவாயுள்ளன. நகர்ப்புறங்களில் சுரண்டலுக்கு ஆளாகியுள்ள பாலியல் தொழிலாளர்கள் பலர் பட்டணங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அல்லது கிராமத்தின் கொடிய நிலைமைகளைத் தாங்க முடியாமல் பட்டணங்களுக்கு ஓடிவந்த சிறுவர்களே என்று சர்வதேச தொழில் நிறுவன அறிக்கைகள் கூறுகின்றன.

வளர்முக உலகில் முறைசாராத் தொழில் முயற்சிகள் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் இம்முயற்சிகள் பதவி செய்யப்படுவதில்லை. எனவே முறைசார் தொழில் முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்திட்டங்கள் இவற்றைப் பாதிப்பதில்லை. சிறுவர் உழைப்பைச் சுரண்டித்துரிதமாக வளர்ந்துவரும் முறைசாராத் தொழில் துறையானது, கம்பளம், புனைதல் செங்கல், தயரித்தல், அகழ்தல், கல் உடைத்தல், கைப்பணிகள், சப்பாத்து மினுக்குதல் தொடக்கம் பாடசாலைகளிலில் சிறுவர் பயன்படுத்தும் பென்சில் தயாரித்தல் ஈறாக சகல முயற்சிகளையும் உள்ளடக்குகிறது.

வீட்டுப்பணியாளர்களாக வேலைசெய்யும் சிறுவர்களே மிக மோசமாகச் சுரண்டப்படுவோவா். இவர்களைப் பாதுகாப்பதும் மிகக் கடினம். பெரும்பான்மையானவர்கள் சிறுமிகள் எசமானர்களுடன் சீவிக்கும் இவர்கள் அவர்களிலேயே முற்று முழுதாகத் தங்கியிருக்கிறார்கள். சிலர் பெற்றோரால் அடிமைகளை போல விற்கப்படுகிறார்கள். ஆகவே இவர் தனித்துப் போகிறார்கள். அவர்களின் வயது பால், சிறை போன்ற தனிவாழ்க்கை வெளியுலகிலிருந்து மறைத்து வைத்திருத்தல் ஆகிய காரணங்களால் அவர்கள் சுரண்டப்படும் ஆபத்து அதிகம்.

சுரண்டல்களைத் தேடிக் கண்பிடித்து பொது மக்களுக்குப் பிரசாரம் செய்யவேண்டியது வெகுசன ஊடகங்களின் பொறுப்பாகுமெனவும் இது விடயத்தில் பொதுமக்களின் கண்காணிப்பு முக்கியமெனவும் சர்வதேச தொழில் நிறுவனம் வலியுறுத்துகிறது. பெரும்பாலான நாடுகள், தேசிய அல்லது சர்வதேச பத்திரிகை நிறுவனங்களின் சிறுவர்கள் சுரண்டப்படுவது தொடர்பான விடயங்களைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னரே அத்தகைய ஊழல்களைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டன வென்று மேற்படி நிறுவனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர்களின் உழைப்பை ஏற்றுக்கொள்வதென்பது தர்ம நியாயத்தக்கு ஏற்றதோ நல்ல சமூகக் கொள்கையோ அல்ல. அது தர்மத்துக்கு விரோதமானது. ஏனென்றால் தவிர்க்கக்கூடிய ஒரு தீமையை வரவேற்கிறதாகிறது. அது நல்ல சமூகக் கொள்கையன்று. ஏனென்றால் மனித இனத்தின் அடிப்படையான நோக்கத்தை அதாவது சிறுவரைப் பேணி வளர்க்கும் பணியை அது புறக்கணிக்கிறதாகின்றது. அது மட்டுமன்றிப் பிஞ்சிலேயே கனியச் செய்வதன் மூலம் எதிர்கால மனித வளத்தின் சிறப்பை நாசம் செய்வதாகிறது என்று சர்வதேச தொழில் நிறுவனம் குறிப்பிடுகிறது.

உலகெங்கும் பொருளாதார ரீதியாகச் சிறுவர்கள் சுரண்டப்படுவதை எதிர்ப்பதில் யுனிசெப் முன்னணியில் நின்று வந்துள்ளது. சர்வதேச தொழில் நிறுவனத்தின் சிறுவர் உழைப்பை நீக்குதற்கானசர்வதேச செயற்திட்டத்துடன் நெருங்கி பணியாற்றுகிறது. அதன் பணிகளில் ஆபத்தான வேலைச் சூழல்களை இனங்காண்பதும் சிறுவர்களை அத்தகைய நிலைமைகளிலிருந்து காப்பதும் அடங்கும்.

தொழில் செய்யும் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சட்டத்திட்டங்கள் ஏட்டில் இருக்கின்ற போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சீர்கேடு காணப்படுகிறது. மேலும் சட்டத்தின் பொட்டல்களை தொழில் கொள்வோர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள்.

தொழில் கொள்வதற்கான குறைந்த பட்ச வயதெல்லையை நிர்ணயித்தல், வேலைநிலைமைகளை நெறிப்படுத்தல், ஆரோக்கியத்துக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய எந்தத்தொழிலிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்தல் ஆகியன தேசங்களின் பொறுப்பாகும் என்பதை சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் ஏற்றுக்கொள்கிறது. சமவாயத்தை அங்கீகரிக்கும் நாடுகள் ஆரோக்கியமான பாலப்பருவத்துக்கு அடிப்படையாகவுள்ள ஓய்வு பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகள் என்பன தொடர்பாக சிறுவர்களுக்குள்ள உரிமைகளை மதித்தல் வேண்டுமெனவும் வரையறுத்துள்ளது

பெண் குழந்தை

அநேகமாக எல்லாச் சமுதாயங்களிலும் ஏழைகளும் பணக்காரர்களும், பெண் பிள்ளைகளைப் பார்க்கிலும் ஆண் பிள்ளைகளின் ஆரோக்கியமான மேம்பாட்டையே விரும்புவது சமூகக் கருத்தோட்டமாக விளங்குகிறது. செல்வநாடுகளில் பெண்களுக்கு எதிரான மனப்போக்கு கல்வி அமைப்புகளிற் பிரதிபலிப்பதைக் காணலாம். ஆண்களுக்கே பிரத்தியேகமானவை எனக்கருதப்படும் துறைகளில் படிக்கவோ வேலை வாய்ப்புப் பெறவோ, இடமளிக்காத வகையில் கல்வித் திட்டங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். பெண்கள் வெற்றி பெறும் போது, ஆண்கள் செய்யும் அதே பணியைச் செய்தாலும் குறைந்த ஊதியமே பெறக்கூடியதான உத்தியோகங்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதிகார பலமுள்ள பதவிகளும் அரிதாகவே கிடைக்கின்றன.

பலநாடுகளில் பெண் குழந்தை பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டு பெற்றோர் கருச்சிதைவு செய்து கொள்கிறார்கள். பம்பாயில் ஆண், பெண் வாரியான பரிசோதனையை அடுத்து 8000 கருச்சிதைவுகள் தொடர்பாக நடத்தப்பெற்ற ஆய்வின் போது சிதைக்கப்பட்ட கருக்களில் 7999 பெண்கருக்களாக இருக்கக் காணப்பட்டன. கருச்சிதைவு பெண் சிசுக்கொலை, பெண் குழந்தைகளைப் புறக்கணித்தல் ஆகியவற்றின் விளைவாக டெல்லியில் 1000 ஆண்களுக்கு 809 பெண்கள் என்ற விகிதாசாரமே காணப்படுகினறது. பூப்பெய்தும் பருவ முதல் பிற்கால வாழ்க்கை வரை பெண்ணானவள் பாகுபாட்டுக்கு இலக்காகிறாள். தமது ஆற்றாமைகளை அவர்கள் பெரும்பாலும் தமது பெண் குழந்தைகள் மீது சுமத்திவிடுகிறர்கள்.

பூப்பெய்தும் பருவத்தில் ஆண்களைப் பார்க்கிலும் பெண்கள் கூடுதலான அளவில் தமது சுயகௌரவத்தை இழப்பதான உணர்வைப் பெறுகிறார்கள் என்று அமெரிக்காவில் ஹாவார்ட் பல்கலைக்கழகமும் அமெரிக்கப் பல்கலைக் கழகப் பெண்கள் சங்கமும் அண்மையில் நடத்திய ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது.

''பால் சார்ந்த பாகுபாடு ஆகாரத்தினால் உண்டாகும் உடற்கோளாறுகள் சஞ்சல உணர்வு தற்கொலை எத்தனங்கள் வறுமை ஆகியவற்றின் தாக்கத்தினைப் பெண்கள் பூப்பெய்தும் பருவத்திலேயே முதன்

முதலாக அனுபவிக்கத் தொடங்குகிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள்ள தெரிவிக்கிறார்கள். பெண்களைத் தமது கருத்துக்கள், கனவுகள், பிரச்சினைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தச் செய்வதன் மூலம் சுயகௌரவத்தை இழப்பது போன்ற உணர்வை அகற்றுதற்கு உதவும் பொருட்டு, அரசசார்பற்ற நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. பெண்களை அவர்களின் நன்னடத்தைக்கும் தோற்றத்துக்கும் அல்லாமல் எண்ணங்களுக்கும் கருத்துக்களுக்குமாக மதிப்பதை உறுதிப்படுத்துவதே நாடளாவிய இயக்கங்களின் குறிக்கோளாகும்.

வளர்முக நாடுகளில் பெண்ணுக்கும், ஆணுக்கும் உள்ள சமத்துவமற்ற நிலைமையை பல்வேறு வகைகளில் காணலாம். போசாக்கின்மை, மரண விகிதாசாரம் என்பன பெண்கள் மத்தியில் ஆண்களிலும் அதிகம். ஆக்கத்திறனை உயர்த்தவும் வேலைப்பளுவைக் குறைக்கவும் வழி செய்யக்கூடிய கல்வி மற்றும் நுட்பங்களை பெறும் வாய்ப்பு பெண்களுக்குக் கிடைப்பதில் சமத்துவமின்மை. பெண்களின் முழுமையான அந்தஸ்தை வென்றெடுப்பதற்கான சீர்திருத்தங்களை புகுத்தும் கொள்கை மட்டங்களில் இடம் பெறும் வாய்ப்புகள் பெண்களுக்குக் கிடைப்பது குறைவு.

பெண்களுக்கு ஓரவஞ்சகம் செய்வதன் விளைவு பாரதூரமானதாகலாம். எந்தச் சமுதாயத்திலும் பெண்ணின் அந்தஸ்து எதிர்காலச் சந்ததிகள் மீது அழியாத முத்திரையைப் பதிக்கிறது. தாய்மார் என்ற வகையிலே தமது பிள்ளைகளின் பராமரிப்புக்கும் பாதுகாப்புக்கும் மட்டுமல்லாமல் அவர்களின் கருத்தோட்டங்கள் ஆற்றல்கள் ஆகியவற்றின் விருத்திக்கும் பெண்களே பொறுப்பாளிகள் சிறுவர்களின் ஆரோக்கியமும் உயர்வும் தாய்மாரின் கல்வி அறிவு மட்டத்துக்கு ஏற்றவாறு உயர்த்துகிறதென்று வளர்முக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது. ஆயினும் அநேக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் 40 சதவீதமான பெண்களே எழுதவோ வாசிக்கவோ கற்றவர்களாயிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டில் ஆரம்பக்கல்வி பெறும் வாய்ப்பை இழந்த 6-11 வயதுக்குப்பட்ட 100 லட்சம் சிறுவர்களில் 600 லட்சம் பேர் பெண்களாவர். இவர்கள் கல்வி கற்கும் உரிமையை இழந்தமைக்கான காரணங்களில் பின்வருவனவும் அடங்கும்.

பெண் பிள்ளைகளுக்கு எழுத்தறிவைப் புகட்டுவதில் பெற்றோர் அக்கறை கொள்ளாமை

பாடசாலைகளில் ஆசிரியைகள் இல்லாமை.

பாட நூல்களும் ஆசிரியர்களும் ஆணாதிக்கத்தை வலியுறுத்தியமை

பெண் பிள்ளைகள் வீட்டுக்கு வெளியே தனியாக அனுப்புவதற்குப் பயம்

மலசல கூடம் போன்ற அடிப்படை பாடசாலை வசதிகள் பெண்க பிள்ளைகளுக்கு இல்லாமை

மேற்படி இடர்பாடுகளுடன் வறுமை, பாடசாலை இடவசதி அல்லது போக்குவரத்து பற்றாக்குறை, பாடநூல்களின் விலை, வறிய நாடுகளில் வாழும் சிறுவர், சிறுமியர்கள் உழைத்துப் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்பாடு என்பனவும் நிலவுவதைப் பார்க்கும் போது கல்வி தொடர்பான ஏற்றத் தாழ்வு இலகுவாகவோ துரிதமாகவோ அகலமாட்டாது என்றே தோன்றுகிறது.

சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் ஆணிவேர் போன்ற கோட்பாடு சிறுவர்களின் சமத்துவமும் பாரபட்சமற்ற மேம்பாடுமேயாகும். உறுப்புரைகளின் பயன்கள் சிறுவர், சிறுமியர், இருசாராருக்கும் சமமாகச் சேரவேண்டுமெனச் சமவாயம் குறிப்பிடுகிறது. 2 ஆவது உறுப்புரையானது எல்லா உரிமைகளும் ஆண், பெண் இருபாலாருக்கும் சமம் எனக் குறிப்பிடுகிறது.

பல நாடுகளில் சமவாயத்தைக் கவனிக்கத் தொடங்கியுள்ளமைக்கான அறிகுறிகள் புலப்படுகின்றன. ஆசியாவில் பல கலாசாரப் பாரம்பரியங்கள் பெண்களுக்குக் கீழான அந்தஸ்தையே கொடுத்து

www.padippakam.com

வந்துள்ளன. ஆனால் அண்மைக் காலத்தில் பெண் பிள்ளைகளின் பரிதாப நிலைமை குறித்து தேசிய, பிராந்திய வாரியான கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. பிராந்தியக் கூட்டுறவுக்கான தென்னாசியச் சங்கம் (சார்க்) 1990 ஆண்டை பெண்களின் ஆண்டாக அனுட்டித்ததுடன் ஆண், பெண் ஏற்றத் தாழ்வுகள் தொடர்பான விடயங்களிலுள்ள அக்கறையை விரிவாக்கும் பொருட்டு பெண்கள் தசாப்தம் அனுஷ்டிக்கவும் தீர்மானித்தது. மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளும் 1990களில் பெண் பிள்ளைகளின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க முன்வந்துள்ளன. இவையும் ஏனைய முயற்சிகளுள் பெண் வெறுமனே ஒரு மகள், சகோதரி, எதிர்கால மனைவி, தாய் அல்லது எவரோ ஒருவரின் சொத்து என்னும் நிலையிலிருந்து தனிநபர் என்னும் அந்தஸ்த்தைப் பெற உதவி வருகின்றன.

அநேக வளர்முக நாடுகளில் ஆண், பெண் பாலருக்கிடையிலான தாரதம்மியம் சார்ந்த விடயங்கள் பற்றிய ஆய்வுகளில் கீழ்க்காண்பன கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

- ☐ வளர்ப்பு, போசாக்கு, சுகாதார பராமரிப்பு, கல்வி என்பன ஆண், பெண் இருபாலாருக்கும் சமமாகக் கிடைக்கச் செய்தல். ஆண் குழந்தைகளைப் பார்க்கிலும் குறைந்த காலத்துக்கே பெண் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டப்படுகிறது. ஆகாரத்தில் போசாக்கு அளவும் பெண் பிள்ளைக்குக் குறைவாக கிடைக்கிறது. ஆண் பிள்ளைகளைப் போலன்றி பெண் பிள்ளைகள் நோய் முற்றிய பின்னரே சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள் என்றெல்லாம் பல்வேறு ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

- ☐ பெண்கள், திருமணம் செய்யக் கூடிய ஆகக் குறைந்த வயதெல்லையை நிர்ணயித்தல். இளம் வயதில் மணம் செய்யும் பெண்களுக்கு வீட்டுக்கு வெளியே ஏதாவது பயனுள்ள பணிகளில் ஈடுபடும் வாய்ப்புக் கிடைப்பது அரிது. இதன் விளைவாக அவர்கள் இளமையிலிருந்து நெடுங்காலத்துக்குக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருப்பர். இதனால் தாய் நோயாளியாவதுடன் பிள்ளைகள் சனப்பெருக்கம் அதிகரிப்பதற்கு ஏதுவாகின்றன. வங்களாதேசத்தில் 15 - 19 வயதுக்குட்பட்ட பெண்களில் 71.8 சதவீதமானவர்கள் மணமானவர்கள், ஒப்பீட்டளவில் 7.4 சதவீதமான ஆண்களே இவ்வயதில் மணம் புரிகிறார்கள்.

- ☐ சிறுமியர்கள் மற்றும் பெண்களின் நிலைமை பற்றியும் தேசங்களின் பொருளாதார, சமூக மேம்பாட்டில் அவர்கள் ஆற்றியுள்ள பணி பற்றியும் புள்ளி விபரத் தரவுகளைச் சேகரித்தல்

- ☐ பெண்களின் வேலைப் பழுவைக் குறைத்தல். அவர்கள் சமவயதுள்ள ஆண்களை விடக் கூடிய வேலை செய்வது வழக்கமாகிவிட்டது. ஜாவா தேசத்தில் பெண்கள் வீட்டு வேலைகளிலும், சந்தைகளிலும் நாள்தோறும் 33 சதவீதம் கூடுதலான நேரத்தைச் செலவிடுகிறார்கள். சில பருவத்தினர் அதே வயதையொத்த ஆண்களிலும் 85 சதவீதம் கூடுதலாக வேலை செய்கிறார்கள்.

- ☐ பாலியல் வாரியாகவும் வேறு வகையிலும் பெண்களைச் சுரண்டி வாழ்வதை முறியடித்தல். இவர்கள் பூப்படைந்த பருவத்தில் எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய்க்கும் அதைச் சார்ந்த துன்பங்களுக்கும் இலக்காகும் பரிதாப நிலையும் இன்று ஏற்பட்டுள்ளது.

- ☐ சிறுமியர், பெண்கள் ஆகியோரின் நிலைமை பற்றி அதிக அக்கறை கொள்ளுதல் அவசியம். அரசாங்கங்கள் இதில் கரிசனை காட்டுவதானால் பணம் செலவிடத் தயாராக இருக்க வேண்டும். பெண்களுக்குச் சார்பாக சட்டங்கள் இயங்க வேண்டும். வீட்டிலும் வேலைத்தளங்களிலும் சமத்துவம் நிலைபெறுவதைக் காண்காணிக்க வேண்டிய தேவையும் இருந்து வருகிறது. பெண்களின் சேவை எந்தத் துறையிலும் தாழ்வானது. அவர்களின் அந்தஸ்து குறைந்தே இருக்க வேண்டு மென்னும் எண்ணத்தை மாற்றும் பொருட்டு பொதுமக்களுக்கு அறிவூட்ட வேண்டிய தேவையும் இருந்து வருகிறது. கண்கண்டதே காட்சி என்பார்கள். பொருளாதார சமூக முன்னேற்றத்துக்கு உந்து சக்தியாகப் பெண்கள் விளங்குகிறார்கள் என்னும் உண்மையை

படிப்பகம்

www.padippakam.com

உணர்த்துவதற்கு அவர்களின் பணியைப் பேணிப் பாராட்டுதல் அவசியம்.

நடைமுறையில் சமவாயம்

உலக சமுதாயம் தனது சிறுவர்களுக்கு எதையெல்லாம் ஆசிக்கிறதென்பதை மிகத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும் ஒரேயொரு சர்வதேச மனித உரிமைச் சட்டமாக சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் விளங்குகிறது. அதன் 54 உறுப்புரைகளும் தனித்துவமான உரிமைகளின் கோவையாக, சமூக, பொருளாதார குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் யாவற்றையும் உள்ளடக்கிய ஒரே சாசனமாக விளங்குகின்றது.

சிறுவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் சமூக வாழ்க்கையாலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு வளர்ச்சி பெறவும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவிக்கவும் உரிமையுடைய தனிப்பிறவிகள் என்பதைச் சமவாயம் ஏற்றுக் கொள்கிறது. இதற்கும் மேலாக, மனித சமுதாயத்தின் உயர்வு, ஆரோக்கியம், மேம்பாடு ஆகியவற்றை நெறிப்படுத்தும் முன்மாதிரியாகவும் இச் சமவாயம் திகழ்கிறது. அடுத்த தலைமுறையினரின் வாழ்வு எந்தளவுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறதென்பதைப் பொறுத்தே ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும் என்னும் உண்மையை அது பறைசாற்றுகிறது.

1989 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்பது மாதத்துள் சமவாயம் நடைமுறைக்கு வந்தது. மற்றெந்த மனித உரிமைச் சாசனமும் இவ்வளவு துரிதமாக சர்வதேச சமுதாயத்தின் வரவேற்பைப் பெற்றதில்லை. 1993 மே 18 வரையில் 136 நாடுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும் 23 நாடுகள் உறுதிப்படுத்தாது ஒப்பமிட்டு அதன் கோட்பாடுகளைச் சட்டப்படி ஏற்றுக் கொள்ளத் தமக்குள்ள எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளன.

சமவாயம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலாக்கப்படும் வேகத்தை கருத்திற் கொண்டு 1995 இல் எல்லா நாடுகளும் அதனை உறுதிப்படுத்தச் செய்ய வேண்டுமென யுனிசெவ் இலக்கு வைத்துள்ளது.

அமைந்து நடத்தல் பற்றிய அறிக்கை

சமவாயத்தை உறுதிப்படுத்தும் ஒவ்வொரு நாடும் சமவாயத்தின் இலக்குகளை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இரண்டு வருடத்துள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அறிக்கைகளை சிறுவர் உரிமைகள் செயற்குழு ஆராயும். இக்குழுவில் 10 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிபுணர்கள் அங்கம் வகிக்கிறார்கள். இக்குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பார்படோஸ், பிரேஸில், புர்கினா பாஸோ, எகிப்து, பேரு, பிலிப்பைன், போர்த்துக்கல், ருஷ்யா, சுவீடன், ஸிம்பாவே ஆகிய நாட்டவர்களாவர். இக்குழு சிறுவர் உரிமைகள் பாரதூரமான முறையில் மீறப்படுவது தொடர்பான அறிக்கைகளை அவசரமாக ஆராய்வதற்கான நடைமுறை ஒன்றினை வகுத்து வருகிறது.

செயற்குழு நேரடியாகும், தகவல்களைத் திரட்டுகிறது. ஏற்கெனவே லத்தீன் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளது. ஆசியாவுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டு வருகிறது.

குடியுரிமைகள் சுதந்திரங்கள் குடும்ப சூழல் மாற்றும் பராமரிப்பு அடிப்படைச் சுகாதாரம் கல்வி ஒய்வு கலாச்சார நடவடிக்கைகள் சிறுவருக்கான விசேட பாதுகாப்பு ஆகியவை தொடர்பான பொதுக் கோட்பாடுகள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன என தேசிய அறிக்கைகள் விளக்குதல் வேண்டும்.

சமவாயத்தின் உறுப்புரைகளைப் பின்பற்றுவதில் தாம் அடைந்த முன்னேற்றம் பற்றி மட்டுமல்லாமல், எதிர்நோக்கும் இடர்பாடுகளையும் அறிக்கையில் குறிப்பிடுமாறு தேசங்கள் தூண்டப்படுகின்றன. இளைஞர் அடங்கலாக எல்லாப் பிரசைகளும் சமவாயத்தின் உறுப்புரைகளை அறியச் செய்வதும் தேசிய அறிக்கைகளைத் தயாரிக்கும் வேளையில் பிரச்சினைக்குரிய விடயங்களை இனங்கண்டு அவை தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெறச் செய்வதும் சம்பந்தப்பட்ட நாடுகள் உறுதிப்படுத்த வேண்டிய விடயங்களாகும். செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வோர்

படிப்பகம்

www.padippakam.com

அறிக்கையும் சம்பந்தப்பட்ட நாட்டின் பிரதிநிதிகள் முன்னிலையில் பகிரங்கமாக ஆராயப்படும்..

பகிரங்க விசாரணைக்கு முன்னர், செயற்குழு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்களுடனும் அக்கறையுடைய ஏனையோருடனும் பகிர்ந்து கொள்ளும் செயற்குழுவின் உறுப்பினர்கள், யுனிசெவ், சர்வதேச தொழில் நிறுவனம் (ஐ.எல்.ஓ) உலக சுகாதார தாபனம் (டபிள்யூ.எச்.ஓ) பங்கு கொள்ளும் ஏனைய முகவர் நிலையங்கள் , அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய பூர்வாங்கக் கூட்டமொன்றும் ஒரு வார காலத்துக்கு நடைபெறும் ஒவ்வொரு அறிக்கையும் எந்தளவுக்கு உண்மையானதென ஆராயப்படும் இனங்காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான நடைமுறை சாத்தியமான வழிவகைகளும் கவனத்திற் கொள்ளப்படும்.

பூர்வாங்கக் கூட்டத்தின் முடிவில், மேலும் ஆராயப்பட வேண்டிய பிரச்சினைகள் அடங்கிய அட்டவணையொன்று சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் பகிரங்க கூட்டத்தில் கேள்விகளுக்கு விடையளிக்கும் பொருட்டு பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு அழைப்பு விடுக்கப்படும்.

குறிப்பிட்ட விடயங்கள் பற்றி ஆக்கபூர்வமான விவாதம்

1993 மே மாதம் வரை 16 நாடுகள் தமது அறிக்கைகளை அனுப்பியிருந்தன. முதலிற் கிடைத்த ஆறும் பொலிவியா, எகிப்து, ருஸ்யா, சூடான், சுவீடன், வியட்நாம் ஆகிய நாடுகளுக்குரியன. இவை 1993 ஜனவரியில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

அறிக்கைகளை ஆராய்வதில் பல்வேறு கோட்பாடுகள் செயற்குழுவுக்கு கைகொடுக்கின்றன. ‘‘அரசியல் அடிப்படையிலான சங்கற்பம் உண்டா, வரவு செலவுத்திட்டங்களில் சிறுவர்களின் தேவைகள் இடம்பெற்றிருக்கின்றனவா, அரசாங்கத்தினதும் அதன் தலைவர்களினதும் கூற்றுகளில் சமவாயம் முன்னுரிமை பெறுகிறதா, நிர்வாகக் கட்டுக்கோப்புகள் சிறுவர்களுக்கு நலன் தரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளனவா, என்பன போன்றவற்றை ஆராய முயல்கிறோம் என்று செயற்குழு உறுப்பினர் தோமஸ் ஹம்பர்பேர்க் (சுவீடன்) குறிப்பிடுகின்றார். முதல் ஆறு அறிக்கைகளையும் சமர்ப்பித்த நாடுகளுடன் நடத்திய கூட்டங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் நேர்மையானவையாகவும் சுய கண்டிப்பு உடையனவாகவும் அமைந்தன என்றும் அவர் அவதானித்துள்ளார்.

‘‘உண்மைகளை மறைப்பதனால் அரசாங்கங்கள் பயனடையமாட்டா. ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்கள், அரச சார்பற்ற சமுதாயம் ஆகியவற்றுடன் எமக்கிருக்கும் தொடர்புகள் மூலமாக உண்மை நிலைமை நாம் அறிந்து கொள்வோம். ஆரம்பத்திலிருந்தே எல்லா விடயங்களையும் ஒளிவு மறைவில்லாமல் தெரிவித்து பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முயல்வதே நல்லது”. என்று அவர் கூறினார். அரசாங்கங்கள் மீது குற்றம் சுமத்துவது செயற்குழுவின் நோக்கமன்று. ஜனவரி மாதக் கூட்டத்தில் வெளியான பிரச்சினைகள் சில அரசாங்கப் பிரதிநிதிகளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கலந்துரையாடலின் தொனி ஆக்கபூர்வமானதாகவே இருந்தது.

பகிரங்கக் கூட்டத்தின் பின்னர், ஒவ்வொரு நாட்டின் அறிக்கை தொடர்பாகவும் செயற்குழு அவதானித்த அம்சங்கள் பற்றிய சுருக்கமான குறிப்பு வழங்கப்பட்டது. இதில் அந்தந்த நாடுகள் எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள், அக்கறைக்குரிய விடயங்கள், இடர்பாடுகள், விதந்துரைகள் என்பன குறிப்பிடப்பட்டன. தேசிய பாராளுமன்றங்களும் ஊடகங்களும் இவ்விடயங்கள் பற்றிய வாதப்பிரதி வாதங்களை எழுப்பத் தூண்டு முகமாகவே இக்குறிப்பு வழங்கப்பட்டது.

உதாரணமாக, வியட்நாமின் அறிக்கை பற்றிய குறிப்புரையில் சிறுவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியன தொடர்பான அண்மையில் இயற்றப்பட்ட சட்டங்களையும் நாட்டின் புதிய யாப்பில் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாகச் சேர்க்கப்பட்டிருக்கும் வரையறைகளையும் செயற்குழு பாராட்டியது. ஆயினும் சிறுவர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் (இதில் சிறுபான்மையினரால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களும் அடங்கும்) தெருவோரங்களில் வாழ்ந்து பிழைக்கும் சிறுவர்கள் ஆகியோர் பற்றிய

படிப்பகம்

www.padippakam.com

தனது கவலையைத் தெரிவித்து இவர்களின் தேவைகளுக்கு முக்கிய கவனம் செலுத்துமாறு வலியுறுத்தியது. குற்றச் செயல்கள் தொடர்பாகப் பழி சுமத்தப்பட்ட சிறுவர்களுக்கு சமவாயத்தின் 40 ஆவது உறுப்புரை வழங்கும் பாதுகாப்புகள் அனைத்தும் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

சுவீடன் நாட்டின் சட்டம், சமவாயத்தின் 2 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குவதில்லை. தடுப்புக் காவலில் வைக்கப்படும் சிறுவர்கள் வயதுவந்தவர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுவதுமில்லை. சுவீடனின் அறிக்கை பற்றிய குறிப்புரையில் செயற்குழு இந்த அம்சம் ற்றிய தனது கவலையைத் தெரிவித்துள்ளது. அறிக்கையின் ஆக்கபூர்வமான அம்சங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், சமவாயத்தின் உறுப்புரைகளைப் பிரதிபலிக்கும் பாங்கில் சுவீடன் இயற்றிய சட்டங்களும் சமவாயத்தைப் பிரசித்தப்படுத்து முகமாக மேற்கொண்ட நடவடிக்கைகளும் சுட்டிக் காட்டப்பட்டன. உலகளாவிய விதத்தில் சிறுவர்களின் நிலையை மேம்படுத்தும் பொருட்டு வழங்கிவரும் கணிசமான உதவிக்காகவும் சுவீடனைப் பாராட்டியது.

சமவாயத்துக்கு உயிர்கொடுக்கும் விதம்

சிறுவர்கள் பிரச்சினைகள் தொடர்பாகப் புதியதொரு சட்டப் பரிமாணத்தைச் சமவாயம் அளிக்கிறது. இது விடயத்தில் பல நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. இவற்றில் சட்டவாரியான பாதுகாப்புகளும் அமைப்புகளும் முக்கியமானவை. பல தேசங்கள் தமது சட்டங்களைச் சமவாயத்துக்கு இசைவாக மீளாய்வு செய்துள்ளன. உதாரணமாக, நமீபியாவில் சிறுவர் உரிமைகள் பற்றிய எண்ணக்கரு புதிய யாப்பில் பட்டவர்த்தனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பல நாடுகள் சிறுவர்களின் உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஒரு நிறுவனத்தை அல்லது அமைப்பை உருவாக்க உடன்பட்டிருக்கின்றன. இது கோஸ்டா ரிகாவிலும் நோர்வேயிலும் உள்ளதைப் போல சிறுவர்க்கான தனிமனித பஞ்சாயமாக அல்லது எகிப்தில் உள்ளதைப் போல தேசிய செயற்குழு அல்லது ஆணைக்குழுவாக அமையலாம்.

சமவாயத்தை உறுதிப்படுத்திய எட்டாவது நாடு பொலிவியா, அரசாங்கத்தின் கொள்கைகளும் சட்டவாக்கங்களும் சமவாயத்தின் உறுப்புரைகளுக்கு இசையத்தக்க நடவடிக்கைகளை அந்நாடு துரிதமாக மேற்கொண்டது. சிறுவர்கள், பெண்கள் ஆகியோரிடையே நிலவும் வறுமையை ஒழிப்பதற்கென 10 ஆண்டுச் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டக்கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

சமவாயம் சுவடி உருவத்தில் தயாரிக்கப்படும் நிலையிலேயே பிரேஸில் நாடு அதற்குச் சாதகமாகச் செயற்பட முன்வந்தது. தொலைக்காட்சி வானொலி, அச்சு ஊடகங்கள் ஆகியன 1.8 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரத்தையம் இடத்தையும் பிரசாரச் செய்திகளைப் பரப்பும் பொருட்டு கொடுத்துதவ முன்வந்து, தவ்வல் பருவத்தில் தடுமாறி நின்ற சிறுவர் உரிமை இயக்கத்துக்கு ஊனும் உரமும் அளித்தன. 1990 இல் சிறுவர்கள் , இளைஞர்கள் ஆகியோரின் உரிமைகள் பற்றிய உறுப்புரையுடன் முழுமை பெற்ற புதியதொரு தேசிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது.

1992 இல் தென் ஆபிரிக்காவில் சிறுவர் உச்சி மாநாடு ஒன்று நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சிறுவர்கள் கேப்டவுன் நகருக்கு வந்து அந்நாட்டின் புதிய அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்வதற்கான சிறுவர் உரிமைச் சாசனம் ஒன்றை வரைவதற்கு உதவினர்.

ஐக்கிய ராஜ்யத்தில், சமவாயத்தின் செயற்பாட்டைத் தூண்டும் பொருட்டு சிறுவர் உரிமை மேம்பாட்டு நிலையம் என்னும் பெயரில் சுதந்திரமான, இலாப நோக்கற்ற அமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையம் சிறுவர்கள் சம்பந்தமாகச் செம்மைசான்ற கொள்கைகளை வகுப்பதற்கு அவசியமான முன்னுரிமைகளை இனங்காணும் பொருட்டு நிறுவானங்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள் ஆகியோருடன் இணைந்து செயலாற்றுகின்றது.

படிப்பகம்

சமவாயம் பற்றிய உணர்வைப் பரப்புதலும் நிதி சேர்த்தலும்

பிரதான பிரச்சினைகள் பற்றி உலகளாவிய உணர்வைப் பரப்புவதில் சிறுவர் உரிமைச் செயற்குழு அக்கறை கொண்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளில், பாலியல் உடலுழைப்பு, அகதிச் சிறுவர் மற்றும் ஆயுதமேந்திய பிணக்குகளில் சிக்கிய சிறுவர்களின் தேவைகள் என்பனவும் அடங்கும். 45 (ஆ) உறுப்புரை, சமவாயத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு வறிய நாடுகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்பம் மற்றும் உதவிகள் பற்றிக் குறிப்பிடுகிறது. இது விடயமாகவும் சிறுவர் உரிமைச் செயற்குழு நடைமுறை சாத்தியமான செயற்பாடுகளை எதிர்பார்த்து வந்துள்ளது.

பொருளாதார வாய்ப்புகள் குன்றிய நாடுகள், தனித்தனியான உபகார நாடுகளிடமும் சர்வதேச சமுதாயத்திடமும் ஆதரவைப் பெறும் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தால் இந்தச் சமவாயம் தென்திரை நாடுகளின் ஒப்புதலையோ தாபரத்தையோ பெற்றிருக்க மாட்டாது என்பதை மறத்தலாகாது என்றார் ஹம்மர்பேர்க் அவர்கள். தமது சிறுவர்கள் பால் அதிக அக்கறை கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் வறிய நாடுகளுக்கு இருந்த போதிலும், பொருள் வளக்குறைவின் காரணமாக அந்த ஆர்வத்தைச் செயற்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

www.padippakam.com

பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை

முன்னுரை

1979இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல் சாரிணக்க உடன்படிக்கை பெண்களுக்கான உரிமைகளின் சர்வதேச சட்டமூலமாகப் பெரும்பாலும் வர்ணிக்கப்படுகிறது. முகப்புரையொன்றையும் 30 உறுப்புரைகளையும் கொண்டதாகி, பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலாக அமைவது யாதென வரையறுப்பதுடன் அத்தகைய பேதங்காட்டலை ஒழிப்பதற்கு வேண்டிய தேசிய நடவடிக்கைக்கான நிகழ்ச்சி நிரலையும் அது தந்துள்ளது.

இவ்விணக்க உடன்படிக்கைக்கு அமைய பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலாவது, "அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது வேறேதேனுமொரு பரப்பில் பெண்களால், அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எவ்வாறிருப்பினும் ஆண்களும் பெண்களும் சமன் எனும் அடிப்படையில் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அங்கீகரிக்கப்படுதல், அனுபவிக்கப்படுதல் அல்லது பிரயோகிக்கப்படுதலைப் பாதிக்கும் அல்லது வறிதாக்கும் விளைவினை அல்லது நோக்கத்தைக் கொண்டு, பாலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேறுபாடு காட்டுதல், விலக்குதல் அல்லது மட்டுப்படுத்துதல் ஆகும்."

இவ்விணக்க உடன்படிக்கையை அங்கீகரிப்பதன் மூலம் அரசுகள், பின்வருவன உட்பட பெண்களுக்கு எதிரான பேதங் காட்டலை, அதன் சகல வடிவங்களிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளின் தொடரை மேற்கொள்வதற்குத் தம்மைப் பாரப்படுத்திக் கொள்ளும்.

தமது சட்டமுறைமையில் ஆண், பெண் சமத்துவக் கோட்பாட்டை இணைத்துக் கொள்ளல், பேதங்காட்டும் அனைத்துச் சட்டங்களையும் நீக்கி பெண்களுக்கெதிரான பேதங்காட்டலைத் தடைசெய்யும் பொருத்தமான சட்டங்களை ஏற்றுக்கொள்ளல். பேதங்காட்டலுக்கு எதிராக பெண்களின் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு நியாயசபைகளையும் பிற பொது நிறுவகங்களையும் தாபித்தல். தனியாட்கள், அமைப்புகள் அல்லது தாளாண்மைகள் என்பவற்றால் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பேதங்காட்டற் செயல்கள் அனைத்தும் நீக்கப்படுதலை உறுதிசெய்தல்.

கல்வி, தொழில் என்பவற்றுடன் வாக்களிப்பதற்கும் தேர்தலில் போட்டியிடும் உரிமை உட்பட அரசியல் வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பெண்களுக்குச் சமமான அணுகுதல் வழிகளையும் சமமான வாய்ப்புகளையும் உறுதி செய்வதனூடாக ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவம் அனுபவபூர்வமாக உணரப்படுவதற்கான அடிப்படையை இணக்க உடன்படிக்கை வழங்குகின்றது. பெண்கள் தமது அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் அனுபவிக்கக்கூடிய வகையில் சட்டவாக்கம், தற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் என்பவை உட்பட பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு அரசுகளாம் கட்சிகள் இணங்குகின்றன.

பெண்களின் இனப்பெருக்க உரிமையை உறுதிப்படுத்தி ஆண், பெண் கடமைக் கூறுகளுக்கும் குடும்ப உறவுகளுக்கும் உருத்தந்து பண்பாட்டினையும் மரபினையும் செல்வாக்கு மிகுந்த விசைகளாக இலக்கிற்கொள்ளும் ஒரேயொரு மனித உரிமைகள் உடன்படிக்கை இவ்விணக்க உடன்படிக்கையேயாகும். அது பெண்கள் தமது தேசிய இனத்தையும் தமது பிள்ளைகளின் தேசிய இனத்தையும் தேடிப் பெறுவதற்கு, மாற்றுவதற்கு அல்லது நிறுத்தி வைத்திருப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. அரசுகளாம் கட்சிகள் பெண்களிலான வணிகத்தின் அனைத்து வடிவங்களுக்கும் பெண்கள் தன்னயப்படுத்தப்படுதலுக்கும் எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இணங்குகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

இணக்க உடன்படிக்கையை வலுவாக்கம் செய்து கொண்ட அல்லது அதனை ஒப்புக் கொண்டுள்ள நாடுகள் அதன் ஏற்பாடுகளைச் செயல்முறைப்படுத்துவதற்குச் சட்டரீதியாகப் பிணிக்கப்பட்டவையாகும். தமது உடன்படிக்கைக் கடப்பாடுகளுடன் இணங்கித் தாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவையேனும் தேசிய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அவை பாரப்படுத்தப்பட்டுள்ளன. 1981 செப்ரெம்பர் 3ஆந் திகதியன்று வலுவிற் புகுந்த இவ்விணக்க உடன்படிக்கை 1966 மே31 ஆந் திகதியன்று ஐக்கிய நாடுகளின் 152 உறுப்பு அரசுகளால் வலுவாக்கம் செய்து கொள்ளப்பட்டது.

பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல் சாரிணக்க உடன்படிக்கை

தற்போதைய இணக்க உடன்படிக்கைக்கான அரசுகளாம் கட்சிகள்,

ஐக்கிய நாடுகளின் பட்டயம் அடிப்படை மனித உரிமைகளிலும் மனித நபரின் மேன்மையிலும் மதிப்பிலும், ஆண்கள் பெண்களின் சம உரிமைகளிலும் தனது விசுவாசத்தை மீளவலியுறுத்துகிறது என்பதைக் கவனித்தும், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், பேதங்காட்டலானது அனுமதிக்கப்பட முடியாதது எனும் கோட்பாட்டை வலியுறுத்துகிறது என்பதையும் மனிதர் அனைவரும் சுதந்திரமாகவும், மேன்மையிலும் உரிமைகளிலும் சமமாகவும் பிறந்தவர்கள் என்பதுடன் பாலின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுதல் உட்பட, எவ்வகையான வேறுபடுத்தப்படுதலுமின்றி பிரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்ட சகல உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரித்தானவர்கள் என வெளிப்படுத்துகிறது என்பதனையும் கவனித்தும், மனித உரிமைகள் சார் சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தங்களுக்கான அரசுகளாம் கட்சிகள், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல், அரசியல் உரிமைகள் அனைத்தையும் அனுபவிப்பதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்குமுள்ள சம உரிமையை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளன என்பதனைக் கவனித்தும், ஆண்களினதும் பெண்களினதும் உரிமைகளின் சமத்துவத்தை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளினதும் சிறப்பு முகவராண்மைகளதும் ஆதரவின் கீழ் முடிவு செய்யப்பட்ட சர்வதேச இணக்க உடன்படிக்கைகளைக் கருத்திற் கொண்டும், ஆண்களினதும் பெண்களினதும் உரிமைகளின் சமத்துவத்தை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளாலும் சிறப்பு முகவராண்மைகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள், பிரகடனங்கள், விதப்புரைகள் என்பவற்றையும் கவனித்தும், எனினும், வேறுபட்ட இச்சாதனங்களின் மத்தியிலும் பெண்களுக்கெதிரான பேதங்காட்டல் பரந்த அளவிற் தொடர்ந்தும் இருந்து வருவது குறித்து அக்கறை கொண்டும், பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலானது, உரிமைகளின் சமத்துவம், மனித மேன்மைக்கு மதிப்பளித்தல் எனம் தத்துவங்களை மீறுதலையும் பெண்கள் தமது நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையில் ஆண்களுடன் சம அடிப்படையில் பங்குபற்றுதலுக்குத் தடையாக இருப்பதையும் சமூகத்தினதும் குடும்பத்தினதும் வளமான வாழ்வின் வளர்ச்சியைத் தடைசெய்து பெண்கள் தமது நாடுகளுக்கும் மனித இனத்துக்கும் ஆற்றும் சேவையில் அவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களின் முழுமையான அபிவிருத்தியை இடர்மிகுந்ததாக்குவதையும் நினைவிற் கொண்டும், ஏழ்மை நிலைமைகளில் உணவு, ஆரோக்கியம், கல்வி, பயிற்சி, தொழிலுக்கான வாய்ப்புகளும் பிறதேவைகளும் என்பவற்றை எய்துவதற்கான வழி பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது என்பதிற் கரிசனை கொண்டும்,

புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கானது, ஒப்புரவு, நீதி என்பவற்றின் அடிப்படையில் தாபிக்கப்படுதல் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நல்கும் என நம்பிக்கை கொண்டும்,

ஆண்களினதும் பெண்களினதும் உரிமைகள் முழுமையாக அனுபவிக்கப்படுவதற்கு இனவொதுக்கம், இனவாதத்தின் சகல வடிவங்களும், இனபேதம், குடியேற்றவாட்சி, புதிய குடியேற்றவாதம், ஆக்கிரமிப்பு, நாட்டில் புறநாட்டவர் உறைதல், அரசுகளின் உண்ணாட்டு அலுவல்களில் அவர்களின் ஆதிக்கம் தலையிடும் என்பவை ஒழிக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என அழுத்தமாகத் தெரிவித்தும்,

படிப்பகம்

சர்வதேச அமைதியும் பாதுகாப்பும் பலப்படுத்தப்படுதல், சர்வதேச மன இழுவிசை தளர்வெய்துதல், அனைத்து அரசுகளிடையேயும் அவர்களது சமூக பொருளாதார முறைமைகள் எவ்வாறிருப்பினும் பரஸ்பர ஒத்துழைப்பஜ, பொதுவானதும் முழுமையானதுமான படைக்கலக் குறைப்பு, குறிப்பாகக் கண்டிப்பானதும் பயனுறுதி வாயந்தததுமான சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் அணுவாயுத ஒழிப்பு, நாடுகளிடையேயான தொடர்புகளில் நீதி, சமத்துவம், பரஸ்பர நன்மை எனும் கோட்பாடுகள் உறுதிப்படுத்தப்படுதல், அன்னியராதிக்கம், குடியேற்றவாதிக்கம், புறநாட்டவர் குடியேற்றம் என்பனவற்றின் கீழுள்ள மக்களின் சுயநிர்ணயத்திற்கும் சுதந்திரத்திற்குமான உரிமை, அத்துடன் தேசிய இறைமைக்கும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கும் மதிப்பளித்தல் ஆகியவை சமூக முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தும் என்பதையும் அதன் விளைவாக அவை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் முழுமையான சமத்துவத்தின் அடைவிற்கு உதவும் என்பதையும் உறுதிப்படுத்தியும்,

ஒரு நாட்டின் முழுமையான வளர்ச்சி, உலகின் பொதுநலன், சமாதான இலக்கு என்பவை, அனைத்துக் களங்களிலும் ஆண்களுடன் சரிசம நிலையில் பெண்களின் உச்ச அளவிலான பங்கு பற்றலை வேண்டி நிற்கும் என நம்பிக்கை வேண்டும்.

குடும்பத்தின் நலனுக்கும் சமூகத்தின் அபிவிருத்திக்கும் பெண்களின், இதுவரை முழுமையான அடையாளங்கண்டு கொள்ளப்படாத பாரிய பங்களிப்பு, தாய்மைப்பேறின் சமூக முக்கியத்துவமும் குடும்பத்திலும் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும் இரு பெற்றோர்களினதும் கடமைப்பங்கம் என்பவற்றை மனத்திற் கொண்டும், குழந்தைகளைப் பிறப்பிப்பதில் பெண்களின் கடமைக்கூறு பேதங்காட்டலுக்கு ஓர் அடிப்படையாக அமையக் கூடாது, ஆனால் குழந்தைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பு முழுமொத்தமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூகத்திற்குமிடையிலான பங்குபற்றலை வேண்டி நிற்கிறது என்பதை உணர்ந்தும்,

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் முழுமையான சமத்துவத்தை எய்துவதற்கு சமூகத்திலும் குடும்பத்திலும் ஆண்களின் மரபு ரீதியான கடமைப்பங்கிலும் அவ்வாறே பெண்களின் கடமைப்பங்கிலும் மாற்றமொன்று தேவையானது என்பதை உணர்ந்தும்,

பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை ஒழித்தல் குறித்து பிரகடனத்தில் எடுத்துரைக்கப்பட்ட தத்துவங்களைச் செயற்படுத்தவும் அந்நோக்கத்திற்காக, அத்தகைய பேதங்காட்டலை அதன் சகல வடிவங்களிலும் தோற்றப்பாடுகளிலும் ஒழிப்பதற்குத் தேவைப்படும் நடிவடிக்கைகளை மேற்கொள்ளவும் துணிந்தும்,

பின்வருவன தொடர்பில் இணங்கியுள்ளன.

பகுதி 1

உறுப்புரை 1

தற்போதைய இணக்க உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக "பெண்களுக்கு எதிரான பேதங்காட்டல்" எனும் தொடர் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அல்லது வேறேதேனும் பரப்பில் பெண்களால், அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எவ்வாறிருப்பினும் ஆண்களும் பெண்களும் சமன் எனும் அடிப்படையில் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் அங்கீகரிக்கப்படுதல், அனுபவிக்கப்படுதல் அல்லது பிரயோகிக்கப்படுதலைப் பாதிக்கும் அல்லது வறிதாக்கும் விளைவினை அல்லது நோக்கத்தைக் கொண்டு பாலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேறுபாடு காட்டுதல், விலக்குதல் அல்லது மட்டுப்படுத்துதல் என்பதைக் கருதும்.

உறுப்புரை 2

அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை அதன் அனைத்து வடிவங்களிலும் கண்டித்து, பொருத்தமான சகல வழிகள் மூலமும் தாமதமின்றியும் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை

www.padippakam.com

ஒழிக்கும் கொள்கையொன்றை அனுசரித்துச் செல்வதற்கு இணங்கி, இந் நோக்கத்திற்காகப் பின்வரும் பொறுப்புகளை ஏற்றுள்ளன.

(அ) தமது தேசிய அரசியலமைப்புகளில் அல்லது பொருத்தமான பிற சட்டவாக்கங்களில் ஆண், பெண் சமத்துவ தத்துவம் இதுவரை சேர்த்துக் கொள்ளப்பட்டிராவிடின் அதனைச் சேர்த்துக் கொள்தலும் இத்தத்துவம் செயல்ரீதியில் உணர்ந்து கொள்ளப்படுவதைச் சட்டத்தினூடாகவும் பிறபொருத்தமான வழிகளினூடாகவும் உறுதிப்படுத்துதலும்

(ஆ) பெண்களுக்கு எதிரான சகல பேதங்காட்டல்களையும் தடுப்பதற்கு பொருத்தமானவிடத்து தடைவிதிப்புகள் உட்பட தகுந்த சட்ட நடவடிக்கைகளையும் பிற நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுதல்.

(இ) ஆண்களுடன் சம அடிப்படையில், பெண்களது உரிமைகளின் சட்டரீதியான பாதுகாப்பைத் தாபித்தலும் தகுதி வாய்ந்த தேசிய நியாயசபைகள், பிறபொது நிறுவனங்கள் என்பவற்றினூடாக பேதங்காட்டும் எச்செயலுக்கும் எதிராக பெண்களின் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தலும்

(ஈ) பெண்களுக்கு எதிரான ஏதேனும் பேதங்காட்டற் செயல் அல்லது பழக்கத்தில் ஈடுபடுவதிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்தலும் இக்கடப்பாட்டுக்கு இசைவாக பொது அதிகாரிகளும் நிறுவனங்களும் செயற்படுவதை உறுதிப்படுத்துதலும்

(உ) எவரேனும் தனியாளினால் நிறுவகத்தினால் அல்லது தாளாண்மையினால் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் பேதங்காட்டலை நீக்குவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்தல்

(ஊ) பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலைக் கொண்டமையும் தற்போதுள்ள சட்டங்கள், பிரமாணங்கள், வழமைகள், நடைமுறை ஒழுங்குகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்

(எ) பெண்களுக்கெதிரான பேதங்காட்டலைக் கொண்டமையும் அனைத்துத் தேசிய தண்டனை ஏற்பாடுகளையும் செயலறச் செய்தல்

உறுப்புரை 3

அரசுகளாம் கட்சிகள் அனைத்துப் பரப்புகளிலும், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரப் பரப்புகளில் ஆண்களுடன் சமத்துவ அடிப்படையில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் பிரயோகிப்பதற்கும் அனுபவிப்பதற்குமான உத்தரவாதத்தைப் பெண்களுக்கு வழங்கும் பொருட்டு, பெண்களின் முழு வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்துவதற்காக சட்டவாக்கம் உட்பட பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும்.

உறுப்புரை 4

1. ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உண்மைப்படியான சமத்துவத்தைத் துரிதப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு அரசுகளால் கட்சிகளால் தற்காலிக சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி பேதங்காட்டலாகக் கருதப்பட மாட்டாது. ஆனால் எவ்வழியிலும் அதன் விளைவாக சமமற்ற அல்லது வேறான நியமங்கள் பேணப்படுதலை உரிமை விதியாக்க முடியாது. வாய்ப்பிலும் நடத்துமுறையிலும் சமத்துவ நோக்கங்கள் அடையப் பெற்றதும் இந் நடவடிக்கைகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

2. தாய்மைப் பேற்றினைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசுகளாம் கட்சிகளால் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அடங்கியிருக்கும் அந்நடவடிக்கைகள் உட்பட, சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் பேதங்காட்டலாகக் கருதப்படமாட்டாது.

உறுப்புரை 5

அரசுகளாம் கட்சிகள் பின்வரும் நோக்கங்களுக்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும்.

(அ) ஆண்கள், பெண்களுள் ஒரு பாலாரின் இழிவு அல்லது உயர்வு நிலைக் கருத்தின் மீது அமைந்த அன்றேல் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாற்றமில்லாக் கடமைக் கூறுகள் பற்றி அமைந்த, தற்பெண்ணங்களையும் வழமையானதும் பிறவுமான அனைத்துச் செயல் முறைகளையும் நீக்கும் நோக்குடன் ஆண்களதும் பெண்களதும் சமூக, கலாசார நடத்தைக் கோலங்களை மாற்றியமைத்தல்

(ஆ) குடும்பக் கல்வியானது, சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே ஆதிமுதலான கருத்து என்பது விளங்கிக் கொள்ளப்பட்டு ஒரு சமூகத் தொழிற்பாடாக தாய்மைப் பேறு பற்றிய தகுந்த விளக்கத்தையும் தமது குழந்தைகளின் வளர்த்தெடுப்பிலும் விருத்தியிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பொறுப்பு உண்டு எனும் அங்கீகாரத்தையும் உள்ளடக்குவதை உறுதிசெய்தல்

உறுப்புரை 6

அரசுகளாம் கட்சிகள் பெண்களிலான வணிகத்தின் சகல வடிவங்களையும் அத்துடன் பெண்கள்சார் விபசாரம் தன்னயப்படுத்தப்படுதலையும் அடக்குவதற்காக சட்டவாக்கம் உட்பட பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பகுதி II

உறுப்புரை 7

அரசுகளாம் கட்சிகள் ஒரு நாட்டின் அரசியல், பொது வாழ்க்கையில், பெண்களுக்கு எதிராக பேதங்காட்டப்படுதலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதுடன் ஆண்களுடன் சமமான நியதிகளில் குறிப்பாக பின்வருவனவற்றுக்கான உரிமைகளைப் பெண்களுக்கு உறுதிசெய்யும்.

(அ) அனைத்துத் தேர்தல்களிலும் பகிரங்க மக்கள் தீர்ப்பெடுத்தல்களிலும் வாக்களிப்பதற்கும் பகிரங்கமாகத் தெரிவு செய்யப்படும் எல்லாக் குழுக்களுக்குமான தேர்தலில் நிற்கத் தகுதியுடையவராவதற்கும்

(ஆ) அரசாங்கக் கொள்கையின் ஒழுங்குமுறைப்படுத்தலிலும் அதன் அமுலாக்கத்திலும் பங்கு பற்றுவதற்கும் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் பகிரங்கப் பதவி வகிப்பதற்கும் பகிரங்கக் கடமைகள் சகலதையும் நிறைவேற்றுவதற்கும்

(இ) நாட்டின் பொது, அரசியல் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கச் சார்பற்ற நிறுவகங்களிலும் சங்கங்களிலும் பங்கு பற்றுவதற்கும்

உறுப்புரை 8

அரசுகளாம் கட்சிகள் ஆண்களுடன் சமமான நியதிகளிலும் பேதங்காட்டல் எதுவுமின்றியும் பெண்கள் சர்வதேச மட்டத்தில் தமது அரசாங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்து நிற்பதற்கும் சர்வதேச நிறுவகங்களின் வேலையில் பங்கு பற்றுவதற்குமான வாய்ப்பினை உறுதிசெய்யும் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

படிப்பகம்

உறுப்புரை 9

1. அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு அவர்கள் தமது தேசிய இனத்தைத் தேடிப்பெறுவதற்கு, மாற்றுவதற்கு, அன்றேல் நிறுத்தி வைத்திருப்பதற்கு ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்கும். குறிப்பாக அவை அன்னியரொருவருடனான திருமணமோ, திருமண வாழ்வுக் காலத்தில் கணவன் தனது தேசிய இனத்தை மாற்றிக் கொள்வதோ, தானாக மனைவியின் தேசிய இனத்தை மாற்றவோ, அவரை நாடற்றவராகச் செய்யவோ, கணவனின் தேசிய இனத்தை அவர் மீது திணிக்கவோ மாட்டாது என்பதை உறுதிசெய்யும்.

2. அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு அவர்களது பிள்ளைகளின் தேசிய இனம் தொடர்பில் ஆண்களுடன் சமமான உரிமைகளை வழங்கும்.

பகுதி III

உறுப்புரை 10

அரசுகளாம் கட்சிகள் கல்வித்துறையில் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண்களுடன் பெண்களுக்குச் சமமான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், குறிப்பாக ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்குமாக எடுத்துக் கொள்ளும்.

(அ) தொழிலுக்கும் தொழில் வழிகாட்டலுக்கும் கிராமப்புறப் பிரதேசங்களிலும் அவ்வாறே நகர்ப்புறப் பிரதேசங்களிலும் அனைத்து வகைப்பட்ட கல்வித்தாபனங்களிலும் கல்வி கற்கைகளுள் நுழைவதற்கும் சான்றிதழ்களுக்கான தகைமையை அடைவதற்கும் ஒரே நிபந்தனைகள்: இச்சமத்துவம் பாடசாலை புகுமுன் கல்வி, பொதுக்கல்வி, தொழிற்கல்வி, உயர் தொழில்நுட்பக் கல்வி என்வற்றிலும் அத்துடன் அனைத்து வகையான தொழிற் பயிற்சிகளிம் உறுதிப்படுத்தப்படும்.

(ஆ) ஒரே பாடவிதானம், ஒரே பரீட்சைகள், ஒரே தரமான தகைமைகளைக் கொண்ட கற்பித்தற் பணியாளர்கள், ஒரே பண்புத்தரம் வாய்ந்த பாடசாலைக் கட்டட வளவுகளும் உபகரணங்களும் என்பவற்றுக்கான வாய்ப்பு

(இ) கல்வியின் சகல மட்டங்களிலும் கல்வியின் அனைத்து வடிவங்களிலும் ஆண்களினதும் பெண்களினதும் கடமைக் கூறுகள் பற்றிய மாறாது நிலபெற்ற ஏதேனும் எண்ணக் கருவை, ஆண், பெண் கூட்டுக்கல்வியையும் கல்வியின் பிற வகைகளையும் ஊக்குவிப்பதன் மூலமும் குறிப்பாக பாடநூல்களையும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களையும் மீளவாய்தல் மூலமும் கற்பித்தல் முறைகளை இசைவாக்கம் செய்வதன் மூலமும் நீக்குதல்

(ஈ) புலமைப் பரிசில்கள், கற்கைக்கான பிற கொடைகள் என்பவற்றின் மூலம் பயன்பெறுவதற்கும் ஒரே வாய்ப்புகள்

(உ) ஓய்வு பெறல், தொழிலின்மை, சுகயீனம், நோய்வாய்ப்பட்ட நிலை, வயோதிபம் அத்துடன் வேலைசெய்ய இயலாமை எனும் குறிப்பான சந்தர்ப்பங்களில் சமூக பாதுகாப்புக்கான உரிமையும் மேலும் வேதனத்துடன் விடுமுறை பெறுவதற்கான உரிமையும்

(ஊ) இனப்பெருக்கத் தொழிற்பாட்டைப் பாதுகாத்தல் உட்பட உடனலப் பாதுகாப்பிற்கும் வேலை நிலைமைகளில் இடர்காப்பிற்குமான உரிமை

2. விவாகம் அல்லது தாய்மைப் பேற்றின் அடிப்படையில் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலைத் தடுப்பதற்கும் வேலைசெய்வதற்கான பயனுறுதிவாய்ந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்குமாக அரசுகளாம் கட்சிகள் பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

www.padippakam.com

(அ) கர்ப்பநிலை அல்லது பிரசவ விடுமுறை காரணமாக வேலை நீக்கஞ் செய்தலையும் திருமணஞ்சார் நிலையின் அடிப்படையில் வேலை நீக்கத்தில் பேதங் காட்டப்படுதலையும் பிரமாணங்களை விதித்தலுடன் தடைசெய்தல்

(ஆ) முன்னைய தொழில், சிரேட்ட நிலை அல்லது சமூகச் சலுகைகள் என்பவற்றின் இழப்பின்றி வேதனத்துடன் அல்லது ஒப்பிடத்தக்க சமூகநலன்களுடன் பிரசவ விடுமுறை அறிமுகப்படுத்துதல்

(இ) பெற்றோர் குடும்பக் கடப்பாடுகளை வேலைப் பொறுப்புகளுடன் இணைப்பதற்கும் பொதுவாழ்வில் பங்குபற்றுவதற்கும் உதவுவதற்கு அவசியமான சமூக சேவைகள் வழங்கப்படுதலை, குறிப்பாக குழந்தைக் கவனிப்பு வசதிகளின் வலையமைவொன்றைத் தாபித்து விருத்தி செய்வதநூடாக ஊக்குவித்தல்

(ஈ) கர்ப்பகாலத்தில் பெண்களுக்குத் தீங்கு பயப்பதாக நிறுவப்பட்ட வேலைகளில், அவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை வழங்குதல்

3. இவ்வுறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பாதுகாப்புக்குரிய சட்டவாக்கம் காலத்துக்குக் காலம் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவினடிப்படையில் மீளவாராயப்பட்டுத் திருத்தப்படலாம், நீக்கலாம் அன்றேல் அவசியமாயின் விரிவு படுத்தப்படலாம்.

2. இவ்வுறுப்புரையின் பந்தி 1இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அரசுகளாம் கட்சிகள் பெண்களுக்கு, கர்ப்பநிலை, பிரசவம், பிரசவத்திற்குப் பிற்பட்ட காலம் என்பவற்றுடன் தொடர்புபட்ட பொருத்தமான சேவைகள், அவசியமான பொழுது இலவசச் சேவைகளையும் அத்துடன் கர்ப்ப காலத்தின் போதும் பால்சுரக்கும் காலத்திலும் போதுமான போசணையையும் வழங்கி உறுதிப்படுத்தும்.

உறுப்புரை 13

அரசுகளாம் கட்சிகள் சமூக பொருளாதார வாழ்வின் பிற பரப்புகளிலே, பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையம் ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளை, குறிப்பாகப் பின்வருவனவற்றை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் பொருட்டு எடுத்துக் கொள்ளும்.

(அ) குடும்ப நலன்களுக்கான உரிமை

(ஆ) வங்கிக் கடன்களுக்கும் ஈடுகளுக்கும் நிதிக்கடனின் பிறவகைகளுக்குமான உரிமை

(இ) பொழுதுபோக்குச் செயற்பாடுகள், விளையாட்டு, கலாசார வாழ்க்கையின் சகல அம்சங்களும் என்பவற்றில் பங்குபற்றுவதற்கான உரிமை

உறுப்புரை 14

1. அரசுகளாம் கட்சிகள், கிராமியப் பெண்கள் எதிர்நோக்கும் குறிப்பான பிரச்சினைகளையும் பொருளாதாரத்தின் பணமாகச் செலவிடப்படாத துறைகளிலான .அவர்களது பணி உட்பட, தமது குடும்பத்தின் பொருளாதாரப் பிழைப்பில் கிராமியப் பெண்கள் வகிக்கும் குறிப்பிடத்தக்க கடமைக் கூறுகளையும் கருத்திற் கொண்டு, இவ்வினக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகள் கிராமப்புறப் பிரதேசங்களிலுள்ள பெண்களுக்குப் பிரயோகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

2. அரசுகளாம் கட்சிகள் கிராமப்புறப் பிரதேசங்களில் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும், ஆண் பெண் சமத்துவ

படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையில் அவர்கள் கிராமிய அபிவிருத்தியில் பங்குபற்றி அதிலிருந்து நன்மையடைவதை உறுதிப்படுத்துவதற்கான எடுத்துக்கொள்வதுடன் குறிப்பாக, அத்தகைய பெண்களுக்குப் பின்வருவனவற்றுக்கான உரிமையையும் உறுதிசெய்யும்.

(அ) அபிவிருத்தித் திட்டமிடலின் விரிவுபடுத்தலிலும் அமுலாக்கத்திலும் சகல மட்டங்களிலும் பங்குபற்றுதல்

(ஆ) குடும்பத் திட்டமிடலில் தகவல்கள், அறிவுரை வழங்கல், சேவைகள் என்பவை உட்பட போதுமான உடனலக் கவனிப்பு வசதிகளுக்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்

(இ) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து நேரடியாகப் பயனடைதல்

(ஈ) அவர்கள் தமது தொழில்நுட்பத் தேர்ச்சியை விருத்தி செய்வதற்காக தொழிற்பாட்டு எழுத்தறிவுடைமை, அத்துடன் பிறவற்றுள் அனைத்துச் சமுதாய, விரிவாக்கச் சேவைகளினதும் பயன் என்பவற்றுடன் தொடர்புபட்டவை உட்பட, நியமமானதும் நியமமற்றதுமான அனைத்து வகையான பயிற்சியையும் கல்வியையும் பெற்றுக் கொள்ளுதல்

(உ) தொழிலின் அல்லது சுயதொழிலினூடாக பொருளாதார வாய்ப்புகளை சமநிலையில் பெற்றுக் கொள்வதற்காக சுய உதவிக் குழுமங்களையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஒழுங்கமைப்புச் செய்தல்

(ஊ) சமுதாயச் செயற்பாடுகள் அனைத்திலும் பங்குபற்றல்

(எ) விவசாயக் கொடுகடனும் கடன்களும், சந்தைப்படுத்தல் வசதிகள், பொருத்தமான தொழில் நுணுக்கம் என்பவற்றைப் பெறுவதற்கான வாய்ப்பும் காணி, கமநலச் சீர்திருத்தம் அத்துடன் காணி மீள்குடியேற்றத் திட்டங்கள் என்பவற்றின் சமமான நடத்துகையும்

(ஏ) குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரம், மின்சாரம், நீர்வழங்கல், தொடர்பாடல் வசதிகள் என்பவை தொடர்பில் போதுமான வாழ்க்கை நிலைமைகளைத் துய்த்தல்

பகுதி ஐர

உறுப்புரை 15

1. அரசுகளாட் கட்சிகள் பெண்களுக்குச் சட்டத்திற்கு எதிரே ஆண்களுடன் சமத்துவம் வழங்கும்.

2. அரசுகளாம் கட்சிகள் குடியியல் விவகாரங்களில், ஆண்களுக்குள்ளதற்குச் சர்வசமனான ஒரு சட்டத் தகுதியையும் அத்தகுதியைப் பிரயோகிப்பதற்கான அதே வாய்ப்புகளையும் பெண்களுக்கு வழங்கும். குறிப்பாக அவை, பெண்களுக்கு ஒப்பந்தங்களை முடிப்பதற்கும் சொத்துக்களை நிர்வகிப்பதற்கும் சமமான உரிமைகளை வழங்கி நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நடைமுறைகளின் சகல கட்டங்களிலும் அவர்களைச் சமமாக நடத்தும்.

3. அரசுகளாம் கட்சிகள், பெண்களின் சட்டத்தகுதியை மட்டுப்படுத்துவதன்பால் நெறிப்படுத்தப்பட்ட சட்ட விளைவுடன் கூடிய, அனைத்து ஒப்பந்தங்களினதும் அனைத்துப் பிற தனியார் சாதனங்களினதும் எவ்வகையும், வெற்றும் வறிதுமானதாகக் (சட்டப்படி முற்றிலும் செல்லுபடியற்றதாகக்) கருத்தப்படுமென உடன்படுகின்றன.

4. அரசுகளாம் கட்சிகள் ஆட்களின் நகர்வுடனும் அவர்கள் தமது வதிவிடத்தையும் வாழிடத்தையும் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்துடனும் சம்பந்தப்பட்ட சட்டம் தொடர்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே உரிமைகளை வழங்கும்.

படிப்பகம்

www.padippakam.com

உறுப்புரை 16

1. அரசுகளாம் கட்சிகள் விவாகத்துடனும் குடும்பத் தொடர்புகளுடனும் சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களிலும் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் குறிப்பாக ஆண் பெண் சமத்துவ அடிப்படையில் பின்வருவனவற்றை உறுதி செய்யும்.

(அ) திருமணத்தினுட் புகுவதற்கான ஒரே உரிமை

(ஆ) சுதந்திரமாக வாழ்க்கைத் துணையொருவரைத் தெரிவு செய்வதற்கும் தமது சுதந்திரமானதும் முழுமையானதுமான சம்மதத்துடன் மட்டும் திருமணத்தினுட் புகுவதற்குமான ஒரே உரிமை.

(இ) திருமண வாழ்வுக் காலத்திலும் அது கலைக்கப்படும் போதும் ஒரே உரிமைகளும் பொறுப்புக்களும்

(ஈ) அவர்களது திருமணஞ்சார் தகுநிலை எதுவாக இருப்பினும் அவர்களது பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பெற்றோர் எனும் முறையில் ஒரே உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறும்

(உ) தமது பிள்ளைகளின் எண்ணிக்கையையும் பிள்ளைகளுக்கிடையிலான கால இடைவெளியையும் சுயாதீனமாகவும் பொறுப்புடனும் தீர்மானிப்பதற்கும் இவ்வுரிமைகளைப் பிரயோகிப்பதற்கும் அவர்களுக்கு உதவும் தகவல்கள், கல்வி, வழிவகைகள் என்பவற்றை எய்துவதற்கும் ஒரே உரிமைகள்

(ஊ) பிள்ளைகளின் பாதுகாவல், கண்காணிப்பு, நம்பிக்கைப் பொறுப்பாண்மை, மகவேற்பு அல்லது தேசிய சட்டவாக்கத்தில் இவ்வெண்ணக்கருக்கள் நிலவும் ஒத்த நிறுவகங்கள் என்பவை தொடர்பில் ஒரே உரிமைகளும் பொறுப்புகளும், சகல சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலனே முதன்மை பெறும்

(எ) குடும்பப் பெயர், உயர்தொழில், தொழில் என்பவற்றைத் தெரிவு செய்வதற்கான உரிமை உட்பட, கணவனும் மனைவியும் எனம் முறையில் ஆள்சார் ஒரே உரிமைகள்

(ஏ) தம்பதியாகள் இருவருக்கும் சொத்தின் உடைமை, கொள்ளல், முகாமை, நிர்வாகம், துய்த்தல், கட்டணமின்றியோ பெறுமானமுடைய பிரதிபலனுக்கோ முடிவு செய்தல் என்பவை தொடர்பில் ஒரே உரிமைகள்

பிள்ளைப்பருவ விவாக நிச்சயதார்த்தமும் விவாகமும் சட்டப் பயனைக் கொண்டிரா என்பதுடன் விவாகம் செய்வதற்கான இழிந்த வயதைக் குறித்துரைப்பதற்கும் அரசகருமப் பதிவகமொன்றிலே விவாகங்கள் பதிசு செய்யப்படுதலைக் கட்டாயமாக்குவதற்கும் சட்டவாக்கம் உட்பட, அவசியமான நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்படும்.

பகுதி ஏ

உறுப்புரை 17

1. தற்போதை இணக்கவுடன்படிக்கையைச் செயற்படுத்துவதில் எய்தப்படும் முன்னேற்றத்தைக் கருதுவதற்காக பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்கான குழுவொன்று, (இதன் பின்னர் குழுவெனக் குறிப்பிடப்படும்) இணக்க உடன்படிக்கை வலுவிற் புகும் வேளையில், இணக்க உடன்படிக்கையில் அடங்கும் பரப்பில் உயர் ஒழுக்கத் தகுநிலையையும், தகுதியையும் கொண்ட பதினெட்டு நிபுணர்களையும் அது வலுவாக்கம் செய்யப்பட்டதன் பின் அல்லது இணக்க உடன்படிக்கைக்கு முப்பத்தைந்தாவது அரசாம் கட்சி சேர்க்கப்பட்டதன் பின் இருபத்து மூன்று நிபுணர்களையும் கொண்டதாகத் தாபிக்கப்படும் நிபுணர்கள் அரசுகளாம் கட்சிகளால்

படிப்பகம்

www.padippakam.com

அவர்களது தேசிய இனத்தவர்களின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு தமது சொந்த ஆற்றலின் பேரில் சேவையாற்றுவர். தெரிவில் முறைமையான புவியியற் பரம்பலுக்கும் வேறுபட்ட நாகரிக வடிவங்களினதும் அத்துடன் பிரதான சட்ட முறைமைகளினதும் பிரதிநிதித்துவத்திற்கும் மதிப்புக் கொடுக்கப்படும்.

2. குழுவின் உறுப்பினர்கள், அரசுகளாம் கட்சிகளால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர்களின் பட்டியலொன்றிலிருந்து இரகசிய வாக்குச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்படுவர். அரசுகளாம் கட்சி ஒவ்வொன்றும் தனது சொந்தத் தேசிய இனத்தவர்கள் மத்தியிலிருந்து நபரொருவரைப் பெயர் குறித்து நியமிக்க முடியும்.

3. முதலாவது தேர்தல் தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவினுட் புகுந்து தேதிக்கு ஆறுமாதங்களின் பின் நடத்தப்படும். தேர்தல் ஒவ்வொன்றுக்கான தேதிக்கு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்க முன்பேனும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அரசுகளாம் கட்சிகளுக்கு, இரு மாதங்களுக்குள் அவர்களது பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடுவிக்கும் கடிமொன்றை முகவரியிட்டனுப்புவார். செயலாளர் நாயகம் அரசுகளாம் கட்சிகளுக்கு, இவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அனைதது நபர்களினதும் நெடுங்கணக்கு எழுத்தொழுங்கிலமைந்த பெயர்ப்பட்டியலொன்றை அவர்களைப் பெயர் குறித்து நியமித்த அரசுகளால் கட்சிகளைக் குறிப்பிட்டுச் சமர்ப்பிப்பர்.

4. குழுவின் உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் செயலாளர் நாயகத்தினால் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் கூட்டப்படுகின்ற அரசுகளாம் கட்சிகளின் கூட்டமொன்றில் நடத்தப்படும். அரசுகளாம் கட்சிகளின் மூன்றில் இருபங்கு தாழ்வெண்ணிக்கையாக (ஞரழசரஅ) இருக்க வேண்டிய அக் கூட்டத்தில் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் நபர்கள் மிகப் பெருமெண்ணிக்கையான வாக்குகளையும் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கும் அரசுகளாம் கட்சிகளினது பிரதிநதிகளின் பூரண பெரும்பான்மை வாக்குகளையும் பெற்று நியமிக்கப்படுபவர்களாவர்.

5. குழுவின் உறுப்பினர்கள் நான்கு ஆண்டுக் காலத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். எனினும், முதலாவது தேர்தலின் போது தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களில் ஒன்பது பேரின் கால எல்லை இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவடையும். முதலாவது தேர்தலில் உடன் பின்னதாக அந்த ஒன்பது உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

6. குழுவின் மேலதிக ஐந்து உறுப்பினர்களின் தேர்தல் இந்த உறுப்புரையின் 2 ஆம், 3ஆம், 4-ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய முப்பத்தைந்தாவது வலுவாக்கத்தினை (முறையேற்பினை) அன்றேல் அரசின் சேர்வினைத் தொடர்ந்து நடத்தப்படும். இச் சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட மேலதிக உறுப்பினர்களுள் இருவரின் கால எல்லை இரு ஆண்டுகளின் இறுதியில் முடிவுறும். இந்த இரு உறுப்பினர்களினதும் பெயர்கள் குழுவின் தவிசாளரினால் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்டவையாகும்.

7. அமய வெற்றிடங்களை நிரப்புவதற்கு குழுவின் உறுப்பினராகத் தொழிற்படுதல் முடிவுற்று நிபுணரின் அரசாங்க கட்சி தனது தேசிய இனத்தவர்களுள் இன்னுமொரு நிபுணரைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட நியமிக்க முடியும்.

8. குழுவின் உறுப்பினர்கள், பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் குழுவினது பொறுப்புகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு சபை தீர்மானிக்கும் அந் நியதிகள், நிபந்தனைகள் மீது ஐக்கிய நாடுகளின் வளங்களிலிருந்து வரும்படிகளைப் பெற்றக் கொள்வர்.

படிப்பகம்

www.padippakam.com

9. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் குழுவின் தொழிற்பாடுகள் பயனுறுதி வாய்ந்த முறையில் நிறைவேற்றப்படுவதற்கு அவசியமான பணியாளர்களையும் வசதிகளையும் வழங்கும் ஏற்பாட்டினைச் செய்வர்.

உறுப்புரை 18

1. அரசுகளாம் கட்சிகள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம், குழுவினால் ஆழ்ந்தாரயப்படுவதற்கென, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தாம் மேற்கொண்டுள்ள சட்டவாக்க, நீதிமுறை, நிர்வாக அல்லது பிற நடவடிக்கைகள் பற்றியதும் இது தொடர்பில் எய்தப்பட்ட முன்னெற்றத்தைப் பற்றியதுமான அறிக்கையொன்றினைப் பின்வரும் கால எல்லைகளில் சமர்ப்பிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளலாம்.

(அ) சம்பந்தப்பட்ட அரசுக்கு, வலுவினுட் புகுந்து ஓராண்டுக் காலத்தினுள்

(ஆ) அதன் பின்னர் குறைந்த பட்சம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மேலும் குழு வேண்டிக் கொள்ளும் அவ்வப்பொழுதுகளிலும்.

அறிக்கைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையின் கீழ் கடப்பாடுகளின் நிறைவேற்றத்தினளவைப் பாதிக்கும் காரணிகளையும் இடர்ப்பாடுகளையும் எடுத்துக்காட்ட முடியும்.

உறுப்புரை 19

1. குழு தனது சொந்த நடைமுறை விதிகளைக் கைக்கொள்ள முடியும்.

2. குழு தனது உத்தியோகத்தர்களை ஈராண்டுக் காலத்திற்குத் தெரிவு செய்யும்.

உறுப்புரை 20

1. குழு ஒவ்வோராண்டும் இயல்பாக இரு வாரங்களுக்கு மேற்படாத காலத்திற்கு, தற்போதைய இணக்க உடன்படிக்கையின் 18ஆம் உறுப்புரைக்கமையச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஆழ்ந்தவராயும் பொருட்டுக் கூட முடியும்.

2. குழுவின் கூட்டங்கள் இயல்பாக ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் அன்றேல் குழுவினால் தீர்மானிக்கப்படும் வசதியான பிறிதோரிடத்தில் நடத்தப்படலாம்.

உறுப்புரை 21

1. குழு, பொருளாதார சமூக கழகத்தினூடாக ஒவ்வோராண்டும் தனது செயற்பாடுகள் பற்றி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு அறிக்கை செய்வதுடன் அரசுகளாம் கட்சிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளினதும் தகவல்களினதும் பரிசீலனையின் அடிப்படையில் பிரேரணைகளையும் பொதுவான விதப்புரைகளையும் வழங்க முடியும். அத்தகைய பிரேரணைகளும் பொதுவான விதப்புரைகளையும் வழங்க முடியும் அத்தகைய பிரேரணைகளும் பொதுவான விதப்புரைகளும் அரசுகளாம் கட்சிகளிடமிருந்தான கருத்துரைகள் எவையேனும் இருப்பின், அவற்றுடன் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

2. செயலாளர் நாயகம் குழுவின் அறிக்கைகள், பெண்களின் நிலைசார் ஆணைக்குழுவிற்கு தகவலறிவிப்பின் பொருட்டு அனுப்பி வைப்பர்.

உறுப்புரை 22

சிறப்பு முகவராண்மைகள், தற்போதைய இணக்க உடன்படிக்கையினது ஏற்பாடுகளின் செயல் நிறைவேற்றம் பற்றிய ஆய்வில் தமது செயற்பாடுகளின் விரிவினுள் அடங்குபவை தொடர்பில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு உரித்துடையவையாகும். குழு, இணக்க உடன்படிக்கையின் செயல்

படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்றம் தொடர்பில் சிறப்பு முகவராண்மைகளிடம் அவற்றினது செயற்பாடுகளின் விரிவினுள் இடம்பெறும் பரப்புகளில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி அழைப்புவிடுக்க முடியும்.

பகுதி ஏஐ

உறுப்புரை 23

இவ்விணக்க உடன்படிக்கையிலுள்ள எதுவும், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான சமத்துவத்தை அடைவதற்குக் கூடுதலாக உதவக் கூடிய பின்வருவனவற்றிலான ஏற்பாடுகள் எவற்றையும் பாதிக்க மாட்டாது.

(அ) அரசாங்க கட்சியொன்றின் உருவாக்கம்

(ஆ) அவ்வரசுக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் இணக்க உடன்படிக்கை, பொருத்தனை அல்லது உடன்பாடு

உறுப்புரை 24

அரசுகளாம் கட்சிகள் தற்போதைய இணக்க உடன்படிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் முழுமையான நிறைவேற்றத்தை அடைவதை நோக்கமாகக் கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேச மட்டத்தில் எடுத்துக் கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றன.

உறுப்புரை 25

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் கையொப்பமிடுவதற்குத் திறந்து விடப்படும்.

2. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தற்போதைய இணக்க உடன்படிக்கையாம் வைப்பின் காப்பாளராகப் பதவிப்பெயர் அளிக்கப்பட்டுள்ளார்.

3. தற்போதைய இணக்க உடன்படிக்கை வலுவாக்கம் செய்யப்படுவதற்கு (முறையேற்புக்கு) உட்பட்டதாகும். வலுவாக்கம் செய்தற் சாதனங்கள் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்யப்படும்.

4. தற்போதைய இணக்க உடன்படிக்கை அனைத்து அரசுகளும் சேர்ந்து கொள்வதற்குத் திறந்து விடப்படும். சேர்தலானது சேர்தற் சாதனமொன்றை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்வதன் மூலம் நிறைவேற்றப்படும்.

உறுப்புரை 26

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிட்ட எழுத்திலான ஓர் அறிவிப்பின் மூலம் எந்த வேளையிலும், எந்த ஓர் அரசாங்க கட்சியினாலும் தற்போதைய இணக்க உடன்படிக்கையின் மீளாய்விற்கான ஒரு வேண்டுகோள் விடுக்கப்படலாம்.

2. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, அத்தகைய ஒரு வேண்டுகோள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின், அவைபற்றித் தீர்மானிக்கும்.

உறுப்புரை 27

1. தற்போதைய இணக்க உடன்படிக்கை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட திகதியின் பின்னர் முப்பதாம் நாளன்று வலுவிற் புகும்.

படிப்பகம்

2. இருபதாவது வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்டதன் பின், தற்போதைய இணக்க உடன்படிக்கையை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற்சேரும் ஒவ்வொரு அரசுக்கும் இவ்விணக்க உடன்படிக்கை அதன் சொந்த வலுவாக்க அல்லது சேர்தற் சாதனம் வைப்புச் செய்யப்பட்ட திகதியின் பின்னர் முப்பதானம் நாளன்று வலுவிற் புகும்.

உறுப்புரை 28

1. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம், வலுவாக்கம் செய்யும் அல்லது சேரும் வேளையில் அரசுகளினால் செய்யப்படும் காப்பொதுக்கல்களின் (சுநளநசஎயவழைளெ) உரை மூலத்தைப் பெற்று அனைத்து நாடுகளுக்கும் அதனை அறிவிப்பார்.

2. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் குறிக்கோளுடன் அல்லது நோக்கத்துடன் ஒவ்வாத காப்பொதுக்கலொன்று அனுமதிக்கப்படமாட்டாது.

3. காப்பொதுக்கல்கள் எந்த வேளையிலும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்ட, நீக்க விளைவினைக் கொண்ட அறிவிப்பின் மூலம் மீள அகற்றப்படலாம். செயலாளர் நாயகம் அதுபற்றி அனைத்து நாடுகளுக்கும் அறிவிப்பார். அத்தகைய அறிவிப்பு, அது கிடைக்கப்பெற்ற திகதியன்று செல்லுபடியாகும் தன்மைபெறும்.

உறுப்புரை 29

1. தற்போதைய இணக்க உடன்படிக்கையின் பொருள்கோடல் அல்லது பிரயோகம் தொடர்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளாம் கட்சிகளுக்கிடையில் தோன்றி, இணக்கப் பேச்சின் மூலம் தீர்க்கப்படாத பிணக்கு எதுவும், அவர்களுள் ஒருவரின் வேண்டுகோளின் பேரில் நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படலாம். நடுத்தீர்ப்புக்கான வேண்டுகோள் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கட்சிகள் நடுத்தீர்ப்புக்கான நிறுவகம் பற்றி இணங்க முடியாதிருப்பின் அக்கட்சிகளுள் ஏதேனமொன்று நீதிமன்ற நியதிச்சட்டத்திற்கு இணங்க, வேண்டுகோளின் மூலம் சர்வதேச நீதிமன்றத்திற்குப் பிணக்கினைமாட்டெறிய முடியும்.

2. இவ்விணக்க உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடும் அல்லது அதனை வலுவாக்கம் செய்யும் அல்லது அதிற் சேரும் வேளையில் அரசாங்க கட்சி ஒப்வொன்றும் இவ்வுறுப்புரையின் பந்தி 1இல் தான் கட்டுப்படுத்தப்படுவதாகக் கருதவில்லை எனப் பிரகடனம் செய்ய முடியும். அத்தகைய காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள அரசாங்க கட்சி தொடர்பில், ஏனைய அரசுகளாம் கட்சிகள் அப் பந்தியினால் கட்டுப்படுத்தப்பட்டவையாகா.

3. இவ்வுறுப்புரையின் 2ஆம் பந்திக்கமையக் காப்பொதுக்கலொன்றைச் செய்துள்ள எந்த அரசாங்க கட்சியும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு விடுவிக்கும் அறிவிப்பு ஒன்றின் மூலம் அக்காப்பொதுக்கலை எந்த வேலையிலும் மீள அகற்ற முடியும்.

உறுப்புரை 30

அதிகாரபூர்வ நிலையில் சமனான சீன, ஆங்கில, பிரான்சிய, ருஷ்ய, ஸ்பானிய உரைமூலங்களைக் கொண்ட இவ்விணக்க உடன்படிக்கை, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் வசம் வைப்புச் செய்யப்படும்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

PAFFREL

නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.

PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

•Postal Address - PAFFREL, 93/10, Dutugemunu Street, Colombo 06, Sri Lanka.
•Tel - 094-1-824425, 094-1-818675, 094-1-828544, 094-1-829013 •Fax - 094-1-828597, 094-1-818675
•E-Mail - paffrel@sltnet.lk •Web Site:- http://www.lankaworld.com/paffrel

படிப்பகம்

www.padippakam.com

❝ கொடூரமான நிர்வாகத்திற்கும் அடக்கு முறைக்கும் எதிராக மக்கள் எழுச்சியை தவிர்க்க வேண்டுமாயின் நீதிமயமான நிர்வாகத்தின் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் ❞

- மனித உரிமைகள் பற்றிய

அநுசரணை: சுவீடன் சீடா

படிப்பகம்